www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

MR.

பக்கம் 20 ரூபா 11/00

மே.26–ஜூன்.01,1996

දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 154



## தமிழ்நாட்டில் புலிகள் மீண்டும் தளம்?

## கருணாநிதியின் இலக்கியக் கணைகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்





இவ்வார விருந்து

## கலங்குகிறார் கவுதமி

கவலைப்படலாமா

கர்ப்பிணிகள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நல்ல தருணம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தமிழ் நாட்டில்
செல்விக்கு விழுந்திருப்பது
நெத்தியடி!

இந்தியாவில் நடைபெற்ற தேர்தலில்
தமிழக வாக்காளர்கள்
தடுமாற்றமே இல்லாதளவுக்கு
தெளிவான தீர்ப்பை
தெரிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது!

தவறு செய்தால்
தண்டிக்கப்படுவோம் என்னும்
பயமில்லாது போனால்
அரசியல்வாதிகள்
அசுரர்களாகிவிடுவார்கள்!

தமிழக மக்கள் புகட்டிய பாடம்
அரசியல்வாதிகள் அனைவராலும்
கற்றுக்கொள்ளப்பட வேண்டியதே!

❑❑

இந்தியா-குறிப்பாக தமிழக
ஆட்சி மாற்றங்கள்
நம் இனப்பிரச்சனையில்
தாக்கங்களை உருவாக்குமா?
தகுந்த தீர்வுக்கு வழி கோலுமா?
பொதுவாகவும்-பரவலாகவும்
எழுந்துள்ள கேள்வி அதுதான்!

தமிழகம் நம்மீது காட்டிய
பரிவையும்-பாசத்தையும்
தகுந்தபடி பத்திரப்படுத்துவதில்
தவறிழைத்தது நம்மவர்கள்தான்!

இப்போது-
கனடாவுக்கும்
கண்காணா தூரத்தில் உள்ள
நாடுகளுக்கும்
மத்தியஸ்தம் செய்ய வருமாறு
மனுப்போட்டுக் கொண்டிருக்கிறோம்!

பேசும் மொழியால், பண்பாட்டால்
உணர்வுரீதியாக
நம்மோடு பிணைந்திருப்பது
தமிழகம்; தமிழக மக்கள்!

நமக்கொரு துன்பம் என்றால்
'தானாடாவிட்டாலும்
தன் தசையாடும்' உறவு அது!
தாயின் பரிவுள்ள உறவு!

'83ல் இனக்கலவரத் தீ!
-வெந்தோம்;
வேதனையில் வீழ்ந்தோம்!

கனடாவும் கவனிக்கவில்லை;
அவுஸ்திரேலியாவும் ஆறுதல் சொல்லில்லை.

தமிழகம் தணலாய்த் தகித்தது.
மத்திய அரசை
தட்டிக்கேட்கத் தூண்டியது!
கோடி கோடி மக்கள்
கொடுத்த குரல்தானே
வெந்த நெஞ்சகளுக்கு
ஓரளவேனும் ஆறுதலாயிற்று!

எப்போதும்
நாம் ஒன்றை மறக்கக்கூடாது!
தமிழக மக்களுக்கு
நம் மேல் இல்லாத அக்கறை,
வேறு எந்த நாட்டவருக்கும்
எழவே முடியாது!

அந்த உறவை
முற்றாக இழக்கவில்லையானாலும்
இடைக்கிடையே
முகம் சுளிக்க வைத்துவிட்டோம்!

நேச உறவு மாறாத போதும்,
இடையிலே
சின்னதாய் ஒரு விரிசல்
ஏற்பட்டிருப்பது மெய்!

இதற்கெல்லாம் யார் காரணம்
என்று ஆராய்ந்து
பட்டிமன்றம் நடத்தத் தேவையில்லை!

இனிமேலாவது-
கடந்தகாலத் தவறுகள்
தலைதூக்காதவாறு பார்த்துக்கொண்டு,
தமிழக உறவை
கட்டிவளர்ப்பதும்
கெட்டிப்படுத்துவதுமே தேவை!

தமிழ் கட்சிகள்
புதிய ஆட்சியை வாழ்த்தியுள்ளன.
கலைஞரும் சூட்டோடு சூடாக
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
உதவுதல் பற்றி பேசியுள்ளார்.

இதுதான் நல்ல தருணம்!
தமிழக மக்களின்
ஆதரவையும், அன்பையும்
பெறுகின்ற வகையில்
தமிழ் கட்சிகளின்
அணுகுமுறைகள் அமையட்டும்!

இனப்பிரச்சனை தீர்வுக்கு
தமிழகமும், இந்திய அரசும்
முன்பு போல முன்வந்து உதவும் வகையில்
நம்மவர்கள் நடந்து கொள்ள வேண்டும்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

# ஆன்மீகம்



## நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்

தீங்கு நிறைந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கூட இருந்தே குழி பறிக்கும் பொல்லாங்கானவர்களுடன் வாசம் பண்ணுகிறோம். இங்கொன்றும் அங்கொன்றும் பேசும் மனிதர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மனிதர்கள் எமக்கிழைக்கும் தீங்குகளை நினைத்து சோர்ந்து போகின்றோம்... வஞ்சக உலகில் வாழ்வதைவிட வாழ்வு முடிந்து விட்டால் நலமாயிருக்கும் என்று எண்ணுகிறோம். எமக்கு ஏற்பட்ட தீங்குகளை மற்றவர்களிடம் சொல்லி வேதனைப்படுகின்றோம். ஆனால் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லாமல் விட்டு விடுகின்றோம். அவர் கூறியுள்ளதை மறந்து விடுகிறோம். அவர் யார்? அவர் என்ன கூறியுள்ளார்?.

"நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" என எரேமியா 18:6 சொல்கின்றது.

"உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கை போடுவதில்லை" அப். 18:10 கூறுகிறது.

ஆம்! இறைவனின் கையிலுள்ள நாம் தீங்குகளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. எம்மேல் கை வைக்காதபடி அவர் எம்மை காத்துக் கொள்வார். அவரில் நம்பிக்கை வைப்போம்.

ஜே.புளோரன்ஸ், அம்பக்கோட்டை., கெங்கல்ல.

## அலி(ரலி)யின் அறிவுத் திறன்

ஒரு நாள் ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் மஃரிப் தொழுகைக்காகத் தம்மைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் ஓர் நாஸ்திதன் (இறைவன் இல்லை என்பவன்) அலி(ரலி) அவர்களிடம் வந்து பின்வருமாறு கேட்டான்: "உயிரினங்களில் எவையெவை முட்டையிடுகின்றன? எவையெல்லாம் குட்டி போடுகின்றன?" என்று

அந்த நயவஞ்சக நாஸ்திகனின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட அலி(ரலி) அவர்கள், உடனே "எந்த உயிரினங்களின் காதுகள் உள்ளே இருக்கின்றனவோ அவை முட்டையிடுகின்றன. எவற்றின் காது வெளியே தெரிகின்றதோ அவை குட்டி போடுகின்றன", என்று மிகச் சுலபமாக சுருக்கமாக விடையளித்துவிட்டு மஃரிப் தொழுகைக்கு சென்று விட்டார்கள்.

அலி(ரலி)யின் அறிவுத் திறனைக் கண்டு நாவடைத்த நாஸ்திகன் அல்லாஹ் ஒருவன் உண்டென உணர்ந்து கொண்டதோடு அவன் சக்தியே இதுவென்றும் புரிந்து கொண்டான்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல. 151

## பரிசுக்குரிய கவிதை

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

### போதுமா?

இந்த அடி போதுமா?
இன்னும் கொஞ்சம் வேணுமா-?
ஊழல் படை வீழ்ந்தது
உறுதிப்படை ஜெயித்தது!

என். புவனேஸ்வரன்- ஹேக்கித்த- வத்தளை.

### ஸ்டைல்

சினிமாவில்
முடி ஸ்டைல்
அரசியலில்,
மொட்டை
ஸ்டைல்!

எஸ்.எம்.எஸ்.பைறோஸ்-
சாய்ந்தமருது-11.



### வெள்ளையுள்ளம்

உன் நிறம் கறுப்பு
உன் உடை கறுப்பு
உன் உள்ளம் மட்டும்
வெள்ளை!
உறுதி மட்டும் போதுமா
தோழனே?
இந்த உலகத்தில்
நடிக்கத் தெரியாத நடிகன் நீ...!

உருத்திரன்- கொழும்பு-06

### சூப்பர் ஸ்டார்.

சட்டத்திற்கு பாண்டியன்!
ஆட்சிக்கு எஜமான்!
முயற்சிக்கு அண்ணாமலை!
ஏழைக்கு உழைப்பாளி!
சேவைக்கு முத்து!
தட்டிக் கேட்க பாட்ஷா!
புத்தி புகட்ட மன்னன்!


லிங்கராஜா கிரிசாந்தி- மட்டக்களப்பு.

### கொடுத்தேன்....., கொடுப்பேன்

"அமெரிக்கா போய்-தலை
முடியை கொடுத்தேன்;
"ஜெ"யாவுக்கோ- தலை
இடியைக் கொடுத்தேன்;
தமிழ் நாட்டுக்கோ-நிலையான
விடிவைக் கொடுப்பேன!"

பாலகமலன்- வவுனியூர்.

# கவிதைப் போட்டி இல-154



கவனியுங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.06.1996.**

-முகவரி-
கவிதைப் போட்டி இல.154,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

### என்ன பயன்......?

வாங்கிக் கொடுத்த சுதந்திரத்தை
வணங்காமல் கோட்டை விட்டு-இன்று
ஓங்குமுன் னொரு கரத்தாலே
ஒலியை எழுப்பி என்ன பயன்?

ச.மகாலிங்கம், வெலிமடை குரூப்- வெலிமடை.

### உறுதி பெறட்டும்!

சொன்னதை செய்யும்!
சுந்தரத் தலைவனே!
வாக்கினை உமக்கு!
வாரித் தருகின்றோம்!
ஓங்கிய உன் கைப்பலம்!
உறுதியாய் இருக்கட்டும்!

ஹப்புத்தளையூர்- மனோ.

### மலருமோ நேசம்?

நீர்த்துளி சிந்துகின்ற
நிலமகளின் தேசம்;
நீ கேட்கும் வாக்காலே
மலருமோ நேசம்?

தெ. லோஜனா- கொழும்பு-15.

### என் கட்சி

ஆட்டிவைக்கும்
ஆளும் கட்சி;
அடக்கி வைக்கும்
எந்தன் கட்சி!

செல்வி. லக்சுமிதேவி-
ஆரையம்பதி-02.

### மோதலாம்

நெஞ்சில்-
நேர்மை உண்டு
பின்னால்-
படையே உண்டு
வா மோதலாம்!

எம். அஹமட் -முதூர்.

### வெற்றி

பாரு பாரு
ரஜினி பாரு!
அம்மா போகும்
போக்கைப் பாரு!
'வெற்றி' நமதே
வந்து சேரு!

ஆர். ராஜேந்திரன்-
பண்டாரவளை.

### நாயகன்

வெற்றியின் நாயகன்
இவன்.....!
வித்தியாசமானவன்
என்றும்
ஆன்மீக மாணவன்!

எஸ். திருச்செல்வம்,
நீர்கொழும்பு.

### அரசியல் அதிரடி

வெற்றி நிச்சயம்- இந்த
தேர்தல் சத்தியம்
'கருணா' வெல்வதே-நான்
கொண்ட இலட்சியம்!

எம்.டி.எம்.சைலாஸ்-
கம்மல்துறை.

### நிச்சயம்

வெற்றி நிச்சயம்!
தர்மம் வெல்வதே
தமிழகத்தின் இலட்சியம்!
நான் தோள்கொடுப்பது
சர்வ நிச்சயம்!

எம். மாஹிர்-புத்தளம்.

### பணமா(!) வாழ்க்கை

கோடி கோடியாய்
பணமிருந்தும் -நிம்மதி
தேடி அலையும்
"மனிதன்" இவன்!

சுபா வரன்-கண்டி.

### நன்றி

ரஜினி வந்தார் பவனி.
அம்மா துறந்தார் பதவி!
தரணி போற்றும் வெற்றி
ரஜினிக்கு சொல்வோம் நன்றி!

செல்வி. சரோஜினி மார்க்கண்டு-
வவுனியா.

### குறி

கோட்டை ராணிக்கு
ஜனநாயக வேட்டு!
குறியும் தவறாது
கோட்டை ராணியின்
முடியும் தப்பாது!

எஸ். வேல் வேந்தன்-
மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

ஐயா கந்த சாமியாரே!

உமக்குத் காதில பூவா அல்லது மற்றவர்களுக்கு காதில் பூவைக்கின்றீரா? 'அமோக வாக்கு வசூல்-தமிழகம் எங்கும் தி.மு.க.கூட்டணி' என்ற தங்களின் விளம்பரம் பலே ஜோர்!

எட்வேட் அந்தனி, பிரான்சினாமள் அந்தனி, றோபின்சன் அந்தனி, டொரத்தி அஞ்ஜலின், றோசரி அஞ்ஜலின், மார்கஸ் அந்தனி-பொகவந்தலாவ.

எங்களது இனிய முரசே!

மறைந்த மர்மக்கதை மன்னன் ராஜேந்திரக்குமாரின் நீ..நீயா? திகில் தொடர் சூப்பர். அதுமட்டுமல்ல முரசே! காதில பூ கந்தசாமியின் கற்பனை சிரிக்கமட்டுமா? சிந்திக்கவும் வைக்கின்றது. இராமாயணம் எம்போன்றவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இவைகளை விட சினிவிசிட் சூடாகிக் கொண்டே போகின்றது. மொத்தத்தல் நீ எங்களது அன்பும் அபிமானமும் கொண்ட இனிய வாரமலர். அதுவே தினமுரசு வாரமலர்! வளர்க முரசே வளம் பெருக.

மயில்வாகனம்-தியாகேஸ்வரி,எம்.பங்கேஸ்வரி,
எம்.மங்கேஸ்-மட்/முறக்கொட்டாஞ்சேனை.

கார்லோஸிற்கு ஒரு வேண்டுகோள்: உன் கில்லாடித்தனத்தையும் மிஞ்சி, அனைவருக்கும் அறிமுகமாகியும் மறைமுகமாக இருக்கும் ரசிகனை நீ கண்டு பிடித்துத்தர வேண்டும்! இல்லாவிடின் கன்னி இல்லா காட்டுக்கு அனுப்பி விடுவோம்!

எம்.எம்.ஸன்பர், காமிலா, ப்ரியநேசி-
கிண்ணியா-06.

காதிலை பூ கந்தசாமி நன்றாகப் பூவைக்கிறார். நாரதரின் ரிப்போர்ட் தீர்க்கதரிசனமானதாய் உள்ளது. அத்தோடு நகைச் சுவையும் கலக்கிறார். மனித வெடிகுண்டை இயக்கும் கார்லோஸைப் பாராட்டவா? அதை வழங்கும் ரசிகனைப் பாராட்ட வா? என்று தெரியாமல் தவிக்கிறோம். புதிதாக ஸ்போட்ஸ் பகுதியை சேர்ந்தது பாராட்டுக்குரியது. மேலும் பல்சுவை அம்சங்களுடன் வர வாழ்த்துக்கள்.

ஸ.மு.கடாபி-ஹொறவபொதானை.

தித்திக்கும் என் இனிய முரசே! இளமை துள்ளும் இனிய நடையில் ரசிகன் தரும் இலக்கிய நயம் தூள் பண்ணுகிறது. நாரதர் கவனம். நான் நூறு தடவ சொல்லுறத ஒரு தடவைதான் சொல்வன். வாழ்க உன் பணி வளர்க உன் சேவை.

என்.ரீ.அமீனுதீன்-அக்கரைப்பற்று-06

"தேன் கிண்ண"த்தில் சுபா வரன் எழுதியிருந்த "காட்சி" யெனும் கவிதை, என்னை கைத்தட்ட வைத்து விட்டது. புதுவித மாகக் கவிதையைக் கடத்திச் சென்று, இறுதியில் ஒரு போடு போட்டிருந்தார். பாராட்டுக்கள் - வாழ்த்துக்கள்.

கொக்காகல-எஸ் பிரபா.

ராஜேந்திரகுமாரின் 'நீ நீயா' விறுவிறுப்பின் உச்சம். வாசகர்களின் ஆவலைத்தாண்டிக் கொண்டே செல்கிறார் 'நே' ராஜேந்திரகுமார்.

ஜெ.கிருபாகரன்-
துறைநீலாவணை.



எனதுயிர் முரசே!

கலைஞர்.மு.கருணாநிதி அவர்கள் தான் எழுதிய 'சிறையில் பூத்த சின்ன சின்ன மலர்கள்' எனும் புத்தகத்தில், "மக்சீம் கார்க்கி எழுதிய 'தாய்' எனும் நூலை மூன்றாவது முறையாகப் படித்தேன். அதில் வரும் பாவேலுடன் அந்தத் தாய் எந்த அளவுக்கு உணர்ச்சிகளில் பங்கு கொண்டு, அந்த மகனின் பொது வாழ்வுப் பணி கண்டு பூரிக்கிறாள் என்பதை எண்ணி, எண்ணி மகிழ்ந்தேன். அந்தத் தாய் போலத்தானே என் தாயும் இருந்தார்கள் என நினைத்தேன். அழுது விட்டேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அவ்வளவு புகழ் மிக்க, சிறந்த, நாவலை தொடர்கதையாகத் தரும் எனது ஆருயிர் முரசுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். ரிஷான் ஷெரீப்-
மாவனல்லை.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- ★ செல்வி- உதயா தியாகராஜ், மிராஹவத்தை.
- ★ எம்.பர்ஸான், உருகொட.
- ★ அன்சீர் ஏ.மஜீட், கல்கமுவ.
- ★ சகிகலா துரைநாயகம், சாம்பல்தீவு.
- ★ செல்வி. எஸ்.யுவராணி, பிட்டகந்த.
- ★ ஜே.எம்.கியாஸ், கிண்ணியா-04.
- ★ சா.மோகேஸ்வரி, கந்தளாய்.
- ★ நிஸாயா பாயிஸ், அளவத்துகொட.
- ★ கி.புஷ்பராஜ், இறக்குவானை.
- ★ செ.பஸ்தியன், உக்குவலை.
- ★ என்.பாத்திமா, கொழும்பு-14.
- ★ பி.தமிழ்வாணன், பண்டாரவளை.
- ★ பி.எம்.முஹம்மது அனீஸ், கொழும்பு-12.
- ★ எம்.எஃப்.சாமிலா பாரூக், உலப்பனை.
- ★ நா.ஜெயகணேசன், பொகவந்தலாவ.
- ★ அ.வேல்முத்து, உடப்பு.

என் அன்பு மிருந்த தினமுரசே!

இராமாயணத் தொடரில் நாம் அறிந்திராத சில விடயங்களை எமக்கு அள்ளி வழங்கும் முரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவர்ணலதா-திருகோணமலை.

தமிழக தேர்தல் விடயத்திலும் 'முரசு' சொன்னவற்றில் 95 வீதமானவை பலித்து விட்டதே! ஜெயலலிதா தனது தொகுதியில் வெற்றி பெறுவார் என்பது மட்டும் தவறிவிட்டது. திருநாவுக்கரசு தோல்வி காண்பார் என்று தமிழக பத்திரிகைகள்கூட சொல்லியிருந்தும், முரசு அவர் வெல்லுவது உறுதி என்றது. பலித்துவிட்டது.

சோ. ஆசீர்வாதம்-மாத்தளை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக முதல்வரின் ஆதரவைப் பெறத் திட்டம்

# வெளிநாட்டுத் தமிழர் அமைப்புகள் முயற்சி

**இலண்டனிலுள்ள புலிகள் இயக்கத்தின் சர்வதேச தலைமையகப் பொறுப்பாளர் அன்டன் ராஜா தமிழக முதல்வர் கருணாநிதியை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்க விரும்பினார். எனினும் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. வெளிநாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் தமிழக முதல்வரிடம் புலிகள் தொடர்பான அனுசரணையான போக்கை உருவாக்க முயற்சி செய்து வருகின்றன.**

### புலிகளின் விருப்பம்

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால் முதலமைச்சர் கருணாநிதியுடன் நல்லுறவை ஏற்படுத்த புலிகள் விரும்பியிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக தமிழக முதல்வர் தெரிவித்த கருத்துக்களை புலிகளது சர்வதேச பிரசார சாதனங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

அமெரிக்கா, இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புகளும் தமிழக முதல்வரின் அனுதாபத்தையும், ஈடுபாட்டையும் இலங்கைத் தமிழர் விடயத்தில் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.

அந்த அமைப்புகளில் சில முதல்வர் கருணாநிதிக்கும், புலிகளுக்கும் இடையில் மீண்டும் ஒரு நல்லுறவை எற்படுத்தவும் விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

தற்போதைய நிலையில் தமிழக முதல்வரோடு நேரடியாக புலிகள் தொடர்பு கொள்ள முற்பட்டால் சில தடைகள் எழக்கூடும். கலைஞர் கருணாநிதிக்கும் புலிகளோடு பேசுவதில் அரசியல் சிக்கல்கள் இருக்கலாம்.

அதனால் பொதுவான தமிழர் அமைப்புகள் மூலமாக நல்லுறவான நிலையை ஏற்படுத்துவதையே புலிகளும் விரும்பக்கூடும் என்று தெரிகிறது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு தமிழக முதல்வர் இந்திய மத்திய அரசுமூலம் அழுத்தம் கொடுக்க வேண்டும். உடனடியாக தமிழக முதல்வரிடமிருந்து அவ்வாறான ஒரு முயற்சியைத்தான் புலிகள் எதிர்பார்க் கிறார்கள்.

இந்திய மத்திய ஆட்சியில் ஸ்திரமற்ற நிலை தீரும்வரைக்கும் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக மத்திய அரசின் கவனம் திரும்பமாட்டாது.

### புலிகளின் நகர்வு

இதற்கிடையே வடக்கில் புலிகளது அணிகள் சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளன.

மன்னார் பகுதியிலும் புலிகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன.

புலிகளின் துணைத்தளபதி பால்ராஜ், மூத்த தளபதி சொர்ணம் ஆகியோர் வன்னிப் பகுதியில் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்-குடாநாட்டில் ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்யும் வகையிலும், உறுப்பினர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தவும் புதிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதியில் எங்காவது ஒரு முனையில் புலிகள் தாக்கக்கூடும் என்று படையினரும் எதிர்பார்த்திருப்பதாகவே தெரிகிறது.

வடமராட்சியில் பலத்த எதிர்ப்பை தெரிவிக்காமல் புலிகள் பின்வாங்கிச் சென்றனர்.

வலிகாமம் பகுதியில் புலிகள் தெரிவித்த எதிர்ப்பில் ஒரு வீதம் கூட வடமராட்சியில் காட்டப்படவில்லை.

தமது கோரிக்கையை எற்று வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்து செல்ல மறுத்தமையால் புலிகள் அவ்வாறு நடந்து கொண்டனரா? அல்லது வேறு ஒரு தாக்குதலுக்கான ஒத்திகையில் புலிகளது அணிகள் வேறு பகுதிக்கு அழைக்கப்பட்டுள்ளனவா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

### தமிழ் அமைப்புகள் முயற்சி

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை சந்திப்பதற்கு ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய ஐந்து தமிழ் கட்சிகள் முடிவு செய்துள்ளன. சந்திப்புக்கான அனுமதி கோரும் கடிதம் 22.05.96 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

"இலங்கை இனப்பிரச்சனையில் நியாயமான தீர்வொன்றைக் காண்பதில் தனது அக்கறையை தமிழக முதல்வர் வெளிப்படுத்தியிருக்கிறார். அவரோடு நமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதே சந்திப்பிற்கான நோக்கம்" என்று தமிழ் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த பல வருடங்களின் பின்னர் இம்முறைதான் தமிழக அரசியல் மாற்றங்கள் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள இலங்கைத் தமிழ் மக்களின் கவனத்திற்கும், எதிர்பார்ப்புக்கும் உள்ளாகியுள்ளன.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல், யாழ் குடாநாட்டில் புலிகளின் பின்னடைவு என்பவற்றை அடுத்து வடக்கு-கிழக்கு மக்கள் தமிழகத்தின் ஆதரவை நாடியிருக்கின்றனர் என்று இந்திய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின் உத்தரவை மீறிய தொண்டமான்

## கொழும்பு ஆங்கில பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல்

அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமையில் இயங்கும் கால்நடை அபிவிருத்தி, கிராமியக் கைத் தொழில் அமைச்சு, அவ்வமைச்சின் கீழ் இயங்கும் அரச நிறுவனம் ஒன்றின் உயர்தர அதிகாரியான அதன் தலைவரை, ஜனாதிபதியின் ஆணையை உதாசீனம் செய்து விட்டு மீண்டும் பணியில் அமர்த்தியுள்ளது.

ஸ்ரீ லங்கா கைவினைப் பொருட்கள் சபையின் தலைவரான அலெக்ஸ் எல்லாவெல என்பவரை கட்டாயவிடுமுறையில் அனுப்பும் படி கிராமிய கைத்தொழிற்துறையின் முன்னாள் பதில் அமைச்சர் ஹேமாரத்நாயக்காவுக்கு, ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெந்தி ஆணை ஒன்றினை அனுப்பியிருந்தார். ஆனால் ஒரு மாதத்தின் பின்னர் அந்த ஊழியருக்கு அமைச்சர் தொண்டமானின் அறிவுரையின் பேரில் பணியில் சேருமாறு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தி பிறப்பித்த ஆணை திரும்பப் பெறவோ அல்லது நிராகரிக்கப்படவோ இல்லை. இருப்பினும் கால் நடை அபிவிருத்தித்துறை அமைச்சின் பதில் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ் கருணரத்ன, திரு. எல்லாவெலவை பணியில் சேருமாறு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

கைவினைப்பொருட்கள் சபையின் நடவடிக்கைகள் பற்றி லஞ்ச ஊழல் விசாரணை ஒன்று நடைபெற்று வருவதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. விசாரணைக் கமிஷன் கடந்த ஜனவரியில் இது தொடர்பான கோப்புகளை பெற்றுள்ளது. அவசியமான கோப்புகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திஸ்ஸ பெரேராவிடம் ஒப்படைக்கும்படி எழுத்து மூலமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சின் உயர்தர அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சபைத் தலைவர் தொடர்பான வழக்கு நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். அதே வேளை ஒரு ஊழியரை பணியிலிருந்து இடை நிறுத்திவைப்பது தவறு என்றும் அவர் கூறினார்.

## முல்லையில் புலிகளின் வங்கி

முல்லைத்தீவில் புலிகள் இயக்கத்தின் வங்கியான 'தமிழீழ வைப்பகம்' திறந்து வைக்கப்பட்டுள்ளது. 15.05.96 அன்று திறப்புவிழா நடைபெற்றது.

தமது சிவில் நிர்வாக நடவடிக்கைகள் வன்னியில் தொடர்வதை வெளிப்படுத்தும் வகையில் வங்கித் திறப்புவிழா புலிகளால் நடத்தப்பட்டது.

வன்னியில் உள்ள மக்கள் மத்தியில் யாழ் குடாநாட்டுக்கு திரும்பிச் செல்லும் மனநிலை எழாதவாறு புலிகள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களோடு முரண்பாடுகள், பிரச்சனைகள் ஏற்படாதவாறு நடந்துகொள்ளுமாறு புலிகளது உறுப்பினர்களுக்கு கடும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## ஊடுருவலைக் கண்டறிய முயற்சி

யாழ் குடாநாட்டுக்குள் மக்களோடு மக்களாக புலிகளது உறுப்பினர்களும் கலந்திருக்கலாம் என்று பரவலான சந்தேகம் எழுந்துள்ளது.

மக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதன்மூலம் புலிகளது ஊடுருவல்களை கண்டறிவதில் பாதுகாப்பு படையினர் கவனம் செலுத்துகின்றனர்.

அவ்வாறு தகவல் கொடுத்து உதவக்கூடியவர்களை புலிகள் இனம் காணாதவாறு படையினர் பயன்படுத்துகின்றனர்.

தற்போது தமது வீடுகளுக்கு திரும்பி தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும் மக்கள், உடனடியாக யாழ் குடாநாட்டில் மோதல்கள் இடம்பெற்றுவிடக்கூடாது என்றே விரும்புகின்றனர்.

## நெருக்கடியில் தவிக்கும் இடம்பெயர்ந்த மக்கள்

வன்னிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் குடிநீர் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர். உணவு, மருந்து பிரச்சனையும் ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

வன்னியில் உள்ள பல பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதால் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது.

பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்பட்டால்தான் பாடசாலைகள் இயங்கக்கூடியதாக இருக்கும்.

இதேவேளையில், யாழ் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பலாம் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்நிலையில் வன்னியில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் தேவைகளை செய்துகொடுப்பது அரசாங்க அதிகாரிகளால் முடியாத காரியமாகும்.

தொண்டர் நிறுவனங்களது உதவியுடன் இடம்பெயர்ந்த மக்களது முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியுமா என்பது சந்தேகம்தான்.

கடும் வறட்சி, சுகாதாரச் சீர்கேடுகள், இட நெருக்கடிகள் போன்றவற்றால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

## புலிகள் நடத்திய வீடியோ படப்பிடிப்பு

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 11.05.96 அன்று மட்டக்களப்பு-சந்திவெளியில் இடம்பெற்ற மோதலின் போது 5 பெண் புலிகள் உட்பட 13 புலி உறுப்பினர்கள் ஸ்தலத்திலே பலியானார்கள். 24 பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயப்பட்டவர்களில் ஒருவர் மறுநாள் மரணமடைந்தார்.

பலியானவர்களின் சடலங்களை மட்டக்களப்பு-தாண்டியடியிலும், வாகரையிலும் புலிகள் தமது மாவீரர் துயிலும் இல்லத்தில் மரியாதை செலுத்தி உறவினர்களின் முன்னிலையில் அடக்கம் செய்தனர்.

இதனிடையே தாக்குதல் சம்பவத்தின் விளைவாக பாதிக்கப்பட்டவர்களை அழைத்து புலிகள் வீடியோ படம் எடுத்துக் கொண்டனர்.

வந்தாறுமூலை, சித்தாண்டி, சந்திவெளி, கிரான் பகுதிகள் இப்பொழுது அடிக்கடி பலப்பரீட்சை நடத்தும் இடங்களாக மாறியுள்ளன. இதனால் அப்பகுதியிலுள்ள பொது மக்கள் இருதரப்பு நெருக்கடிக்குள் மரண பயத்துடன் காலங்கழிக்கிறார்கள்.

## யாழ் செல்ல அனுமதி மறுப்பா?

யாழ்-குடாநாட்டிற்கு தமிழ் கட்சிகள் செல்வதற்கு தடையில்லை. எனினும் உடனடியாக அனுமதி வழங்குவதில்தான் பிரச்சனை இருக்கிறது. என்று அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதற்கிடையே ஈ.பி.டி.பி. யாழ்-மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவதாசன் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்குச் சென்று பார்த்துவிட்டு திரும்பியுள்ளார்.

தமிழ் கட்சிகள் எதுவும் யாழ் செல்ல அனுமதியில்லை என்று அரச தரப்பில் இருந்தோ, படைத்தரப்பில் இருந்தோ கூறப்படவில்லை. ஆனால் அனுமதி வழங்குவதற்கு தாமதம் செய்யப்படுவதுதான் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

யாழ்-குடாநாடு பூரண கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதன் பின்னரும் பத்திரிகை தணிக்கை தொடர்வதும், தமிழ் கட்சி உறுப்பினர்கள் சென்று நிலமையை நேரில் காண அனுமதிப்பதில் தாமதம் காட்டப்படுவதுமே சந்தேகங்களை தோற்றுவிப்பதாக தமிழ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகளை செய்து தருமாறு ஐந்து தமிழ் கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தன. அக்கடிதத்துக்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் மீது தடை நீடிப்பு!

### புதிய அரசு முடிவை மாற்றுமா?

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடத்திற்கொரு முறை புலிகள் மீதான தடை காலாவதியாகும். அதன்பின்னர் மேலும் இரண்டுவருட காலத்திற்கு தடை நீடிக்கப்படும். அதுவே இதுவரை காலமும் வழக்கமாக இருந்தது.

புதிய அரசாங்கம் பதவியேற்க முன்னரே புலிகள் மீதான தடை காலாவதியாகியது. அதனால் தடையை மேலும் இரண்டு மாதங்கள் நீடிப்பதாக மத்திய உள்துறை அறிவித்தது.

இரண்டுமாத காலம் முடிவடைந்த பின்னர், புலிகள் மீதான தடை நீடிக்கப்படுமா? அல்லது புதிய அரசாங்கம் தடையை நீடிக்காமல் விடுமா என்பது தெரியவில்லை.

தடை நீடிக்கப்படாவிட்டால் இந்தியாவின் புதிய அரசாங்கம் புலிகள் தொடர்பான கொள்கையில் கடும் நிலைப்பாட்டை தளர்த்திக் கொண்டுள்ளது என்று கருதக் கூடியதாக இருக்கும்.

இம்மாத முடிவுக்குள் பாரதிய ஜனதா அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்றே அரசியல் நிபுணர்களால் கணிக்கப்படுகிறது.

அதன்பின்னர் அமையப்போகும் கூட்டரசாங்கமே புலிகள் மீதான தடை நீடிப்புத் தொடர்பாக தீர்மானிக்கும்.

## ஆசிரியர் கொடுப்பனவில் தேவையற்ற தாமதங்கள்!

### வடக்கு-கிழக்கு மாகாண திணைக்கள ஆசிரியர்கள் புகார்

வடக்கு-கிழக்கு மாகாணத் திணைக்கள ஊழியர்களின் கொடுப்பனவு விவகாரங்களில் ஆசிரியர்கள் புறந்தள்ளப்படுவதாகத் தெரிய வருகிறது.

எந்தக் கொடுப்பனவாக இருந்தாலும் அமைச்சிலும், கல்வி அலுவலகங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள் சுற்றுநிருபம் வந்த அடுத்தவாரமே பெற்றுவிடுகிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு தாமதமாகவேனும் இவை வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

பல ஆசிரியர்கள் தாங்கள் என்ன என்ன கொடுப்பனவுகள் பெற உரித்துடையவர்கள் என்பது கூட அறியாத நிலையில் அரச சேவை புரிகிறார்கள். வருட ஆரம்பத்தில் சகல அரசாங்க ஊழியர்களுக்குமான விசேட முற்பணம் வழங்கப்படுவதை கூட பல ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளவில்லை.

திணைக்களத்தில் கடன் கோரி விண்ணப்பித்துவிட்டு கால்கடுக்க அலையும் ஆசிரியர்கள் ஏராளம்.

தற்போது இடர்க் கொடுப்பனவுகள்கூட ஆசிரியர்களுக்கு ஒழுங்காக வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் குறை கூறுகிறார்கள். எனினும் ஏனைய கல்வி ஊழியர்கள் இவற்றைப் பெற்றுவிட்டார்கள்.

"மாகாணப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடர்க் கொடுப்பனவு ஒன்றிரண்டு மாதங்களுக்காவது வழங்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு ஒரு மாதம் கூட வழங்கப்படவில்லையே" என்று முரசிடம் தெரிவித்தார் தேசிய பாடசாலை ஆசிரியர் ஒருவர்.

## மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம்

(திருமலை நிருபர்)

ஆசிரியர் பற்றாக்குறை, வசதிகள் போதாமை ஆகிய விடயங்கள் காரணமாக பாடசாலையில் பகிஷ்கரிப்பை மேற்கொண்ட பாடசாலை மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகை பிரயோகமும் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 33 மாணவர்கள் திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துக் செல்லப்பட்டனர்.

திருகோணமலை வெள்ளைமணல் அல் அஸ்வர் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்கள் திங்களன்று (20/05/96) மேற்கொண்ட பாடசாலை பகிஷ்கரிப்பின் போது இச்சம்பவம் இடம்பெற்றது.

பகிஷ்கரிப்பை மேற்கொண்ட மாணவர்களை கலைந்து செல்லும்படி சீனக்குடா பொலிசார் வேண்டிக்கொண்டபோது, மாணவர்கள் மறுத்ததையடுத்தே இச்சிக்கல் எழுந்தது. இச்சம்பவத்தில் தனது பிள்ளை தாக்குதலுக்குள்ளாவதைத் தடுக்க முயன்ற அபூபக்கர் என்ற பெற்றோரும் தாக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரடி விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்ததுடன் ஆஸ்பத்திரிக்கும் சென்று மாணவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 31 பேர் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகள் தளர்த்தியுள்ள கட்டுப்பாடுகள்

### இளம் வயதினரும் வெளியேற அனுமதி

(நமது நிருபர்)

வடக்கில் தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள பொது மக்களின் போக்குவரத்துக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளை புலிகள் தளர்த்தி வருகின்றனர்.

வயதுக் கட்டுப்பாடு காரணமாக 'பாஸ்' பெற முடியாதிருந்தவர்களும் தற்போது 'பாஸ்' பெற்றுக்கொள்ள முடிகிறது.

அவ்வாறு அனுமதி பெற்றுக் கொண்டு வருபவர்கள் வவுனியாவிற்கு வந்ததும் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர்.

வயது குறைந்தவர்களை வவுனியாவுக்குள் அனுமதிக்க பாதுகாப்புத் தரப்பினர் தயக்கம் காட்டுகின்றனர். அவ்வாறு அனுமதிப்பதாக இருந்தாலும் கடும் விதிமுறைகளை தாண்டி வருவதென்பது சிரமமான காரியம்.

யாழ்-குடாநாட்டில் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டிருப்பதால், புலிகள் வவுனியா வழியாக தலைநகருக்குள் ஊடுருவலாம் என்று கருதியே கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளையில் தம்மிடம் 'பாஸ்' வாங்கிக்கொண்டாலும் வவுனியாவைத் தாண்டி இளம் வயதினர் செல்ல முடியாது என்பதால்தான் புலிகளும் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளனர்.

படையினரிடம் சென்று அனுமதி கேட்டு அனுபவப்பட்டுவிட்டு வரட்டும் என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

புலிகள் நினைப்பது போலவே வவுனியாவில் அனுமதி மறுக்கப்படும் பலர் மீண்டும் திரும்பிச் செல்லுகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

# பிறப்பையும் இறப்பையும் பதிவதெப்படி?
## மக்கள் ஏக்கம்–பதிவாளர் தூக்கம்!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலைத் தளவைத்திய சாலைப் பிறப்பு- இறப்புப் பதிவாளர் அலுவலகம் தனது கடமைகளைச் செய்ய சோம்பல் படுவதாகத் தெரிகிறது.

பிறப்பு அல்லது இறப்புப் பதிவை செய்வதற்கு வரும் விண்ணப்பதாரிகள், மாதக்கணக்கில் தங்கள் தொழிலையும் மறந்து, இவர்கள் பின்னால் அலைய வேண்டி இருக்கிறது. "நாளை வா, நாளை மறுதினம் வா" என்று நாக்கூசாமல் வருபவர்களை திருப்பி அனுப்பி விடுகிறார்கள்.

யாராவது விண்ணப்பதாரி பொறுமையிழந்து ஏதாவது கேட்டு விட்டால் பதிவுக்கு ஆறுமாதங்கள் வரை வேண்டும். நாங்கள் அப்படிச் செய்யாமல் விட்டது தான் பிழை என்பது போலப் பதில் வருகிறது.

பிறப்பு–இறப்புப் பதிவாளரை அலுவலகத்தில் சந்திப்பது குதிரைக் கொம்பு. ஒரு பெண்மணி இருந்தே எல்லாவற்றையும் சமாளித்து விடுகிறார்.

இதுபற்றி மாவட்ட வைத்திய அதிகாரியிடம் சிலர் முறையிட்டபோது "ஆஸ்பத்திரியில் நடக்கும் பிறப்பு- இறப்பு விவகாரங்களை அவர் ஒழுங்காக கவனிக்கிறார். அலுவலகம் குறிப்பிட்ட நேரம் வரை திறந்து வைக்கப்படுகிறது. இதற்கு மேல் என்ன செய்யமுடியும்?" என்பதாகப் பதில் அளிக்கப்படுகிறது.

அத்துடன் வெளியே இடம்பெறும் பிறப்பு- இறப்பு நிகழ்வுகள் விடயத்தில் அவருக்குத் தன்னை எவ்வித பணிப்பும் வழங்கமுடியாது என்றும் மாவட்ட வைத்திய அதிகாரி கை விரித்துள்ளார்.

பதிவாளருக்கும் அவரது அலுவலகத்தில் இருக்கும் பெண்மணிக்கும் ஆள்பதிவு நிர்வாகம் சுறுசுறுப்புக்காக- டானிக் ஏதாவது கொடுத்தால் பொதுமக்களுக்கு உதவியாக இருக்குமல்லவா?

# தேர்தல் திருவிழாவில் மயிரிழையில் மகுடம்

தேர்தலுக்குத் தேர்தல் ஏதாவது ஆச்சரியமான நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதில் மயிரிழையில் மகுடம் சூட்டிய சாதனைகளும் அடங்கும்.

சட்டசபைத் தேர்தலில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது வழக்கமாக நடப்பது என்றாலும் கூட பாராளுமன்றத் தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது என்பது மிக ஆச்சரியமான ஒன்றுதான்.

பாராளுமன்றத் தேர்தலில் குறைந்த வாக்குகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலைப் பார்த்தால் அதில் தமிழகத்தின் பெயர் பலமுறை இருப்பது இன்னும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 1957ம் ஆண்டில் இருந்து குறைந்த வாக்குகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு: (தமிழகத்தில் மட்டும்)

| ஆண்டு | தொகுதி | வாக்கு வித்தியாசம் | வென்றவர் | தோற்றவர் |
|---|---|---|---|---|
| 1. 1957 | கடலூர் | 59 | டி.எம்.நாயுடு (சுயே) | என்.ராதாகிருஷ்ணன்(காங்) |
| 2. 1957 | கிருஷ்ணகிரி | 367 | சி.ஆர்.நரசிம்மன் (காங்) | ஜி.டி.நாயுடு (சுயே) |
| 3. 1967 | திருச்செந்தூர் | 394 | சந்தோசம் (சுதந்திரா) | கோசல்ராம் (காங்) |
| 4. 1971 | திருச்செந்தூர் | 26 | சிவசாமி (தி.மு.க.) | மத்தியாஸ் (சுதந்திரா) |
| 5. 1996 | பாண்டிச்சேரி | 284 | பரூக் (காங்) | ஆறுமுகம் (தி.மு.க) |

## மிகக் குறைவான வாக்கு

இந்திய தேர்தல் சரித்திரத்திலேயே இல்லாத வகையில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் ஆந்திர மாநிலத்தில் காங்கிரஸ் வேட்பாளர் ராமலிங்கம் என்பவர் அகைபென்னி தொகுதியில் வெற்றி பெற்றார். கடந்த 1989ம் ஆண்டு தேர்தலில் தெலுங்கு தேச வேட்பாளரை அவர் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வென்றார் தெரியுமா? 9 வாக்குகள்.

## இப்படிச் செய்தால் என்ன?

இப்போதெல்லாம் தொலைக்காட்சியில் மாதத்திற்கு 10 இந்திப் படங்களுக்கும் மேலாக ஒளிபரப்பப்பட்டு வருகின்றது. அதுவும் சிங்கள இரசிகர்களுக்காகவே ஒளிபரப்பப்படுகிறது. அதாவது அதன் அர்த்தத்தினை கீழே சிங்களத்தில் போடுகிறார்கள். ஏன் தமிழிலும் போட்டால் என்ன? தமிழர்கள் இந்திப் படம் பார்க்கமாட்டார்களா? இதனை தேசிய ஒளி, ஒலிபரப்பான ரூபவாஹினியில் சரி செய்யலாமே. தேசிய ஒளி, ஒலிபரப்பு இதனை செய்தால் மற்றைய தொலைக்காட்சி சேவைகளும் போட்டிக்காகவாவது செய்வார்கள். எனவே, இதனை தகுந்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். குறைந்த பட்சம் படத்தின் கதையையாவது தமிழில் சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஆரம்பிக்கலாம் அல்லவா?

எம். ராஜேஸ்குமார்-புளத்சிங்கள.

# கல்வித் திணைக்களத்தால் பாடசாலைக்கு ஆபத்து

(கண்டி நிருபர்)

கட்டுகஸ்தோட்டை நகரில் இயங்கும் ஸாஹிரா மகா வித்தியாலயத்தின் எதிர்காலம் பற்றி அப்பிரதேச பெற்றோர்கள் பெரும் கவலை அடைந்து வருகின்றனர்.

கட்டுகஸ்தோட்டை- மடவளை வீதியில் சிறு குடிசையில் இயங்கி வந்த இந்த வித்தியாலயம் 35 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது. அக்குறணை வீதியில் போதிய நிலப் பரப்புடன் இப்பொழுது இயங்கிவரும் இப்பாடசாலையில் சுமார் 200 மாணவர்களே கல்வி கற்றுவருகின்றனர். ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்ற இப்பாடசாலையின் தற்போதைய அவல நிலை குறித்து கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர் இப்பகுதி முஸ்லிம்கள்.

இப்பாடசாலையை ஹரிஸ்பத்துவ- கட்டுகஸ்தோட்டைப்பிரதேச கல்விப் பணிமனையின் இயக்கப்பாடுகளுக்குப் பயன்படுத்த உயர் அதிகாரிகள் ஆர்வம் கொண்டிருப்பதையும் அதனை விரிவுபடுத்த எண்ணியிருப்பதையும் இவர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

இப்பாடசாலைக்கு முன்பாக கல்வித் திணைக்களமும் இயங்கி வருவதால் இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு குந்தகமாகவே இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. கல்வித் திணைக்களம் இங்கு இயங்க ஆரம்பிக்குமுன்னர் எவ்வாறு பாடசாலை இயங்கியதோ அதே நிலைக்கு மீண்டும் இப்பாடசாலை இயங்க வைக்கப்பட வேண்டுமெனவும் இப்பிரதேசம் முழுமையாக பாடசாலைக்குச் சொந்தமானதாக இருப்பதால் கல்வித் திணைக்களத்தை அவ்விடத்திலிருந்தும் அகற்றி இதனைத் தரமான முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாக மாற்றினால் என்ன? எனவும் இப்பகுதி மக்கள் வினவுகின்றனர்.

# தொடரும் தமிழ் பேசும் ஆசிரியர் பற்றாக்குறை!
## பாதிக்கப்பட்டுவரும் தோட்டப்புற பாடசாலைகள்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணப் பாடசாலைகளில் குறிப்பாக தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை தலைதூக்கி இருப்பதாக அதிபர்கள், பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் 2800 ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக் குறையால் ஒரு ஆசிரியரை மாத்திரம் கொண்டு இயங்கும் பாடசாலைகள் வெகுவாகப்பாதிக்கப்பட்டு வருகின்றன.

தோட்டப்புறப்பாடசாலைகளே இவற்றுள் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்வி அதிகாரிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர். 4000 ஆசிரியர்களை தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நாடெங்கிலும் நியமிக்கும் பொருட்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சை முடிவுகளின் தாமதம் குறித்தும் பரவலாக அதிருப்தியும் தெரிவிக்கப் படுகின்றது.

இதே வேளையில் அட்டாளைச் சேனை, வவுனியா போன்ற கல்விக் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலம் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்பயிற்சி.. ஆகிய துறைகளில் 3 வருட டிப்ளோமா பயிற்சியை முடித்த நூற்றுக்கணக்கான தமிழ் முஸ்லிம் இளைஞர்களும் யுவதிகளும் கடந்த ஐந்து மாதங்களாக தமக்கு நியமனம் வழங்கப்படவில்லையேயென அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கான பயிற்சி முடிந்தும் கூட தாம் பெற்ற கல்வியின் அனுபவத்தை மாணவர்களுக்கு உரிய காலப்பகுதியில் வழங்க தமக்கு சந்தர்ப்பம் கிடைக்காததையிட்டும் இவர்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஒரு புறம் இருள் மறுபுறம் வெள்ளம்

(திருமலை நிருபர்)

மூதூர் பிரதேசச் செயலாளர் பிரிவின் கீழுள்ள சகாயபுரம் கிராமம் கவனிப்பாரற்றுப் பாழடைந்து போயுள்ளதாக அப்பகுதி கிராம வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

107 குடும்பங்களைக் கொண்ட இந்தக் கிராமம் மூதூர் நகரத்திலிருந்து நான்கு மைல் தொலைவிலேயே உள்ள போதிலும் போக்குவரத்து வசதிகளோ மின்சார வசதியோ இன்றிக் கஷ்டப்படுகிறது.

விதவைப் பெண்கள் நிறைந்த இந்தக் கிராமத்தின் பிரதான தொழில் கல் உடைத்தலும் விவசாயமுமே. தொழில் ரீதியாகவும் பாதிப்படைந்த இவ்வூர் மக்களுக்கென ஒரு பொதுக்கிணறு கூட இல்லை.

"மாலையானதும் கிராமம் இருளில் மூழ்கிறது. மழை வந்தால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்குகின்றன. எங்கள் கஷ்ட நிலையை அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித பலனும் இல்லை. முரசின் செய்தி மூலமாகவாவது அவர்கள் கண்திறக்காதா?" என்று கவலையுடன் தெரிவிக்கின்றனர் ஊர்ப் பெரியவர்கள்.

நகரத்துக்கு வெளியில் வாழ்பவர்களும் மக்கள்தாம் என்ற எண்ணம் பிரதேச சபைக்கு வந்தாலன்றி இப்பிரச்சனை தீரப் போவதில்லை.

# 'குடி' மக்கள் கவலை

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் மது பானமான 'பியரு'க்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால் 'பியர்' பிரியர்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

கடந்த தமிழ், சிங்கள புது வருட காலகட்டத்தில்கூட 'பியர்' பெற்றுக் கொள்ள முடியாத நிலை இந்த மாவட்டத்தில் நிலவியது குறிப்பிடத்தக்கது.

அம்பாறையிலுள்ள மது விற்பனைச் சாலைகளில் கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாக 'பியர்' இல்லை என்ற பதிலே கிடைத்துவருகின்றது.

இத்தட்டுப்பாடு என்றுதான் நீங்குமென 'பியர்' பிரியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

## பிறந்த நாள் வாழ்த்து
### முஹம்மத் ரியாஸ்



கண்டி பேராதனை வீதியைச் சேர்ந்த ஹமீட் தம்பதியினரின் புதல்வன் முஹம்மத் ரியாஸ் தனது 8ஆவது பிறந்த தினத்தை (12.05.96) அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா, ஹில்மி நானா, நிலா நானா, பஸ்மிலா தாத்தா, ரிஹானா தாத்தா, மற்றும் உற்றார் உறவினர்களும் ரிஹானா ஜுவலர்ஸ், மஞ்சி ஜுவலர்ஸ் ஊழியர்களும் அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்கள்.

**மெய்ஞான ஜோதிட சிந்தாமணி**

மாதத்தோறும் வெளிவரும் திரு பி.கே. சாமி அவர்களின் வெளியீடான மெய்ஞான ஜோதிட சிந்தாமணியை பெற முடியாதவர்கள் வருடசந்தா ரூ.240 அனுப்பினால் உங்கள் கை வசம் கிடைக்கப்பெறும். மெய்ஞான ஜோதிட சிந்தாமணி தொடர்பாக விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவைப்படுகின்றனர். தேவைகளுக்கு:

ஆசிரியர்
இல.102, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

FM. 99 வானொலியில் திரு. பீ.கே சாமி அவர்களின் ஜாதக ரீதியான- தெட்டத் தெளிவான பலனையொட்டி எண்ணற்ற கேள்வி பதில் வந்து குவிவதால், அவசரமானவர்கள் நேரில் வரவும்.

**சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை**

**1996 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி**

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பாடநெறிகளுக்காக சுவிட்சர்லாந்திலுள்ள ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(1) உணவு மற்றும் விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN FOOD & BEVERAGE MANAGEMENT (1YEAR COURSE)
(2) அறைகளைக் கொண்ட கட்டிட பிரிவுகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN ROOMS DIVISION MANAGEMENT (1YEAR COURSE)
(3) ஹோட்டலை வழிநடத்துவதற்கான முகாமைத்துவம். (2வருடம்)
DIPLOMA IN HOTEL OPERATIONAL MANAGEMENT (2YEAR COURSE)
(4) உயர்முகாமைத்துவத்திற்கான, உல்லாச பிரயாணத்திற்கான முகாமைத்துவ டிப்ளோமா. (3 வருடம்)
HIGHER DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM (3YEAR COURSE)

தகைமைகள்: க.பொ.த (சா.த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம்–17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறை பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூபா. 4,70,000 சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கைப் பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1996 மே மாதம் 5 ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய மேல் விபரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: சுவிட்சர்லாந்து ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்திலுள்ள இலங்கைப் பிரதிநிதியால் கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறையைச் சூழவுள்ள பிரதேசங்களிலிருந்து விருப்பமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து 1996 ஜூன், மாதம் 01ம் திகதி முதல் 8.30 தொடக்கம் 4.00 மணிவரை அத்தோடு 1996 ஜூன் 2ம் திகதி 8.30 தொடக்கம் 1 மணி வரை அம்பாறையில் உள்ள கலோயா சபரி விடுதியில் நேர்முக கலந்துரையாடல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. எனவே சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**தளுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்**
LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு-11.
தொ.பே. 320139
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)

விளம்பரப் பகுதி

**வெளிவந்துவிட்டது...**

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

BRIGHT BOOK CENTRE
S-27,First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S. மணி**
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மே 19 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 ஜூன் 3, 4, Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஜூன் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# தமிழகத்தில் மீண்டும் ஒரு பின் தளம்?

**நாரதர்**

விடுதலைப் புலிகளின் இலண்டன் பிரதிநிதிகளில் ஒருவர் தமிழக முதல்வர் கருணாநிதியை சந்திக்க முயன்றதாக தகவல் ஒன்று கசிந்துள்ளது.

தற்போதைக்கு புலிகளுடனான உடனடிச் சந்திப்பை தி.மு.க. உயர் வட்டாரங்கள் விரும்பமாட்டா என்பது தெரிந்த விஷயம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்டத்தொண்டர்கள்கூட புலிகள் தொடர்பாக- வெறுப்பில்லாவிட்டாலும்- முன்னர்போல நம்பிக்கை கொள்ள நாள் செல்லலாம்.

வை.கோபால்சாமிக்காக கலைஞர் கருணாநிதியை புலிகள் கொல்லத்திட்டமிட்டனர் என்று இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு கருணாநிதிக்கு அறிவித்தது.

அதனைவைத்துத்தான் வை.கோபால்சாமியை தி.மு.க.வை விட்டு வெளியேற்றினார் கருணாநிதி.

வை.கோபால்சாமிக்காக புலிகள் அப்படி ஒரு காரியத்தை செய்யத் துணிந்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். ஏற்கெனவே ராஜீவ் கொலை விவகாரத்தில் சிக்கியுள்ள நிலையில் தமிழக மக்களது பெரும் தலைவர்களில் ஒருவர்மீது கை வைக்க புலிகள் நினைத்திருக்க மாட்டார்கள்.

தி.மு.க. தலைமையில் கலைஞருக்குப் பின்னர் வை.கோபால்சாமி தலைவராக வேண்டும். அதனால் தமக்கும் பிரயோசனம் என்று புலிகள் நினைத்திருக்கலாம். உண்மையில் புலிகளின் பக்கத்தில் இருந்து பார்க்கும்போது கலைஞரை விட, வை.கோபால்சாமிதான் அவர்களுக்கு ஆதரவாக நேரடியாகப் பேசக்கூடியவர். எனவே- கலைஞரைவிட வை.கோபால்சாமியை புலிகள் விரும்புவார்கள் என்பது உண்மைதான்.

ஆனால், அதற்காக அப்படியான ஒரு நிலையை கலைஞர்மீது கைவைப்பதன் மூலமாக உருவாக்கிக்கொள்ள புலிகள் நினைத்திருக்கமாட்டார்கள்.

ஏனெனில், அதனால் பாதிப்பு புலிகளுக்கு மட்டுமல்ல, வை.கோபால்சாமிக்கும்தான்.

கலைஞருக்கு ஒன்று நடந்து அதற்கு புலிகள்தான் காரணம் என்று தெரிந்தால் வை.கோபால்சாமிகூட புலிகளை எதிர்த்துத்தான் பேசவேண்டியிருக்கும். இல்லாவிட்டால் அவர் அரசியலில் இருந்தே தூக்கி வீசப்பட்டுவிடுவார்.

எனவே-புலிகளோ, அல்லது புலிகள் மூலமாக வை.கோபால்சாமியோ அப்படி ஒரு காரியத்திற்கு முன்வரத் துணிந்திருக்க முடியாது.

ஆனால், இந்திய மத்திய உளவுத்துறை தமக்கு அப்படி ஒரு தகவல் வந்ததாக தெரிவிக்க, அதனை கலைஞரும் பகிரங்கப்படுத்தினார்.

வை.கோபால்சாமியை தி.மு.க.வில் இருந்து ஓரம்கட்ட தி.மு.க.தலைமைக்கு கிடைத்த வலுவான ஆயுதமாக உளவுத்துறையின் தகவல் பயன்பட்டுவிட்டது. துரோகி பட்டத்தோடு வை.கோ. தூக்கி வீசப்பட்டார்.

'புலிகளிடமிருந்து கலைஞரைப் பாதுகாக்க' என்று சொல்லி கூடிய பாதுகாப்பும் கொடுக்கப்பட்டது. அதனையும் கலைஞர் ஏற்றுக்கொண்டார்.

ஆக, தி.மு.க. தொண்டர்களிடம் வை.கோபால்சாமி துரோகி என்ற முத்திரை குத்த செய்யப்பட்ட சகல முயற்சிகளும், கலைஞரின் தீவிர விசுவாசிகளிடம் புலிகள் மீதான சந்தேகத்தையும் ஏற்படுத்திவிட்டது.

எனவே-முன்புபோல புலிகள் விடயத்தில் தன்னிச்சையாகவே ஆதரவளித்து, பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தி.மு.க. தொண்டர்கள் ஆர்வம் காட்டமாட்டார்கள்.

மறுபுறம் தமிழகத்தில் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒரு தகவல் பரவியது. வை.கோபால்சாமிக்கு புலிகளிடமிருந்து ஒரு கோடி ரூபாய் கிடைத்திருப்பதாக அத்தகவல் தெரிவித்தது.

இந்திய புலனாய்வு நிறுவனங்களும் தீவிர விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தன.

தமிழக சட்டமன்ற-பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட கட்சிகளில் அ.தி.மு.க.விடம் தேவைக்கதிகமாகவே பண பலம் இருந்தது.

தி.மு.க.வும் கட்சி நிதி திரட்டல் மற்றும் தொழிலதிபர்கள் மூலமாக கிடைத்த நிதி



மூலம் தேர்தல் செலவைச் சமாளித்தது.

ஆனால், வை.கோபால்சாமி பாடுதான் திண்டாட்டம். அப்படியிருந்தும் தமது வேட்பாளர்களுக்கு ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவீதம் தேர்தல் செலவுக்கு வழங்கினார் வை.கோபால்சாமி. எப்படிப்பார்த்தாலும் சகலசெலவுகளுமாக கிட்டத்தட்ட இரண்டுகோடி ரூபாய் என்றாலும் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

அந்தப் பணம் எப்படி வந்தது? வாக்குகளைப் பிரிப்பதற்காக ஜெயலலிதா மூலமாக கிடைத்த பணம். அல்லது தமக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதற்காக-நன்றியாக பிரபாகரன் கொடுத்த பணம். இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்பதுதான் தமிழக அரசியல் வட்டாரங்களின் கணிப்பு.

1989 இல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.தான் வெல்லப்போகிறது என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தது.

அப்போது தமிழ்நாட்டில் இருந்த புலிகள் இயக்கத்தினர் தி.மு.க.வுக்கு ஆதரவாக தேர்தல் வேலைகளிலும் ஈடுபட்டனர். வாகன உதவி, வேட்பாளர்கள் சிலருக்கு நிதி உதவி போன்றவையும் புலிகளால் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் இருந்த புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியத்தின் நேரடிக் கவனிப்பில் அந்த உதவிகள் செய்யப்பட்டன.

தற்போது வை.கோபால்சாமி அணிக்கு நேரடியாக உதவி செய்ய முடியாத நிலையில், புலிகள் நிதி உதவி செய்திருக்கலாம்.

ஒருவகையில் அவ்வாறு நிதி உதவி செய்வது புலிகளின் கடமையும்கூட.

ஏனெனில், தமிழ்நாட்டில் புலிகள் தொடர்பாக அன்றுமுதல் இன்றுவரை ஒரே விதமாகப் பேசும் ஒரே தலைவர் வை.கோபால்சாமிதான்.

புலிகளோடு தொடர்புபடுத்தி வை.கோபால்சாமிமீது எதிர்ப்பிரசாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டபோதும், புலிகளை ஆதரிக்கும் போக்கை கைவிடாமலிருந்தது லேசுப்பட்ட காரியமல்ல.

அதுமட்டுமல்ல, ம.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு 'தனித்தமிழீழமே தீர்வு' என்றும் நேரடியாகவே குறிப்பிடப்பட்டிருந்தது.

பாட்டாளி மக்கள் கட்சியும் அவ்வாறுதான் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அக்கட்சித் தலைவர் ராமதாஸ் புலிகளைப் பற்றி பாராட்டுவதையெல்லாம் யாரும் ஒரு விவாதத்திற்கு உரிய விஷயமாக எடுப்பதில்லை.

ஆனால், வை.கோ.புலிகளைப் பற்றி ஆதரித்துப் பேசுவது, அவருக்கு புலி ஆதரவாளர் என்ற முத்திரையைக் குத்தியிருக்கிறது.

இவ்வாறான நிலையில் வை.கோவுக்கு கைகொடுத்து உதவ பிரபாகரன் முன்வந்திருப்பார். எனவே, புலிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை நிதி போயிருக்கலாம் என்பது நம்பத்தகுந்ததுதான்.

ஆனால், வை.கோவுக்கு புலிகள் நிதி கொடுத்திருக்கலாம் என்ற தகவல் தி.மு.க. தொண்டர்களிடையேயும், தி.மு.க. தலைமைப் பீடத்திலும் புலிகளை சற்று எட்டவே வைத்திருக்கக்கூடிய மனநிலையைத் தோற்றுவித்துள்ளது.

அதனால் தமிழ்நாட்டில் முன்னர்போல புலிகள் பரவலாக நடமாடவும், அதனைக் கண்டும் காணாததுபோல தி.மு.க. அரசும் இருக்கக்கூடிய சூழல் உடனடியாக உருவாகப் போவதில்லை.

அதேவேளையில் புலிகளை எடுத்தெறிந்து பேசுகின்ற ஒரு அணுகுமுறையையும் தி.மு.க. அரசு மேற்கொள்ளாது என்று நம்பலாம்.

எனவே-புலிகள் தொடர்பாக தி.மு.க.வின் நிலைப்பாடு உடனடியாக பின்வருமாறுதான் இருக்கமுடியும்.

இலங்கை இனப்பிரச்சனையில் புலிகளின் தீர்க்கமான பாத்திரத்தை மறுப்பதில்லை. அதேவேளையில் தமிழ்நாட்டில் தமது கரங்களை முன்புபோல் அகல விரித்த புலிகளுக்கு இடம் தருவதில்லை. அதுதான் தற்போதைக்கு தி.மு.க. அரசின் அணுகுமுறையாக இருக்கும்.

இந்த அணுகுமுறை மெல்ல மெல்ல புலிகளுக்கு சாதகமாக மாறுவதும் சாத்தியமாகலாம்.

புலிகளின் அணுகுமுறைகள், மற்றும் இலங்கை அரசின் எதிர்கால அரசியல் இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்துத்தான் அந்தச் சாதகம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் புலிகளால் பயிற்சி கொடுக்கப்பட்ட ஓர் இயக்கம் இருக்கிறது. அதன்பெயர் 'தமிழர் விடுதலைப் படை.'

இதனை வளர்த்துவிட்டது புலிகள்தான். தமிழக அரசியல்வாதிகளைவிட, போர்க்குணம் கொண்ட இயக்கங்கள்தான் தமக்கு உதவக்கூடியவர்கள் என்ற எண்ணத்தில் தமிழர் விடுதலைப் படைக்கு புலிகள் உதவி செய்தனர்.

> **அன்று புலிகள்**
> **அன்றாடப் பிரச்சனை பற்றி**
> **பேசினார்கள்.**
> **இன்று அரசாங்கமும்**
> **அதையே பேசுகிறது.**
> **இரண்டுமே காலத்தை இழுத்தடிக்கும்**
> **நிலைப்பாடுதான்!**

இந்திய அரசும், தமிழக அரசியல்வாதிகளும் தம்மைக் கைவிட்டால்கூட, தமிழர் விடுதலைப்படை போன்ற இயக்கங்களின் உதவி பலவகைகளில் உபயோகமாகும் என்பது புலிகளின் கணிப்பு.

தமிழர் விடுதலைப் படைக்கும் புலிகளுக்கும் இடையே உள்ள உறவு எப்போதோ வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அதனால் தமிழர் விடுதலைப் படை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கிட்டத்தட்டப் புலிகளின் நடவடிக்கை போலவே தமிழக பொலிசாரால் கருதப்படும்.

தமிழர் விடுதலைப் படையின் கொள்கை புலிகளை ஆதரிப்பது மாத்திரம் அல்ல; இந்திய மத்திய அரசுக்கு எதிராக-தமிழ்நாட்டு விடுதலைக்காகப் போராடுவதும் அதன் கொள்கை.

அதனால், தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு நிறுவனங்களுக்கு எதிராக அந்த அமைப்பு குண்டு வெடிப்புக்களை நடத்தலாம். அனால், அதன் விளைவு புலிகளையும் பாதிக்கும்.

புலிகளை தமிழ்நாட்டில் அனுமதித்தால் தமிழர் விடுதலைப் படை போன்ற அமைப்புக்கள் பலமாகக்கூடும் என்று மத்திய, மாநில அரசுகள் உஷாராகிவிடும்.

தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் நடந்து கொண்டிருந்தபோது ஏப்ரல் 21ம் திகதி தமிழகத்தில் இரண்டு இடங்களில் குண்டு வெடித்தன.

விழுப்புரம் அருகே இருந்த ரயில் நிலையத்திலும், மயிலாடுதுறை என்ற இடத்தில் இருந்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திலும் குண்டுகள் வெடித்தன.

தேர்தல் பாதை திருடர் பாதை என்று கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்களும் குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் காணப்பட்டன. அத்தோடு விட்டிருந்தால் பரவாயில்லை. "இலங்கையில் தமிழர்கள் அழிகிறார்கள். இங்கு தேர்தல் தேவைதானா?" என்று கண்டித்தும், புலிகளை ஆதரிக்கும் வாசகங்களும் பிரசுரங்களில் காணப்பட்டன.

குண்டுவெடிப்பை நடத்தியது தமிழர் விடுதலைப் படை.

இவ்வாறான செயல்கள் சாதாரண அரசியல்வாதிகளையும் அச்சுறுத்தக்கூடியவை. தேர்தலை நம்பியே இருக்கும் அரசியல்வாதிகள் தமது பிழைப்பில் மண் போடும் இயக்கங்கள் வளர்வதை விரும்ப மாட்டார்கள்.

தமிழர் விடுதலைப் படை போன்ற இயக்கங்கள் வளர புலிகள்தான் காரணம் என்று நம்பினால் அரசியல்வாதிகள் பலர் புலிகளுக்கு ஆதரவாகப் பேச முன்வர மாட்டார்கள்.

எனவே-தமிழர் விடுதலைப் படை போன்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் புலிகளுக்கு சாதகமான நிலை தோன்றுவதை கெடுத்துக் கொண்டிருக்கலாம்.

ஆக, தமிழ்நாட்டில் புலிகள் மீண்டும் தமக்கு சாதகமான நிலையை உருவாக்க தடையாக இருப்பவை முக்கியமாக மூன்று காரணங்கள்.

1 ராஜீவ் காந்தி கொலை.

2. வை.கோ.வுடன் உள்ள உறவு. மற்றும் தமிழர் விடுதலைப் படை போன்ற வற்றோடு தொடர்பு.

3. இந்தியாவில் புலிகள் மீது விதிக்கப் பட்டுள்ள தடை.

இதேநேரம் தமிழ்நாட்டில் புலிகளுக்கு சாதகம் ஏற்படுத்தக்கூடிய மிக முக்கிய அம்சம் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகள்தான்.

புலிகளை ஓரம்கட்டிவிட்டால் பின்னர் இனப்பிரச்சனை என்ற ஒன்றே இல்லையென்பதுபோல அரசு செயற்படுமானால், புலிகளின் அவசியம் இங்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் உணரப்படலாம்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை தீரவேண்டுமானால் தமிழர் தரப்பிலும் பலம்வாய்ந்த தரப்பு இருந்தாக வேண்டும் என்ற நினைப்பை அரசின் நடவடிக்கைகள் உருவாக்குமானால், அந்த பாத்திரத்தை வகிக்கக்கூடியவர்கள் புலிகள் மட்டுமே என்பதும் அங்கீகாரத்துக்குரியதாகிவிடும்.

அவ்வாறான நிலையில் புலிகள் மீதான சில கட்டுப்பாடுகளை தமிழக மாநில அரசு மறைமுகமாகக் தளர்த்தக்கூடும்.

உதாரணமாக, தமிழகக் கடற்கரையோரங்களுக்கு புலிகளது படகுகள் சென்றுவருவதற்காவது மறைமுக அனுமதி கிடைக்கக்கூடும்.

தற்போது இந்திய அரசு உட்பட வெளியுலக அரசுகள் மத்தியில் இலங்கை அரசு செய்துவரும் பிரசாரம் என்னவென்றால், "புலிகள் பேச்சுக்கு தயாராக இல்லை. போர் நிறுத்தத்தை மீறியதன்மூலம், அரசாங்கத்துக்கு போரைத் தவிர வேறு வழியில்லாமல் செய்துவிட்டார்கள்" என்பதுதான்.

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு யோசனைகளும் மிக முக்கிய துருப்புச்சீட்டாக அரசின் கையில் இருக்கிறது.

போர் நிறுத்தத்தை முறித்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பதால், புலிகள் சார்பான அமைப்புக்களது போர் நிறுத்தக் கோரிக்கைகளும் வெளியுலகில் எடுபடாமல் உள்ளன.

தற்போது யாழ்-குடாநாடு முழுவதும் அநேகமாக படையினரின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

இந்நிலையில் இராணுவரீதியில் தனது பலம் மேலோங்கியிருப்பதாக அரசாங்கம் பறைசாற்றி வருகிறது.

அரசாங்கத்தின் பறைசாற்றலின்படி பார்த்தால், இப்போது அரசியல் தீர்வை சட்டமாக்கி இறுதி வடிவும் கொடுத்து நடைமுறைப்படுத்த பெரிய தடையில்லை என்றாகிவிட்டது.

ஆனால், விஷயம் என்னவென்றால், தற்போது அரசியல் தீர்வைப் பற்றிப் பேசுவதைவிட, மக்களது அன்றாடப் பிரச்சனைகளுக்கு நிவாரணம் செய்வது தொடர்பாகவே அரசு தரப்பு உரத்துப் பேசிவருகிறது.

புலிகள் அரசியல் பேச்சுக்களுக்கு தயாராக இருக்கவில்லை. வெறுமனே அன்றாடம் பிரச்சனைகள் பற்றியே பேசினார்கள் என்று அரசாங்கம் முன்னர் குற்றம் சாட்டியிருந்தது.

இப்போது புலிகளை பலவீனப்படுத்தி விட்டோம் என்று கூறும் அரசாங்கம், அரசியல் தீர்வைவிட அன்றாடப் பிரச்சனைகள், நிவாரணங்கள் பற்றியே தானும் பேசிக் கொண்டிருக்கிறது.

இதேவேளையில், அரசியல் கோரிக்கைகள் பற்றி பேசுவதற்கு முன்னர் மக்களது அன்றாடப் பிரச்சனைகள் தீரவேண்டும் என்று புலிகள் முன்னர் வலியுறுத்தினார்கள். 'முரசு' தவிர அநேகமாக சகல தமிழ் விமர்சகர்களும் அதுதான் சரி என்பதுபோல எழுதிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது அரசாங்கம் அன்றாடப் பிரச்சனைபற்றிப் பேசும்போது, புலிகளும், அதே விமர்சகர்களும் "சலுகைகளைவிட உரிமைகள் முக்கியம். அன்றாடப் பிரச்சனைகளுக்கு நிவாரணம் செய்தால் மட்டும் போதுமா?" என்று கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

அரசின் பேச்சுவார்த்தை என்ற பொறியில் சிக்கக்கூடாது. தமது போரைத் தொடரவேண்டும் என்ற நிலையில் புலிகளால் முன்வைக்கப்பட்ட பொறிதான் அன்றாடப் பிரச்சனைகளை முதலில் தீருங்கள் என்ற கோரிக்கை. அப்போது புலிகளின் நிலை வெகு பலமாக இருந்தது.

இப்போது புலிகளது அதே தந்திரத்தை அரசு கையாளுகிறது. அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலமாக மக்களது ஆதரவைப் பெற்றுக்கொண்டு, மறு புறத்தில் புலிகளையும் ஒரு வழி பண்ணிவிடலாம் என்று அரசு நினைக்கிறது.

ஆக, அன்று புலிகளின் நிலைப்பாடும் தவறு, இன்று அரசாங்கத்தின் நிலைப்பாடும் தவறு.

இனப்பிரச்சனையும், யுத்தமும் அரசியல் பிரச்சனையை அடிப்படையாக வைத்து உருவானவை. எனவே, அரசியல் ரீதியான அணுகுமுறைக்கு முதன்மையான இடம் கொடுப்பதன் மூலமே இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும்.

அதைவிடுத்து வெறுமனே நிவாரண நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்வது புண்ணுக்குப் புனுகு பூசுவது போன்றதுதான். புண் மாறாது. உள்ளே சீழ் கட்டி மேலும் பெரிதாகும்.

புலிகளை இராணுவரீதியில் பலவீனமாக்கிவிட்டதாகக் கூறும் அரசு, இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வில் தொடர்ந்து தாமதம் செய்யுமானால், புலிகள்தான் தீர்வுக்குத் தடை என்ற வாதம் அடிபட்டுப் போகத் தொடங்கும்.

வெளியுலகில் புலிகளுக்கு சாதகமான நிலை இல்லையே தவிர, இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டும் என்பதில் வெளிநாடுகள் பல ஒருமித்த கருத்தை சொல்லியுள்ளன.

எனவே- இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசு இனிமேலும் பின்னடித்தால் அதன் வாக்குறுதியின் சுத்தம் தொடர்பான சந்தேகங்கள் வெளியுலகில் தோன்றத் தொடங்கலாம்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பும், அவ்வாறு நிர்ப்பந்தம் கொடுக்கக் கூடிய பலத்தோடு இருப்பது அவசியம் என்ற கருத்து வெளியுலக இராஜதந்திரிகள் மட்டத்தில் ஏற்படலாம்.

அந்தக் கருத்து இந்தியாவிலும் ஏற்படும் நிலை தோன்றினால், புலிகளுக்கு கிட்டத்தட்ட ஒரு பின்தளம் கிடைத்த மாதிரித்தான்.

இன்னொன்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் தமிழகம் சென்றால் தி.மு.க. அரசு தடைசெய்யாது என்பதையும் கருணாநிதி கூறியிருக்கிறார்.

புலிகளது கெரில்லா நடிவடிக்கைகளும், அவற்றிற்கு பதிலடியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் ஏற்படுத்தும் விளைவுகள், இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகள், புலிகளின் அணுகுமுறைகளும் ஏனைய தமிழ் கட்சிகளது நிலைப்பாடுகள் போன்றவை தமிழகம் மீண்டும் பின்தளமாகுமா என்ற கேள்விக்கு விடை தருவதில் முக்கிய பங்காற்றப்போவது உறுதி.

# அதிரடி அய்யாத்துரை



தமிழ் கட்சிகளை யாழ் செல்ல விடமாட்டோம் என்று அதிகாரதரப்பு அதிகாரபூர்வமாக ஒன்றும் சொல்லவில்லை. பத்திரிகைகள்தான் அப்படிச் செய்திகள் போடுகினமாம். கூட்டான கட்சியின் நிலமானவர் அதிகாரதரப்பார் சிலருடன் பேசும்போது, துவக்குக்காரர் யாராமிருந்தாலும் இனிமேல் கவனமாக இருப்பது நல்லது எண்டு நல்லாலோசனை சொன்னதாகவும் ஒரு தகவல். அண்ணர் எதுக்கு அத்திவாரம் போடுகிறார் எண்டு தெரியும்தானே. எண்டாலும் பாருங்கோ குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடுவதில் அவர் சூரர்.

'என்ன யாழ்ப்பாணம் போகும் ஐடியா இல்லையோ?' எண்டு தமிழ் கட்சி பிரமுகர் ஒருவரிடம் விசாரித்தேன். ஒரு நமட்டுச் சிரிப்போடு சொன்னார், "கட்சியின் பெயரை மாற்றப் போகிறோம்." நான் கேட்டேன் "என்ன பெயர்?" "வெள்ளை ரோஜா இயக்கம்" எண்டார். ஏன் அப்படிச் சொன்னவர் எண்டு எனக்கு விளங்கேல்லை. உங்களுக்கு?

ரெண்டு எழுத்தார் நிர்வாகம் நடத்தும்போது குடும்ப அட்டைகளில் போராளி குடும்பம், மாவீரர் குடும்பம் எண்டு தனியாக எழுதிக்கொடுத்திருந்தவை. அந்தக் குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கத்தான் அந்த அடையாளம். இப்ப என்ன நடத்திருக்குத் தெரியுமோ? அந்த அட்டை வைத்திருந்தவை அவற்றை மளமள வென்னு கிழிச்சுப் போட்டினம். குடும்ப அட்டை இருந்தால்தானே நிவாரணம்? கிழிச்சுப்போட்டு தொலைந்து போச்சு எண்டு சொல்லலாம். சொல்வதை நம்பவேணுமே. அதுதான் பிரச்சனையாக்கிட்டுதாம். அட்டையை வைத்து விஷயம் அறியலாம் எண்டு விஷயம் தெரிய வேண்டிய ஆட்களுக்குத் தெரிந்து போச்சாம்.

அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்கள் சில அறிக்கை விட்டவையல்லோ? அதைப் பற்றி தமிழ் கட்சி வட்டாரங்கள் என்ன சொல்லுகினம் தெரியுமோ? "இப்பத்தான் தமிழ்கட்சிகள் இருக்குது எண்டு அவைக்குத்தெரிய வந்திருக்குதோ? நல்ல விஷயம். முதலில் அங்கிருந்து வந்து அவை போராட்டத்தில் குதிக்கட்டும். பின்னர் அவை விட்ட கோரிக்கை பற்றி ஆராயலாம்" எண்டு சொல்லுகினம். இதுக்கு அவை என்ன பதில் சொல்லப் போகினம்?

அட்டைமூலம் அடையாளம் தெரிஞ்ச ஆட்களை விசேஷ கவனிப்போடு தனியாக வைத்திருக்கினமாம். முன்பு வேறு மாதிரி விசேஷ கவனிப்பு. இப்போது வேறு மாதிரி விசேஷ கவனிப்பு. பவர் மாறும போது அர்த்தமும் மாறுபடுகுது எண்டு சொன்னால் என்ன பிழை?

மலையக தனித்துவ தலைவர் வட்டாரம் பொதுப்பிரச்சனையை தங்கள் பிரச்சனைக்கு ஏற்ப பாவிச்சுப்போட்டுது எண்டு முணுமுணுப்புக்கள் கேட்க ஆரம்பிச்சிட்டுது. தனித்துவமான 'சந்திர' தலைவர் மீதும் பிடிப்பில்லாத பேச்சுக்கள் எழுந்திருக்குது. கொழும்பு தமிழ் பத்திரிகை ஒண்டு எழுதிய ஆசிரியர் தலையங்கம் நல்ல சாட்டை. அந்த இடத்திலிருந்து அப்படி ஒரு அடி வரும் எண்டு எதிர்பார்க்கேல்லை எண்டு தனித்துவ வட்டாரத்தினர் சொன்னவையாம்.

ராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன எண்டு நினைக்கிற கட்டத்துக்கு சனம் வந்திட்டுது. நான் சொல்லுறது வடக்கு-கிழக்கு நிலவரம். இந்த நிலையிலும் 'தம்பிமார்' மின்மாற்றிகளை பதம்பார்க்கத்தான் வேணுமோ? மின் இல்லையென்று நாடே கலங்குது. இருக்கிற மின் மாற்றிகளும் கிழக்கில் நொறுங்குது. உது தேவைதானா? பனையேறி விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதையாக, மனம் வெறுத்து இருக்கிற சனத்தைக் கொஞ்ச நேரமாவது வெளிச்சத்தில் இருக்க விட்டால் என்ன?

பிற நாட்டிலிருந்து ஒரு நண்பர் போன் செய்தார். உடனடியாக அவர் கேட்ட கேள்வி என்ன தெரியுமோ? வடக்கில் எந்த வங்கிக்குகாசு அனுப்பினா உடனடியாகப் போய்ச் சேரும்? அதுக்கு நான் சொன்ன பதில், "வடக்கு நிலவரம் முதலில் கிளியராகத் தெரியட்டும் பிறகு வங்கி நிலவரத்தை அறிந்து சொல்லுறன்!" ஏதோ பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சதாலை அந்தவகையில் எண்டாலும் எங்கட சனத்துக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்குதல்லோ. சந்தோசப்பட வேண்டியதுதான்.

பாராண்ட தமிழர்கள் என்பது பழைய கால வரலாறு. பாராளுமன்றத்தில் ஆளாவிட்டாலும், ஆள்வதற்கு உதவும் தமிழர்கள் என்பது புதிய வரலாறு.(?) டில்லிப் பாராளுமன்றத்திலும் தமிழ் எம்.பிகளது ஆதரவைத்தானே ஆள்வோர் நம்பியிருக்கினமாம். அதைத்தான் சொல்லுகிறேன். சின்ன சின்ன சந்தோஷம்தான்!

பெனிலின் என்னும் அறிஞர் சொன்ன பொன்மொழி ஒன்று. நண்பர்கள் விமர்சித்தாலே எரிந்து விழும் ஆட்களும் இருக்கிறார்கள். எதிரிகள் விமர்சிப்பதைக்கூட கவனியுங்கள் என்கிறார் பெனிலின்.

**"உங்கள் எதிரிகளை**
**கவனித்து வாருங்கள்.**
**உங்கள் குற்றங்களை**
**முதலில்**
**கண்டுபிடிப்பவர்கள் அவர்கள்தான்!"**



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 79

# தென்னிலங்கைத் தலைவரின் சமாதானத் தூது!

# ஜனவரி 1ல் புலிகளின் அறிவிப்பு!

### சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம் அருகே கிட்டுவும், கொத்தலாவலயும் சந்திப்பதற்கு முன்பாக நடைபெற்ற சில சம்பவங்களை முதலில் குறிப்பிட்டு விடுகிறேன். சென்றவாரம் அவை விடுபட்டுப் போய்விட்டன.

மன்னார் மோதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் உடல்களை நல்லூர் கந்தசாமி கோவில் அருகே புலிகள் கண்காட்சிக்கு வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

கோவில் அருகே அவ்வாறு உடல்களை வைத்திருப்பதை சைவப் பெரியார்கள் பலர் விரும்பவில்லை. அப்போது யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

அவரும் மேலும் பலரும் புலிகளிடம் சென்று பேசினார்கள். "கோவில் அருகே இவ்வாறான அஞ்சலி நிகழ்ச்சிகள், உடல்களை வைத்து கண்காட்சி என்பவை நடத்துவது சரியல்ல, மேலும் உடல்களை வைத்து என்ன செய்யப்போகிறீர்கள்? ஒரு பெட்டிக்குள் போட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைத்துவிடலாமே," என்று யோசனையும் தெரிவித்தனர்.

அதன்பின்னர்தான் யாழ்-கோட்டை இராணுவமுகாம் அதிகாரிகளுடன் புலிகள் தொடர்பு கொண்டனர். "உங்கள் வீரர்களது உடல்களை ஒப்படைக்க விரும்புகிறோம்" என்றனர் புலிகள்.

கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவல தனது உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு புலிகளது கருத்தைத் தெரிவித்தார்.

அவர்களும் கொத்தலாவலயைப் புலிகளோடு பேசி உடல்களைப் பொறுப்பெடுக்கச் சொன்னதோடு, பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவையும் கொழும்பில் இருந்து அனுப்பிவைத்தனர்.

முதலில் கோட்டை முகாமுக்கு அருகில் வைத்து புலிகளால் படையினரது உடல்கள் ஒப்படைக்கப்பட்டன. உடல்களை புலிகள் சார்பாக ஒப்படைத்தவர் ரஹீம் என்னும் கனகரத்தினம்.

இராணுவத்தினரின் உடல்கள் கைப்பற்றப்பட்டதும், பின்னர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதும் அதுவே முதற் தடவையாகும். அதன் மூலமாக புலிகளின் பிரசாரத்திற்கும் நல்லதொரு வாய்ப்புக் கிட்டியது.

தாம் ஒன்றும் ஈவிரக்கமற்ற அமைப்பல்ல; சர்வதேச போர்விதிகளைக் கடைப்பிடிக்கும் அரசியல்-இராணுவ இயக்கம் என்று புலிகள் சொல்லிக்கொள்ளக் கூடியதாகவிருந்தது.

### கிட்டுவின் ஜோக்

உடல்கள் ஒப்படைக்கப்பட்டபின்னர்தான் புலிகளிடம் இருந்த இரண்டு இராணுவத்தினரையும் விடுவிக்கும் பேச்சுவார்த்தையில் கப்டன் கொத்தலாவல ஈடுபட்டார்.

அதன் ஒரு கட்டமாகத்தான் கிட்டுவும், கொத்தலாவலயும் சந்திக்க முன்வந்தனர்.

கோட்டை இராணுவ முகாமுக்கு அருகே சந்திப்பு நடைபெற்றது.

கப்டன் கொத்தலாவலயும் கிட்டுவும் கை குலுக்கிக் கொண்டனர்.

கப்டன் கொத்தலாவல மாமிசமலை போன்ற தோற்றமுடையவர். உயரமான மனிதர். கிட்டுவோ ஒல்லியான தேகம், குள்ளமான உருவம். கொத்தலாவலயின் மார்பளவு உயரம்தான் இருந்தார் கிட்டு.

கொத்தலாவலயுடன் பேசும்போது கிட்டு ஒரு ஜோக் அடித்தார். "உங்களைச் சுடுவது என்றால் இலக்குப் பார்க்கும் சிரமமே இல்லை" என்றார் கிட்டு. அதனைக்கேட்டு பெரிதாகச் சிரித்தார் கொத்தலாவல.

அந்தச் சந்திப்பு சுமுகமாக நடந்து முடிந்தது. யாழ்ப்பாண பத்திரிகைகளில் கிட்டு- கொத்தலாவல சந்திப்பு முன்பக்கச் செய்தியாகியது.

கிட்டு, கொத்தலாவல, ஆனந்த வீரசேகர, ரஹீம் ஆகியோர் ஒன்றாக நின்று எடுத்துக்கொண்ட புகைப்படங்களும் வெளியாகியிருந்தன.

ஏனைய இயக்கங்களை தடைசெய்துவிட்டு இராணுவத்தினருடன் புலிகள் கைகோர்த்துக்கொண்டார்கள். 'சக போராளிகளுக்கு வேட்டு. இராணுவத்தினருக்கு வரவேற்பு.' என்று இந்தியாவில் இருந்த தமிழ் இயக்கங்கள் அதனை விமர்சித்திருந்தன.

"எங்களை இந்திய இராணுவத்தினரின் கைக்கூலி என்றனர். இப்போது புலிகள் இலங்கை இராணுவத்தினருடன் கைகுலுக்குகின்றனர்" என்று விமர்சனம் செய்தது ரெலோ.

அதேவேளை கிட்டு பேச்சுக்களைத் தொடர்ந்தார். கோட்டை இராணுவ முகாமிலிருந்து பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளது அலுவலகம் சென்று பேச முன்வந்தார்.

கோட்டை முகாமுக்கு அருகில் இருந்து புலிகள் அவரையும் அவருடன் வந்த சில வீரர்களையும் வரவேற்று அழைத்துச் சென்றனர். யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் இருந்த புலிகளது முகாமில்வைத்து ஆனந்த வீரசேகராவுடன் பேசினார் கிட்டு.

தம்மிடமுள்ள இராணுவத்தினர் இருவரையும் விடுதலை செய்வதற்கு தாம் விதிக்கும் நிபந்தனைகளைக் கூறினார் கிட்டு.

மேலிடத்தில் பேசிவிட்டு முடிவு தெரிவிப்பதாகக் கூறினார் ஆனந்த வீரசேகரா.

பேச்சு முடிந்ததும் ஆனந்த வீரசேகரா யாழ்ப்பாணத்தில் உள்ள தனது நண்பர்கள் சிலரைப் பார்க்க விரும்பினார்.

அவர் பார்க்க விரும்பியவர்களில் முக்கியமான ஒருவர் ஈ.கனகலிங்கம். அவர் ஒரு தலைச்சிறந்த உதைபந்தாட்ட வீரர். கோல் காப்பாளர். பரமேஸ்வராக் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றியவர். யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றிய ஈ.சபாலிங்கத்தின் சகோதரர் தான் கனகலிங்கம்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் இருந்த கனகலிங்கம் வீட்டுக்கு ஆனந்த வீரசேகராவை அழைத்துச் சென்றனர் புலிகள்.

ஆனந்த வீரசேகராவும் ஒரு உதைபந்தாட்ட வீரர். தனது விருப்பத்தை புலிகள் நிறைவேற்றியதற்காக தனிப்பட்டரீதியிலும் தனது நன்றியைத் தெரிவித்தார் ஆனந்த வீரசேகரா.

### அருணாவுக்கு சூடு

இரண்டு இராணுவத்தினரையும் விடுதலை செய்வதற்குப் பதிலாக, தமது உறுப்பினர்களான அருணாவையும், காமினியையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான் கிட்டுவின் பிரதான நிபந்தனையாகும்.

அருணாவும், காமினியும் கோட்டை இராணுவ முகாமில் தடுத்துவைத்திருக்கும் போது நடைபெற்ற சம்பவம் ஒன்றையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அருணா ஒருநாள் கோட்டை முகாம் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது கோட்டை முகாமுக்குள் ஷெல் ஒன்று வந்து விழுந்து வெடித்தது. அது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பால் ஏவப்பட்ட ஷெல்.

ஷெல் விழுந்து வெடித்ததும் முகாமுக்குள் பதட்டம். ஆத்திரமடைந்த ஒரு இராணுவவீரரின் பார்வை குளித்துக் கொண்டிருந்த அருணாமீது சென்றது.

அருணாவை நோக்கிச் சுட்டார் அந்த இராணுவ வீரர். அதனால் அருணாவுக்கு காலில் காயம் ஏற்பட்டது

விஷயமறிந்ததும் கொத்தலாவல விசாரித்தார். 'அருணா தப்பியோட முற்பட்டார். அதனால் காலில் சுடவேண்டியதாகிவிட்டது" என்று சொன்னார் அந்த இராணுவ வீரர்.

கொத்தலாவலக்கு உண்மை தெரிந்துவிட்டது. அந்த இராணுவவீரரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டதோடு, அருணாவை கொழும்பில் இருந்த இராணுவ வைத்திய சாலைக்கு அனுப்பி சிகிச்சை கொடுக்க ஏற்பாடும் செய்தார்.

அப்போதும் அருணா புலிகளில் முக்கியமான ஒருவர் என்பது கொத்தலாவலக்குத் தெரியாது.

முக்கியமான உறுப்பினர்கள் உயிருடன் பிடிபடமாட்டார்கள். சயனைட் அடித்துவிடுவார்கள் என்றுதான் நம்பப்பட்டது.

.புலிகளால் கொடுக்கப்பட்ட விடுவிக்கப் படவேண்டியோர் பட்டியலை வைத்துத்தான் அருணா முக்கியமான புள்ளிதான் என்று தெரியவந்தது.

### விஜய் விஜயம்

அருணாவையும், காமினியையும் விடுதலை செய்ய இராணுவத்தரப்புக்கு அனுமதி கொடுத்துவிட்டது அரசாங்கம்.

அக்கட்டத்தில்தான் சிறீலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜயகுமாரணதுங்கா யாழ்ப்பாணம் சென்று புலிகளை நேரில் சந்திக்கவும், சமாதான விஜயம் மேற்கொள்ளவும் முன்வந்தார்.

அதற்கு முன்னரும் விஜயகுமாரணதுங்கா 1982இல் ஒரு முறை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போது அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கொப்பேகடுவவுக்கு ஆதரவு திரட்டுவதற்காக அப்போது யாழ்ப்பாணம் வந்திருந்தார் விஜய்.

அத் தேர்தலில் கொப்பேகடுவவுக்கு யாழ் குடாநாட்டில் விவசாயிகள் செறிவாக உள்ள பகுதிகளில் கணிசமான வாக்குகள் கிடைத்தன.

அதன்பின்னர் 1986 நவம்பரில்தான் விஜயகுமாரணதுங்கா யாழ்ப்பாணம் விஜயம் செய்தார்.

அவரது சமாதான விஜயம் பரபரப்பாகப் பேசப்பட்டது. கொழும்பு பத்திரிகைகளும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி, சிறீலங்கா மக்கள் கட்சியை ஆரம்பித்திருந்த விஜய்குமாரணதுங்காவுக்கு அரசியல் ரீதியாகவும் பயன் கொடுக்கக்கூடிய விஜயமாக அது அமைந்தது.

ஹெலிகொப்டர் ஒன்றில் யாழ் கோட்டை முகாமில் வந்திறங்கினார்கள் விஜயகுமாரணதுங்கா குழுவினர்.

அவர்களை கோட்டை இராணுவ முகாமின் அருகில்வைத்து சிறப்பான வரவேற்புக் கொடுத்து அழைத்துச் சென்றனர் புலிகள்.

யாழ்ப்பாணத்தில் விஜயகுமாரணதுங்காவின் வருகைக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருந்தது.

இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்காக முதன் முதலில் யாழ்ப்பாண விஜயம் செய்த தென்னிலங்கை சிங்களத் தலைவர் விஜயகுமாரணதுங்காதான்.

சிறந்த நடிகரான விஜய் தென்னிலங்கையில் பிரபலமானளவுக்கு வடக்கு-கிழக்கில் பிரபலமானவராக இருக்கவில்லை.

சமாதான விஜயம் மேற்கொண்டமையினால் வடக்கில் பிரபலமானதோடு, தமிழ் மக்களது நேசத்துக்குரியவராகவும் மாறினார் விஜய்.

நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் விஜய்குமாரணதுங்கா கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர் புலிகள்.



பெரும்திரளான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அங்கு விஜய் உரையாற்றினார்.

கூட்டம் நடைபெறும் இடத்துக்கு அருகில் பெரிய பீரங்கி போன்ற ஒன்றை நிறுத்திவைத்திருந்தனர் புலிகள்.

உண்மையில் அதனால் சுடமுடியாது. பார்வைக்கு பிரமாண்டமாகத் தெரியும் அவ்வளவுதான்.

### விடுவிப்பு

யாழ்ப்பாணத்தில் தனக்கும், தனது குழுவினருக்கும் கிடைத்த வரவேற்பைக் கண்டு நெகிழ்ந்து போனார் விஜய்.

விஜய் குமாரணதுங்கா குழுவினர் கோட்டைக்கு திரும்பும்போது, அவர்களோடு தம் பிடியில் இருந்த இரண்டு இராணுவத்தினரையும் விடுதலை செய்து அனுப்பி வைத்தனர் புலிகள்.

அதனையடுத்து இராணுவத்தினரிடமிருந்த அருணாவும், காமினியும் விடுதலையாகி யாழ் வந்தனர்.

பட்டாசுகள் கொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனர் புலிகள்.

யாழ் சென்று புலிகளிடமிருந்து இரண்டு இராணுவத்தினரையும் அழைத்து வந்தது மூலம் தென்னிலங்கையிலும் சமாதானத் தூதுவராக மதிக்கப்பட்டார் விஜயகுமாரணதுங்கா.

விஜயகுமாரணதுங்காவுடன் யாழ் விஜயம் செய்தவர்களில் வணபிதா யோகான் தேவானந்தா, ஓ.சி.அபயகுணசேகர, வின்சென்ட் பெரேரா, ஆகியோர் முக்கியமானவர்கள்.



கைதிகள் விடுவிப்பை அடுத்து புலிகளோடு பேச்சு நடத்த இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

எனினும் அந்த முயற்சிகளில் பெரியளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

### சதி?

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் கிட்டு ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார்.

அந்த பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து ஒரு தமிழ் இளைஞர் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

"இவர்தான் கிட்டுவைக் கொலை செய்ய இராணுவத்தினரால் அனுப்பப்பட்டவர். இவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டது" என்று விளக்கம் கொடுத்தனர் புலிகள்.

"புலிகள் சொல்வது உண்மைதான். கிட்டுவைக் கொலை செய்யவே நான் வந்தேன்." என்று அந்த இளைஞரும் பத்திரிகை யாளர்களிடம் தெரிவித்தார்.

அச்செய்தி மறுநாளே பத்திரிகைகளில் பெரிதாக வெளிவந்தது.

'கிட்டுவைக் கொல்லச் சதி' என்று செய்திகள் வெளியானதை மக்கள் பார்த்தனர்.

அதனால் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் அடங்கிப் போயின.

அதேசமயம் கப்டன் கொத்தாலவலக்கு பிற்காலத்தில் சில கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டன. அவருக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும் சந்தேகிக்கப்பட்டது.

அப்படியிருந்தும் கிட்டு 1990இல் வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு கேட்டு விண்ணபித்தபோது அதற்கு 'ஸ்பொன்சர்' பண்ணியவர் கொத்தலாவலதான்.

இலங்கை இராணுவத்தில் புலிகளுடன் கூடுதலாக நெருங்கிப்பழகிய ஒரே ஒரு இராணுவ அதிகாரி கொத்தலாவலதான்.

அதேநேரம் புலிகள் மதிப்பு வைத்திருந்த ஒரே ஒரு இராணுவ அதிகாரியும் அவர்தான்.

### புலிகளின் அறிவிப்பு

1987 ஜனவரி மாதத்தில் புலிகள் ஒரு அறிவித்தலை வெளியிட்டனர்.

யாழ்-குடாநாட்டில் சகல சிவில் நிர்வாக நடவடிக்கைகளும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாக புலிகளின் அறிவித்தல் கூறியது.

அதற்கு முன்னரே சிவில் நிர்வாக நடவடிக்கைகள் இயக்கங்களின் கட்டுப்பாட்டில்தான் நடந்து வந்தன.

ஏனைய இயக்கங்களை (ஈரோஸ் தவிர) தடை செய்த பின்னர் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் புலிகளது கட்டுப்பாடு மேலோங்கியது.

எனினும், முதன் முதலாக வெளிப்படையாக அறிவிப்புச் செய்து, யாழ்-குடாநாட்டு சிவில் நிர்வாகத்தை தாம் கையேற்பதாகப் புலிகள் சொன்னது ஜனவரி 1ம் திகதிதான்.

புலிகள் வெளிப்படையாக அவ்வாறு அறிவித்தமை அரசுக்குப் பெரும் சவாலாக இருந்தது.

அதனையடுத்து யாழ் குடாநாட்டுக்கு எரிபொருள் தடை விதிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்தது.

### பிரபாவின் நகர்வு

யாழ் குடாநாட்டில் புலிகளின் ஆட்சி என்று தென்னிலங்கை பத்திரிகைகள் எழுதியதோடு, அரசாங்கத்தைக் கண்டிக்கவும் செய்தன.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்தது.

யாழ்ப்பாணத்தை புலிகளிடம் தாரை வார்த்துவிட்டது அரசாங்கம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இதேவேளையில் யாழ்ப்பாணம் புலிகளின் தளப் பிரதேசம் என்றநிலை உறுதியாக உருவானதால், கிட்டுவின் புகழும் வளரத்தொடங்கியது.

கிட்டுவின் வளர்ச்சியானது அவர்தான் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் உள்ள தலைவர் என்று அனைவரையும் நினைக்க வைத்தன.

உள்நாட்டுப் பத்திரிகைகளில் மட்டுமல்ல, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் கிட்டுவின் பெயர் அடிபடத் தொடங்கியது.

அதனையிட்டு பொறாமைப்பட்டவர்களில் முதன்மையானவர் மாத்தையா.

புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் என்ற தனது நிலை கிட்டுவால் பறிபோய்க்கொண்டிருப்பதாக நினைத்தார் மாத்தையா.

ஏற்கனவே பல்வேறு விடயங்களில் மாத்தையாவும், கிட்டுவும் முரண்பாடு கொண்டிருந்தனர். இந்நிலையில் கிட்டுவின் அதீத வளர்ச்சி மாத்தையாவை மேலும் மேலும் எரிச்சல் ஊட்டியது.

அதற்கிடையே மன்னார் மாவட்டத்தில் விக்ரரின் மறைவை அடுத்து, ராதா தளபதியாக நியமிக்கப்பட்டார்.

வன்னித் தளபதியாக மாத்தையா இருந்தாலும், மன்னார் மாவட்ட புலிகளோடு கிட்டுவுக்குத்தான் தொடர்பு கூடுதலாக இருந்தது.

தளத்திலுள்ள நிலவரங்களை தமிழ்நாட்டில் இருந்து அறிந்து கொண்டிருந்த பிரபாரன் 1987 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார்.

பிரபாகரனுடன் வந்தவர்களில் முக்கியமானவர் பொன்னம்மான்.

பிரபாகரனின் வருகையோடு யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. (தொடர்ந்துவரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது—இராஜதந்திரி

# மக்களைப் பதம் பார்த்த 17 வருடகால யுத்தம்

**யா**ழ்ப்பாணக் குடாநாட்டை ஆயுதப்படையினர் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளனர் என்று பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை இராணுவ ஒப்பரேஷன்கள் பல இடம்பெற்றுள்ளன. ஆயினும் ரிவிரெச என்றழைக்கப்படும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையே படையினருக்குக் குறிப்பிடத்தக்க வெற்றியைத்தந்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில்-அதாவது அக்டோபர், டிசம்பர் மாதங்களில்-சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

இதன் முதல் கட்டம் வலிகாமம் பிரதேசம் உட்பட யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவதாக அமைந்திருந்தது.

இரண்டாவது கட்டம்-தென்மராட்சிப் பகுதியை-கிளாலிக் கடலேரி வரை கைப்பற்றுவதாக இருந்தது.

மூன்றாவது கட்டம்-வடமராட்சிப் பகுதியை கைப்பற்றி பருத்தித்துறைத் துறைமுகத்தையும் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதாக இருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெருநிலப்பகுதி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என்று மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்களது இராணுவமும் தொழில் நுட்பத்தில்-அத் தொழில்நுட்பத்தைக் கையாளுவதில் தரம்மிக்கதாக இருப்பதாகவே கருதப்படுகின்றது.

கடந்த மாதம் தென் லெபனானில் இஸ்ரேலியப்படைகள் ஆட்டிலறிப் பீரங்கித் தாக்குதல்களையும், விமானக்குண்டு வீச்சுகளையும் நடத்தின.

வியட் நாமில் அமெரிக்க இராணுவம் நடத்திய ஆக்கிரமிப்பின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், அட்டூழியங்கள் என்பவை எண்ணிலடங்காதவை.

இந்நிலையில் இன்றைய காலகட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் என்று இடம்பெறும் போது அடிப்படை மனித உரிமைகளுக்கு முக்கியமளிக்கப்பட



இராணுவத்துக்குள் முறைகேடுகள், மனித உரிமை மீறல்கள் என்பன காணப்பட்டன என்று குறிப்பிட்டிருந்தார்.

அவற்றைத் தமது சேவைக்காலத்தில் நீக்கி, ஒரு சிறந்த இராணுவத்தை தாம் விட்டுச் செல்வதாகவும் கூறியிருந்தார்.

ஜெரி டி சில்வா குறிப்பிட்ட சிறந்த இராணுவம், வடக்கே எப்படி நடந்துகொள்ளும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இராணுவம் தனது கட்டுப்பாட்டினுள் வந்த பகுதிகளுக்குள் முட்கம்பிவேலிகள், பனைமரக்குத்தி பங்கர்கள் என்பவற்றைப் போட்டு வருவதைக் காணமுடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்படும் வரை இராணுவத்தின் பிரசன்னம் சிவில் நிர்வாகத்துடன் பெரிதும் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும்.

வடக்கு-கிழக்கில் தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து இராணுவத்தினர் தற்போதைய சூழ்நிலைகளில் எக்காரணம் கொண்டும் பின்வாங்கி விடமாட்டார்கள். கூடியவரை தமது பலத்தை மேலும் அதிகரித்து எல்.ரி.ரி.ஈ.யினரிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவே செய்வர்.

எல்.ரி.ரி.ஈ.யினரும் அவ்வப்போது தமது கெரில்லாத் தாக்குதல்களை இராணுவக்

இந்நிலையில் தற்போது மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கும் ஆயுதப்படையினர் மக்களின் விசுவாசத்தையும், நட்பையும் பெறுவதற்கு நிறையவே செய்ய வேண்டியுள்ளது.

தென்னிலங்கையில் நடந்தது போன்று ஆட்கடத்தல்கள், வீதி ஓரத்தீவைப்புகள் போன்றவற்றுக்குத் தாம் முகங்கொடுக்க நேரிடுமோ என்று அப்பாவிப் பொது மக்கள் பெரிதும் சந்தேகம் கொள்ளவே செய்வர்

எல்.ரி.ரி.ஈ.யினரது இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை பூரணமாகக் களையெடுக்க இராணுவம் தனது புலனாய்வு நடவடிக்கைகளை விஸ்தரிக்கவே செய்யும்.

அச்சமயம் விசாரணைக்குட்படுத்தப்படுவோர், கைது செய்யப்படுவோரின் நலன்கள் பெரிதும் பாதுகாக்கப்படவேண்டியது இன்றியமையாததாகின்றது.

மனித உரிமைகள் செயலணிக்குழு மற்றும் தென்னிலங்கையில் உள்ள அடிப்படை மனித உரிமை நடவடிக்கையாளர்கள் ஆகியோர் இது விடயத்தில் போதியளவு கவனஞ் செலுத்த வேண்டியதும் அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான தீர்வு

எனவே தற்போது சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூன்றாவது கட்டமும் நிறைவெய்திய நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெருநிலப்பகுதி முழு அளவில் அரசபடையினர் வசமாகியுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூன்று கட்டங்களிலும் பொதுமக்களுக்குப் பெருமளவில் உயிர்ச்சேதங்கள் ஏற்படாதிருந்தமை மன ஆறுதலைத் தருகின்றது.

சூரியக்கதிர்-1, இராணுவ நடவடிக்கையின் போது தென்மராட்சி நோக்கியும், கிளிநொச்சி, வன்னிப் பகுதிகள் நோக்கியும் மக்கள் இலட்சக்கணக்கில் நகர்ந்தனர். அப்போது பலர் உணவின்றியும், நோய்வாய்ப்பட்டும் மரணித்தனர்.

பின்னர் சூரியக்கதிர்-2, இராணுவ நடவடிக்கையின்போது தென்மராட்சி நோக்கிச் சென்ற மக்கள் மீண்டும் வலிகாமம் பகுதிக்குள் பிரவேசித்துள்ளனர்.

பெரும் இராணுவரீதியிலான நடவடிக்கைகள் உலகில் காலத்துக்குக்காலம் இடம்பெற்று வந்துள்ளன.

யுத்தம் என்று ஏற்பட்டுவிட்டால் உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது எனக் குறிப்பிடப்படுவதுண்டு.

ஏனெனில் யுத்தத்தில் ஈடுபடும் எத்தரப்பினரிடமும் நிதானத்தையும், யுத்ததர்மத்தையும் தற்போதைய நவீன யுகத்தில் எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் தென் லெபனானில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

இஸ்ரேலியர்கள் உலகிலே சிறந்த விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவுடையவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இக் குண்டுவீச்சுகள், ஆட்டிலறித் தாக்குதல்கள் என்பன குறிதப்பாது மேற்கொள்ளப்பட்டன என்றே இஸ்ரேல் தனது ராடர்கள், மற்றும் தொலைக்காட்சிப் படப்படிப்புக்களை ஆதாரங்காட்டியிருந்தது.

இருந்தபோதிலும், இஸ்ரேலிய விமானக்குண்டுவீச்சில் தென் லெபனானில் அகதிகள் முகாமொன்று சிதைந்து சின்னாபின்னமானது. இதில் பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம், தரமான இராணுவ தொழில் நுட்பங்களைக் கொண்டுள்ளவர்களும் தவறுகளை-அதாவது மோசமான தவறுகளை-விடுவார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

யுத்தமொன்றில் ஏற்படும் தவறுகள், அனர்த்தங்கள் என்பன பெரும்பாலும் மூடிமறைக்கப்படுபவையாகவே இருக்கின்றன.

வேண்டுமென்பது சர்வதேச ரீதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டுவரை இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை ஆக்கிரமித்தபோது கூட ஆங்காங்கே மனித உரிமை மீறல்கள் சில இடம்பெற்றன.

இதனால் வடக்கு-கிழக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இராணுவ முற்றுகைகளின்போது மட்டுமல்ல, கடந்த காலங்களில் வடபகுதி மற்றும் கிழக்கில் மரணதண்டனைகள், ஆட்கடத்தல்கள் போன்ற சம்பவங்களும் இடம்பெற்று அடிப்படை மனித உரிமைகள் மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன.

எனவே கடந்த 17 வருடகால யுத்தம் வடக்கு-கிழக்கு மக்களைப் பல்வேறு வகையிலும் பாதித்திருக்கவே காணப்படுகின்றது.

இராணுவத் தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற லெப்டினனட் ஜெனரல் ஜெரி டி சில்வா கூட

கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவல் செய்யவும் எத்தனிப்பர்.

அத்தகைய சமயங்களில் இராணுவத்தினரது நடவடிக்கைகள் எப்படியிருக்குமென்பது கேள்விக்குரியதாக இருக்கின்றது.

கடந்த ஐ.தே.க. ஆட்சியில் ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் வடக்கே அனுப்பிவைக்கப்பட்ட இராணுவம் யாழ்ப்பாண நகர மத்தியில் உள்ள சிங்கள மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவற்றில் நிலை கொண்டிருந்தது.

காலப்போக்கில் வடக்கே இராணுவத்தினரின் பிரசன்னம் படிப்படியாக அதிகரித்து வடபிரதேசம் ஒரு ரணகளமானது.

கடந்த கால அனுபவங்கள் பயங்கரமானவை; கொடூரமானவை; அந்த அனுபவங்கள் மக்கள் மனதை விட்டும் நீங்காதவையாக உள்ளன.

என்பது அரசியல் சார்ந்ததாகவே இருக்க முடியுமென்பது முடிந்த முடிவு.

இராணுவம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, இதுவரை காலமும் மின்னொளியைக் காணாத மக்களுக்கு மின்சாரத்தையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதால் மட்டும் பிரச்னை தீரப் போவதில்லை.

வடக்கு-கிழக்கு மக்கள் தமது தனித்துவங்களைப் பிரதிபலிக்கச் செய்யும் ஒரு கௌரவமான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றார்கள்.

அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளைத் தீவிரப்படுத்த கூடுதலான அளவு அழுத்தங்கள் வழங்கப் படவேண்டும்.

அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வரும் ஜனாதிபதி சந்திரிகா, தம்முடன் தமது அரசியல் தீர்வு யோசனைகளையும் எடுத்துச் சென்று சர்வதேச ரீதியாக அந்த யோசனைகளுக்கு ஆதரவு தேடி வருகின்றார்.

ஆனால் மறுபுறத்தே வடக்கு-கிழக்குத் தமிழர்களது அரசியல் அபிலாஷைகள் குறித்தும் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் என்ன, வட அயர்லாந்துப் பிரச்னையை எடுத்துக் கொண்டால் என்ன-அப்பிரச்னைகளுடன் சர்வதேச சமூகம் பெரிதும் சம்பந்தப்பட்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையைப் பொறுத்தவரை அப்பிரச்னை குறித்து இருக்கக்கூடிய சர்வதேச ரீதியிலான அனுதாபங்களும் பலவீனமானதாகவே இருக்கின்றது.

இத்தகைய நிலைமைக்கு வடக்கு-கிழக்குப் பிரச்னை கடந்த காலங்களில் உரிய வகையில் சர்வதேச ரீதியாக அரசியல் மயப்படுத்தப்படாமையே முக்கிய காரணமாகும்.

இனிவருங்காலங்களில் அரசியல் அணுகுமுறைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக உத்வேகம் பெறவேண்டியுள்ளது.

இந்த உத்வேகத்துக்கான ஊக்கங்களை எல்.ரி.ரி.ஈ.யினர் உட்பட இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசம் சார்ந்த அரசியலாளர்களே முன்னெடுக்க வேண்டியவர்களாகின்றனர்.



## "உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் அரசியல் அணுகுமுறைகள் உத்வேகமடைய வேண்டிய நிலை"

## வீட்டு விளக்கும் காட்டுத் தீயும்

:—கலைஞர் கருணாநிதி—:

**நெல்மணி**

ஒவ்வொரு நெல் மணியையும் மூடியிருக்கிற தோல் உழவனின் சதையாலும், உள்ளேயிருக்கிற அரிசி அவனது எலும்பாலும் ஆனது என்பதை உணர்ந்து கொண்டால், அந்த நெல்லை உற்பத்தி செய்ய அவன் வடிக்கிற வியர்வை, விலை மதிப்பற்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தத் தனிமைச்சிறைக் கொடுமைக்கு நான் பயந்து விட மாட்டேன். குளவிக் கூட்டின் புழுப்போல, சூழ்நிலையின் காரணமாகப் பல்லாயிரம் முறை கொட்டப் பட்டுக் கொட்டப்பட்டுத் தயாரிக்கப்பட்டவன் நான்.

குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற ஒரு அரசுக்கும்- தன்னுடைய நடவடிக்கைகளையே குற்றமுடையதாக்கிக் கொள்கிற ஒரு அரசுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

வானத்து மேகங்கள்; அடடா! எத்தனை வடிவங்கள்தான் எடுக்கின்றன! இந்த அதிசயச் செயலை நமது அரசியல்



வாதிகள் சிலரிடம் தான் அவை பயின்றிருக்க வேண்டும்.

படிப்பது ராமாயணம்-இடிப்பது பெருமாள் கோயில் என்பது பழமொழி! படிப்பது கட்டபொம்மன் நூல்- பிடிப்பது எட்டப்பனுக்கு வால்; என்பது புதுமொழி.

ஜனநாயகம் வீட்டு விளக்கு! சர்வாதிகாரம் காட்டுத்தீ!

**கல்**

ஒரு மலையைப் பிளந்து கற்களாக்குகிறோம். அவற்றில் ஒரு கல்லில் விக்கிரகம் உருவாக்குகிறோம். மற்ற கற்கள் மண்டபங்கள் ஆகின்றன. கோபுரமாகின்றன. சுற்றுச் சுவர் ஆகின்றன. இத்தனையும் சேர்ந்தால்தான் கோயில். எல்லாக் கற்களும் விக்கிரகங்கள் ஆகிவிட முடியாது. அப்படி ஆகிவிட்டால் பிறகு கோயில் இருக்க முடியாது. விக்கிரகமாயிருக்கிற கல்லும், தானும் மற்ற கற்களைப் போலத்தான் மலையிலிருந்து வந்தோம் என்பதை மறந்துவிடக் கூடாது. கோயில் இருப்பதால்தான் விக்கிரகத்துக்கு அபிஷேகம், ஆராதனை எல்லாம்! இல்லையேல் அந்த விக்கிரகம் எந்த மரத் தடியோ? அல்லது படித்துறையோ?

ஒருகட்சி அமைப்பில் தலைமையில் இருப்போர் தெரிந்து கொள்ள வேண்டியதும், புரிந்து கொள்ள வேண்டியதுமான உண்மை இது!



படிப்பகம்

www.padippakam.com

# தொடராகக் கேட்ட வெடிமுழக்கம்

## 11 உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

**சென்றவாரம்**

**தன் சகாக்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு ஃபிரான்ஸ் அரசுக்கு கார்லோஸ் 30 நாள் காலக்கெடு விதித்தான். ஃபிரான்ஸ் அலட்சியம் செய்தது. காலக்கெடு முடிந்ததும் கார்லோஸ் நடவடிக்கையில் இறங்கினான். ஃபிரான்ஸ் கடுகதி ரயிலில் குண்டுவெடித்தது. ஃபிரான்ஸில் இருந்த இஸ்ரேலிய தூதர் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்ததாக லெபனானில் உள்ள மேற்கு பெய்ரூட்டிற்கு சென்றான் கார்லோஸ்- அங்கே-**

மேற்கு பெய்ரூட்டில் உள்ள விடுதி ஒன்றில், தனது காதலி ரிவேரா கொண்டு வந்த பூங்கொத்தை வாங்கிய கார்லோஸ் புன்னகைத்தான்.

ரிவேரா எதிர்பார்ப்பை அடக்க முடியாமல் "எதற்காக இந்த பூங்கொத்தை வாங்கிவரச் சொன்னாய்? யாராவது காதலிக்கு கொடுக்கப்போகிறாயா?" என்றாள்.

"காதலிக்கல்ல. காதலனுக்கு!"

"என்ன?" என்றாள். கார்லோஸ் பதில் சொல்லாமல் பூங்கொத்தை அளவெடுத்தான்.

மேற்கு பெய்ரூட்டில் உள்ள ஃபிரான்ஸ் தூதரக அதிகாரி கை கவாலொட் மிக மகிழ்ச்சியாக இருந்தார். தன் மனைவியின் வயிற்றில் இன்று காலையில் மட்டும் ஆறுமுறை அன்பாக முத்தமிட்டு விட்டார்.

"போதும்.. போதும். வேலையைப் பாருங்கள்."

"இதெல்லாம் உனக்கு என்றா நினைத்தாய்? உன் வயிற்றில் இருக்கும் என் குழந்தைக்கு! நான் எத்தனை முத்தம் வேண்டுமானாலும் கொடுப்பேன். நீ யார் தடுக்க?" என்றார். ஏழாவது தடவையாக வயிற்றில் பரிவோடு முத்தமிட்டார்.

"இன்று ஏப்ரல் 16. அலுவலகத்தில் ஏதோ முக்கிய சந்திப்பு என்றீர்கள். இப்படியே இருந்தால் எப்போது புறப்படுவீர்கள்?"

"மறந்துவிட்டேன். இதோ ஒரு ஐந்து நிமிஷத்தில் ரெடியாகிவிடுகிறேன்." சின்னக் குழந்தைபோல துள்ளிக்கொண்டு ஓடும் தன் கணவனை ஒரு புன்சிரிப்போடு இரசித்தாள் திருமதி கைகவாலொட்.

ஐந்து நிமிடத்தில் தயாராகி, மனைவியை ஆதரவாக தோளோடு அணைத்து, "பத்திரமாக இரு. உடம்பை அலட்டிக் கொள்ளாதே. நேரத்தோடு சாப்பிட்டுவிடு. நான் வரவேண்டும் என்று காத்திருக்காதே என்ன!" சொல்லிக்கொண்டே, கையசைத்துக் கொண்டே, காரில் ஏறப்போனவரின் எதிரே அவர்கள் குறுக்கிட்டனர்.

அதிகாரி புருவம் உயர்த்தினார். 'யார் இவர்கள். இதுவரை பார்த்ததே இல்லையே.'

அதிகாரி யோசித்து முடிப்பதற்கிடையில் அவரை நெருங்கிவிட்டனர் இருவரும். ஒரு ஆண். ஒரு பெண். கார்லோஸும் ரிவேராவும்தான் அவர்கள்.

"ஹலோ!" என்றான் கார்லோஸ்.

"ஹலோ!" என்றார் அதிகாரி. தொடர்ந்து "நீங்கள்?" என்றார் கேள்வியாக.

"என்னை உங்களுக்கு நேரில் தெரியாது. ஆனால் நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள்." என்றான் கார்லோஸ்.

அதிகாரி வியந்து, "ஓ.. நீங்கள்..?"

"நான்தான் கார்லோஸ்!" என்றான். என்றதும் அதிகாரி தன்னையறியாமல் வாய்பிளந்து "ஆ.."என்றார்.

அவரது திகைப்பு மறைவதற்கிடையில் பூங்கொத்துக்குள் கைவிட்டு பிஸ்டலை வெளியே எடுத்தான் கார்லோஸ்.

தாமதிக்கவேயில்லை.

சுட்டான்!

நெஞ்சின் மையத்தில் ஒன்று. நெற்றிப் பொட்டில் ஒன்று. இரண்டு சூடுகள்.

அதிகாரி சாய்ந்துகொண்டிருக்க, வாசலில் நின்று வெறித்து, விபரீதத்தை உணர்ந்து, பதறி ஓடிவந்த அதிகாரியின் மனைவி கரோலின் மீதும் கார்லோஸின் பிஸ்டல் குண்டுகளைத் தீர்த்தது.

இரத்த வெள்ளத்தில் மிதந்தனர் இருவரும்.

ஒஸ்ரியாவின் தலைநகரான வியன்னாவில் ஏப்ரல் 17 இல் கார்லோஸும், ரிவேராவும் சென்று இறங்கினார்கள்.

ரிவேரா சற்று அதிர்ச்சியடைந்திருந்தாள். ஃபிரான்ஸ் அதிகாரியையும், அவர் மனைவியையும் சுட்டுத்தள்ளிவிட்டு துரித கதியில் இயங்கினான் கார்லோஸ்.

மேற்கு பெய்ரூட்டில் இருந்த தனது ஆள் ஒருவனை தான் தங்கியிருந்த அறைக்கு வரவழைத்து இரகசியம் பேசினான். பின்னர் அவனோடு புறப்பட்டுச் சென்று நீண்டநேரம் கழித்துத் திரும்பினான்.

அடுத்து பயண ஏற்பாடுகளை செய்து அவனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அவனிடம் இருந்தது இராஜதந்திரிக்கு உரிய கடவுச்சீட்டு என்பதால் விமானநிலையத்தில் குறுக்கீடுகள் இருக்கவில்லை. ரிவேராவிடம் அவனது அந்தரங்கச் செயலாளர் என்று சொல்லிக்கொள்ளச் சொன்னான்.

வியன்னா வரும்வரை கார்லோஸிடம் பேசவே நேரம் கிடைக்கவில்லை.

கார்லோஸின் சுறுசுறுப்பும், திட்டமிட்டு விரைந்து செயற்படும் வேகமும் ரிவேராவுக்கு வியப்பளித்தன. இப்படியும் ஒரு மனிதனா? இரண்டு கொலைகளை செய்துவிட்டு, அதன் பாதிப்பே இல்லாமல், அச்சமே இல்லாமல் எப்படித்தான் இவனால் செயற்பட முடிகிறதோ?

அதிகாரியைச் சுட்டது சரி, அவரது மனைவியையும் சுட்டிருக்க வேண்டுமா? அது தவறு என்றுதான் ரிவேராவுக்கு தோன்றியது. அதனைக் கார்லோஸிடம் சுட்டிக்காட்ட ஒரு சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தாள் ரிவேரா.

கடுகதி ரயிலில் குண்டுவைத்துவிட்டு வந்த போது அதன் பாதிப்பு கண்ணில் தெரியவில்லை. அதனால் அதன் கோரம் புரியவில்லை. மேற்கு பெய்ரூட்டில் தன் கண் எதிரே இரண்டு பேரின் சாவைக் கண்டது முதல் அந்தக்காட்சி அடிக்கடி மனதில் தோன்றி ரிவேராவுக்கு பயம்காட்டியது.

களைப்புத்தீரக் குளித்துவிட்டு வந்த கார்லோஸ் ரிவேராவைப் பார்த்தான். அவள் கண்களை மூடியபடி சோபாவில் சாய்ந்திருந்தாள். நிமிர்ந்து சரிந்திருந்ததால், இளமையின் திரட்சிகள் முறைத்துக் கொண்டிருந்தன.

மெல்ல அருகில் சென்று அவளது நெற்றியில் உதடுகளை ஒற்றியெடுத்தான். அவள் அப்போதும் கண்களைத் திறக்கவில்லை. நெற்றியிலிருந்து விலகி மூடியிருந்த இமைகள் மீது முத்தமிட்டான். இப்போது அவள் மெல்ல விழிகளைத் திறந்து பார்த்தாள்.

அவனது வெற்று மார்பும், விஷமப் பார்வையும், கண்களில் வழிந்த காமமும் அவளை எல்லாவற்றையும் மறக்கச் செய்தன.

"என்ன யோசனை?" என்றான். அவளை இழுத்து அருகில் அமரவைத்து, மார்பில் சரிந்து கொண்டாள் ரிவேரா.

"பயந்துவிட்டாயா?" என்றான்.

"பாவம். அவளை ஏன் கொன்றாய்?"

"இங்கேபார் ரிவேரா! வன்முறை என்று இறங்கிவிட்டாலே அங்கே இரக்கத்திற்கு இடமில்லை! எந்தளவுக்கு எந்தளவுக்கு பயம் காட்டுகிறாயோ, அந்தளவுக்கு எதிரிகள் பணிந்து போவார்கள்! வேண்டாம். கார்லோஸுடன் பகைக்க வேண்டாம் என்று இந்த உலகமே பயந்து சாகவேண்டும்."

"அதுதான் உன் இலட்சியமா?"

"அதுவும்தான். ஆனால் அதுமட்டுமல்ல! இந்த உலகத்தில் இரண்டுரகமாகத்தான் இருக்க முடியும். இல்லையென்றுவை, யாரும் மதிக்கமாட்டார்கள்."

"அது என்ன இரண்டு ரகம்?" என்றாள் ரிவேரா. அவளோடு பேசிக்கொண்டே, அவளை மேலிருந்து கீழாக ஆராய்ந்து கொண்டிருந்தான் கார்லோஸ்.

"ஒன்றில் நல்லவனாக இருக்க வேண்டும். அல்லது கெட்டவனாக இருக்க வேண்டும். இரண்டுக்கும் இடைப்பட்ட ரகத்திலும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்களை யார் மதிக்கிறார்கள். பூச்சி மாதிரி நசித்துப் போட்டுவிட்டு போய்விடுவார்கள்."

இப்போது அவன் மடியில் தலைவைத்துக் கொண்டு ரிவேரா கேட்டாள்: "நீ யார், நல்லவனா, கெட்டவனா?"

அதற்குப் பதில் சொல்லாமல் கார்லோஸ் சிரித்தான். உரத்துச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"எனக்குத் தெரியாது! ஒன்று மட்டும் உறுதி. அது என்ன தெரியுமா ரிவேரா. என் பெயர் வரலாற்றில் நிச்சயம் இடம்பிடிக்கும்! எனக்குப் பின்னர் என்போல ஒருவன் இனிப் பிறக்க முடியாது என்பது மட்டும் உறுதி! எங்கோ பொலிவியாவில் பிறந்து பூச்சியாக செத்திருப்பதைவிட.. உலகம் பூராவும் என்னைத் தெரிந்துகொண்டு, என் பெயரை பயத்தோடு சொல்லிக்கொண்டிருக்க, நாளையே நான் செத்துப் போனாலும் இனிக் கவலையில்லை. இதுதான் கார்லோஸ்! உனக்குப் புரிகிறதா ரிவேரா?"

"புரிவது மாதிரியும் இருக்கிறது. புரியாதது மாதிரியும் இருக்கிறது. ஆனால் ஒன்று. உன்னை என்னால் வெறுக்க முடியவில்லை."

"என்னாலும் இப்போது பொறுக்க முடியவில்லை. மடியில் கிடந்து பேசிக்கொண்டிருக்காதே. நேரம் பொன்னானது." கண் சிமிட்டினான்.

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"சொல்லவா?"

"சொல்லேன்!"

சொன்னான். "நீ கெட்டவனேதான். ருசிகரமான கெட்டவன்" என்று சிணுங்கினாள். அவன் சொன்னதை மட்டும் மறுக்கவில்லை.

மாலையில் கார்லோஸ் தங்கியிருந்த இல்லத்தில் இருந்து கார்லோஸும், ரிவேராவும் புறப்பட்டனர். இருவரது கையிலும் ஒவ்வொரு சூட்கேஸ்.

வியன்னாவில் கார்லோஸ் தங்கியிருந்த இல்லத்தில் வெடிகுண்டுகள் தயாரிக்கக்கூடிய சகல ஏற்பாடுகளும் இருந்தன.

கார்லோஸ் தனது பாதுகாப்பு இல்லங்களாக பயன்படுத்திய இல்லங்கள் எந்த நாட்டில் இருந்தாலும், அங்கு குண்டு தயாரிக்கக்கூடிய சகல ஏற்பாடுகளையும் செய்து வைத்திருப்பான். ஆயுதங்களையும் மறைத்து வைத்திருப்பான். அது கார்லோஸின் வழக்கம்.

வியன்னா இல்லத்திலும் அப்படித்தான்.

தயாரிக்கப்பட்ட குண்டுகளை இரண்டு சூட்கேஸ்களில் வைத்தான். ஒன்றை தான் எடுத்துக்கொண்டான். இன்னொன்றை ரிவேராவிடம் கொடுத்திருந்தான்.

இருவரும் ஒன்றாகவே புறப்பட்டு இடையில் இருவேறு திசைகளில் பிரிந்தனர்.

வியன்னாவில் இருந்த ஃபிரான்ஸ் தூதரக கட்டிடத்திற்குள் ரிவேரா நுழைய அதிக தடையிருக்கவில்லை.

வேண்டுமென்றே மார்புகள் தெரியக்கூடியதாக சட்டை போட்டிருந்தாள். பாதுகாப்பு அதிகாரிகள் ரிவேராவின் முகத்தை பார்க்கவில்லை.

"தூதரைக் காணவேண்டும்" என்றாள்.

"முன் அனுமதி இருக்கிறதா?"

"இல்லை. ஆனால் உடனே சந்தித்தாக வேண்டும். நீங்கள் மனம் வைத்தால் முடியாதா?"

பாதுகாப்பு அதிகாரி மசிந்தார்.

உள்ளே தொடர்பு கொண்டு பேசிவிட்டு, "தூதரைப் பார்க்க முடியாது. அவரது செயலாளரைப் பார்க்கலாம்."

"நன்றி" என்றாள். நழுவிய இதயத்தோடு அவளை உள்ளே அழைத்துச் சென்று வரவேற்பறையில் இருக்கவைத்தார்.

"நன்றி. நீங்கள் இன்று மாலையில் ஃபிரீதானே?"

"யெ..யெஸ்! ஏன் கேட்கிறீர்கள்."

"எந்த உதவிக்கும் நன்றியை செயலில் காட்டுவதுதான் எனக்குப் பிடிக்கும். மாலையில் உங்களுக்கு ஒரு சின்ன விருந்து."

"விருந்து மட்டும்தானா?"

"வேறென்ன வேண்டும்?" விழிகளை கிறக்கமாக்கிப் பார்த்தாள். புல்லரித்தது.

"மாலையில் கேட்கிறேன்."

"ஓ.கே.ஓ..... என் சூட்கேஸை வெளியே வைத்துவிட்டு வந்துவிட்டேனே. எடுத்து வரட்டுமா?"

"வேண்டாம்!"

"ஏன்?"

"நானே சென்று எடுத்துவருகிறேன்"

சூட்கேஸ் உள்ளே வந்தது. அவள் அருகில் இருந்தது. அதிகாரி சென்றுவிட்டார். முகமெல்லாம் பல்.

செயலாளர் வந்தார் பேசினார். "பின்னர் ஒருநாள் வாருங்கள். தூதரைப் பார்க்க ஏற்பாடு செய்யலாம்." என்றார்.

நன்றி சொல்லி வெளியே வந்து, பாதுகாப்பு அதிகாரிக்கு போலி முகவரி சொல்லி, மாலையில் தனக்கு கிடைக்கப்போகும் அதிஷ்டத்தை நினைத்து, அந்த நினைப்பில் அவள் சூட்கேசுடன் திரும்பவில்லை என்பதை அதிகாரி கவனிக்கத் தவற, ரிவேரா சென்று விட்டாள்.

அவள் சென்று சரியாக ஐந்து நிமிடத்தில் குண்டு வெடித்தது.

வியன்னாவில் இருந்த ஃபிரான்ஸ் தூதரகம் ஏப்ரல் 19 இல் தகர்ந்து வீழ்ந்தது.

அதே நேரம் வியன்னாவில் வேறொரு பகுதியில் இருந்த எயார் ஃபிரான்ஸ் விமான நிலையமும் கார்லோஸ் வைத்த குண்டில் தகர்ந்தது.

கார்லோஸின் யுத்தப் பிரகடனம். தன் அசுர ரூபத்தை காட்டிக்கொண்டிருந்தது. ஃபிரான்ஸ் தனது அலட்சியத்துக்காக வருந்தியது.

தனது இல்லத்துக்கு திரும்பிய கார்லோஸ் மேற்கு பெய்ரூட்டிற்கு போன் செய்தான்.

மறுமுனைக்கு ஒரே வார்த்தையில் உத்தரவிட்டான். "தந்ததை கொடுத்துவிடு."

ஏப்ரல் 22.

பெய்ரூட்டில் இருந்தது ஃபிரான்ஸ் செய்தி நிறுவனமான ஏ.எஃப்.பியின் அலுவலகம்.

கார்லோஸின் ஆள் மிகக் கச்சிதமாக அங்கு ஒரு சூட்கேஸை வைத்துவிட்டு திரும்பினான். கார்லோஸ் வியன்னா செல்ல முன்னர் தயாரித்துக் கொடுத்த குண்டு அது.

குண்டு ஏமாற்றவில்லை.

ஏ.எஃப்.பி அலுவலகம் நொருங்கியது.

இனி அடுத்த குறி.

(குறி தொடரும்)



பாரிசில் கார்லோஸ் குழுவினரால் குண்டு வைக்கப்பட்ட கடுகதி இரயில் பெட்டி

தருவது—ரசிகன்

# வென்றார்—சென்றார்

## பாராளுமன்றத்தில் கொள்ளை ராணி

ஒரு காலத்தில் பயங்கர கொள்ளைக்காரி. இப்போது பாராளுமன்ற உறுப்பினர். அவர்தான் பூலான்தேவி.

தேர்தலில் அவரைத் தோற்கடிக்க பல வழிகளிலும் முயற்சிகள் நடந்தன. பூலான்தேவியால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களது மனைவிமாரைக் கொண்டுவந்து அவர் போகும் பாதையெங்கும் நிறுத்தினார்கள். வழியை மறித்து போராட்டம் நடத்துவித்தார்கள்.

பூலான்தேவியின் வெற்றி வாய்ப்பு சந்தேகத்துக்கு உரியதாகவே கருதப்பட்டது.

தேர்தல் முடிவுகள் வெளியானபோது அவரது எதிரிகளுக்கெல்லாம் பயங்கர அதிர்ச்சி. பூலான் வென்றுவிட்டார்.

இந்தியாவில் உத்தரபிரதேச மாநிலத்தில் சம்பல் பள்ளத்தாக்கு என்றொரு இடம் இருக்கிறது. அங்கிருந்துதான் செயல்பட்டார் பூலான்தேவி.

அவரது பெயரைக் கேட்டால் சக கொள்ளைக்காரர்களே நடுங்கினார்கள். பொலிசார் பலமுறை அவரைப் பிடிக்க வியூகம் வகுத்துப்பார்த்தார்கள். பலன் பூச்சியம்தான்.

இன்று தமிழ்நாடு-கர்நாடகா மாநிலங்களின் எல்லைக் காடுகளில் இருந்து ஒரு கலக்குக் கலக்கும் சந்தனக் கடத்தல் வீரப்பன் எல்லாம் பூலான் செய்த சாகசங்களோடு ஒப்பிட்டால் கால்தூசிக்கும் பெறமாட்டார்கள்.

பூலான்தேவியின் இளமைக்காலம் சோகமானது. 1957 ஜூலை 15ம் திகதி பிறந்தவர் பூலான். 4 சகோதரிகள், ஒரு சகோதரன். வறுமை அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

சிறுமியாக இருந்த பூலான்தேவியை ஒரு அரைக்கிழவனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அதிலிருந்து ஆரம்பித்தது நரக வாழ்க்கை.



காம வெறி பிடித்த மிருகங்களால் பாலியல்வதைக்கு உள்ளாக்கப்பட்டாள். இளம் வயதிலேயே ஏராளமான சோகங்கள்.

இறுதியாக கொள்ளைக்கூட்டத் தலைவன் ஒருவனது பழக்கம் ஏற்பட்டது. இருவரும் நெருங்கிப் பழகினார்கள்.

அவனும் கொல்லப்பட்ட பின்னர் கொள்ளைக்கூட்டத்துக்கு தானே தலைமை ஏற்றாள் பூலான்தேவி.

பூவொன்று புயலானது. தன்னை பலாத்காரம் செய்த காமமிருகங்களை வேட்டையாடினாள் பூலான்.

வெஹ்மாங் என்னும் கிராமத்திற்குள் புகுந்த பூலானின் படை அக்கிராமத்தில் இருந்த 30 பேரை சுட்டுத்தள்ளியது. அதுதான் பூலான்தேவி ஒரே நாளில் செய்த மிகப் பெரிய கொலை வேட்டை.

பூலான்தேவி மல்லா ஜாதியைச் சேர்ந்தவள். மல்லா ஜாதி மக்கள் பூலானை நேசித்தார்கள். மல்லா கீ பேட்டி என்று பிரியமாக அழைத்தனர். 'மல்லா கீ பேட்டி' என்றால் 'மல்லா ஜாதி மகள்' என்று அர்த்தம்.

பூலானைக் கண்டு கொள்ளையர் கூட்டத்தினர் ஒருபுறம் நடுங்கினார்கள். மறுபுறம் பொலிசார் அவளைப் பிடிக்க முடியாமல் திணறினார்கள்.

கொலை, கொள்ளை, களியாட்டம், தாக்குவது, ஓடி ஒளிவது என்று பழக்கப்பட்ட வாழ்க்கை ஒரு கட்டத்தில் சலித்துப் போனது.

இப்படியே இன்னும் எத்தனை நாளைக்குத்தான் ஓடிக்கொண்டே இருப்பது? என்று யோசித்தாள். அதனால், 'சரணடைந்தால் மன்னிப்பு' என்று அரசாங்கம் விடுத்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டாள்.



பூலான்தேவி

27 கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை ஏற்றுக்கொண்டால்தான் சரணடைவேன் என்றாள்.

எப்படியாவது பூலான் சரணடைந்தால் போதும் என்ற நிலையில் இருந்த அரசாங்கம் பூலானின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டது.

பல்லாயிரம் மக்கள் கூடியிருந்து ஆரவாரகோஷம் எழுப்பிக் கொண்டிருக்க, மகாத்மா காந்தி படத்தின் முன்பாக தனது ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தாள் பூலான்தேவி.

இது நடந்தது 1983 பெப்ரவரி 12ம் திகதி. அப்போது மத்திய பிரதேச முதலமைச்சராக இருந்தவர் அர்ஜுன்சிங்.

பூலான்தேவிக்கு கொடுத்த வாக்குறுதிகளை கிடப்பில் போட்டுவிட்டு 11 ஆண்டுகள் அவளைச் சிறையில் வைத்திருந்தார்கள்.

1994ம் ஆண்டு மத்திய பிரதேச முதல்வர் முலாயம்சிங் யாதவ் பூலான்தேவி மீது சுமத்தப்பட்ட சகல வழக்குகளையும் வாபஸ் பெற்றார். பூலான்தேவி விடுதலையானாள்.

முலாயம்சிங் யாதவ் மீது கொண்ட மதிப்பால் அவரது சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தாள்.

சிறையில் இருந்தபோது பூலானை சந்தித்து அவரது கதையை வெளியிடும் உரிமையைப் பெற்று நாவலாக வெளியிட்டனர். 'பண்டிட் குயின்' என்னும் அந்த நாவல் படமாகி வெளியாகி வசூலில் சக்கைபோடு போடுகிறது.

பூலான்தேவியின் வெற்றிக்கு அந்தப் படமும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. கொள்ளைக்கார ராணியை செக்ஸ் ராணியாக படத்தில் காண்பித்தாலும், அதனால் பூலான்தேவியின் 'இமேஜ்' குறைந்துபோய் விடவில்லை.

தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பூலான்தேவி சொல்லியுள்ள கருத்தைக் கேளுங்கள்:

"இந்தியப் பெண்கள் ஒவ்வொருவரும் தங்களது உரிமைகளுக்காகப் போராட வேண்டும். ஆண்களுக்கு இணையாக தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்." என்று முழங்கியிருக்கிறார்.

இன்னொரு செய்தி. பூலான்தேவி சரணடைந்ததும் அவரது நிபந்தனைகளை கிடப்பில் போட்டாரே அர்ஜுன்சிங் அவர் தேர்தலில் படு தோல்வி கண்டுவிட்டார். பூலானுக்கு அதுவும் இனிப்பான செய்திதான்.

துப்பாக்கிக் குழாய்களால் பேசிய பூலான்தேவி தனது தொண்டைக்குழாய் மூலம் பாராளுமன்றத்தில் எப்படிப் போராடுகிறார் என்று பார்க்கலாம்.

# வினோதமான போராட்டம்

திரைப்பட விழாக்களில் தமது படங்களும் இடம்பெற வேண்டும் என்பதுதான் சகல இயக்குநர்களினதும் ஆசை.

சகல படங்களுக்கும் எப்படி வாய்ப்புக் கொடுப்பது? முடியாதுதானே.

திரைப்பட விழாவில் தமது படத்திற்கு இடமில்லை என்றவுடன் சில இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும் கோபமடைந்து விடுகிறார்கள்.

அவ்வாறு வெறுப்படைந்த இயக்குநர்களில் ஒருவர் டின்டோ பிராஸ். அவர் இத்தாலியைச் சேர்ந்தவர்.

'பெர்மோ போஸ்ட்டா' என்னும் படத்தை அவர் இயக்கியிருந்தார். உலகத் திரைப்பட விழாவில் தனது படத்திற்கும் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்; கிடைக்கவில்லை.

உடனே என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய எதிர்ப்பை புதுமையான முறையில் காட்டிவிட்டார். அது என்ன புதுமை? தன்னுடைய பட நடிகைகளை அழைத்து வந்து விழா அரங்கிற்கு முன்பாக நிற்க வைத்தார். விழா பிரதிநிதிகள் வரும்போது நடிகைகளை மார்புச் சட்டைகளை விலக்கிக் காட்ட வைத்துவிட்டார். சில பிரதிநிதிகள் தலையை குனிந்தபடி சென்றனர். சிலர் ஓசியில் சினிமா பார்ப்பதுபோல நின்று நிதானமாகப் பார்த்துவிட்டுச் சென்றனர். உலகத்தில் எத்தனை விநோதங்கள். கண்றாவி!





படிப்பகம்

www.padippakam.com



## இரட்டையர் திரண்டனர்

பிரிட்டனில் உள்ள மருத்துவ நிபுணர்கள் சிலருக்கு ஒரு வித்தியாச எண்ணம் தோன்றியது. 35 வயதுக்குட்பட்ட ஆயிரம் பெண் இரட்டையர்கள் தேவை. மருத்துவ ஆராய்ச்சிக்காக அவர்களை பரிசோதித்துவிட்டு அனுப்பிவிடுவோம் என்று விளம்பரம் கொடுத்தனர்.

விளம்பரம் கொடுத்த டாக்டர்களுக்கு வியப்பென்றால் வியப்பு. பல்லாயிரம் பெண் இரட்டையர்கள் குவிந்துவிட்டனர். ஒரே இடத்தில் அனைவரையும் கூட வைத்தனர். செலவுகளை மருத்துவ நிறுவனமே ஏற்றது. அவ்வாறு குவிந்த இரட்டையரில் ஒரு பகுதியினரைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.

மரபு வழி மருத்துவ ஆராய்ச்சி ஒன்றுக்காகவே டாக்டர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். அலுப்பேயில்லாத முயற்சிதானே!

## இது அதுவல்ல!



← பதவியில் இருக்கும்போது சிலருக்கு தலைகால் புரிவதில்லை. 1971 இல் பிலிப்பைன்ஸ் நாட்டைக் கட்டியாண்ட சர்வாதிகாரியின் பெயர் மார்க்கோஸ். கோடி கோடியாக சுருட்டினார். பின்னர் கவிழ்ந்து தப்பி ஓடினார். தற்போது அவர் உயிரோடு இல்லை.

அவர் மறைந்தாலும் செய்த பாவம் மறையுமோ? மார்க்கோஸ் வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளாக எடுத்து துருவி துருவி விசாரிக்கிறார்கள். பழமை வாய்ந்த தங்கத்தில் செய்யப்பட்ட புத்தர் சிலை ஒன்றை மார்க்கோஸ் வீட்டில் கொண்டுபோய் ஒளித்துவைத்ததாகப் புகார் இருக்கிறது. சமீபத்தில் மார்க்கோஸ் வீட்டை சோதனையிட்டபோது புத்தர் சிலை ஒன்று மாட்டியது. "அய்யய்யோ இது நீங்கள் நினைக்கும் தங்கச் சிலையல்ல. தங்க முலாம் பூசப்பட்ட வேறு சிலை என்று உரசிக் காண்பிக்கிறார் மார்க்கோஸின் மனைவி இமெல்டா. தேசச் சொத்தை சுரண்டியதால்தானே இப்படி சுரண்டியெல்லாம் காட்டவேண்டி ஏற்பட்டது. வினை விதைத்தால் தினையோ விளையும்?

↓ படத்தில் இருக்கும் உடலுக்கு கிட்டத்தட்ட 4 ஆயிரம் வயது. மேற்கு சீன பகுதியில் உள்ள தரிம் பாலைவனத்தில் புதையுண்டு கிடந்த 'மம்மி' இது. இந்த உடலை 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் புதைத்தவர்கள் மிகப் புத்திசாலிகள். உப்பு, மணல், மற்றும் இரசாயனம் கலந்து உடலை பதப்படுத்தி புதைத்துள்ளனர்.

இந்த உடல் கண்டுபிடிக்கப்பட்டது மூலம் ஒரு வரலாற்று உண்மை தெரியவந்துள்ளது. 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பியர்கள் வியாபாரத்திற்காக மேற்கு சீனாவுக்கு வந்தனர். குடியேறி வாழ்ந்தனர் என்பது தெரிந்துள்ளது. காரணம், இந்த உடல் ஒரு ஐரோப்பியருடையது.

தொடர்ந்தும் அகழ்வாராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. செத்தும் கொடுத்தார் வரலாற்றுத் தகவல் என்று இந்த உடலுக்குரியவரைப் பாராட்டலாம்தானே!

## கை வீசம்மா கை வீசு



'கை வீசம்மா கைவீசு, கடைக்குப் போகலாம் கைவீசு' என்று பாடிக் கொண்டு கரடியாரும் புறப்பட்டுவிட்டார். ஒரு கையைத் தான் வீசலாம். மறுகையில் பொருட்கள் வாங்க கூடை வைத்திருக்கிறாரே! இலண்டனில் சூப்பர் மார்க்கெட் ஒன்றுக்குள் வெகு அக்கறையாக தனக்குத் தேவையான பொருட்களை தெரிந்தெடுக்கப்போகிறாராம். கரடியார். அருமையான படப்பிடிப் புத்தானே? சிவ பூசைக்குள்தானே கரடி வரக்கூடாது. சூப்பர் மார்க்கெட்டுக்குள் வரலாம் தானே!

## வயது 4 ஆயிரம்



## அடேங்கப்பா சாதனை

படத்தில் ஒய்யாரமாகப் போஸ் கொடுப்பவர் பிரான்ஸ் நாட்டு அழகி. பெயர், ஈவ் வலோசிஸ். இவர் இங்கு இடம்பெற என்ன காரணம்? காரணம் இல்லாமல் போகுமா? அழகி உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடிக்கப்போகிறார். அப்படி என்னதான் செய்துவிட்டார் என்றா கேட்கிறீர்கள். வேறொன்றுமில்லை, உலகிலேயே மிகப் பெரிய மார்பகங்கள் உள்ள ஒரே பெண்மணி இவர்தானாம். அதுதான் இவரது உலக சாதனை. என்ன மலைப்பாக இருக்கிறதா? இருக்காதா பின்னே!





படிப்பகம்

www.padippakam.com

# முதல் இரவு மூன்று முறை

தலைப்பைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். சமாச்சாரம் இது தான். பொண்டாட்டி போட்டமுடிச்சு படத்தில் முதல் இரவுக்கு மூன்று இரவுகளாக முயற்சி பண்ணிப்பார்க்கிறார் ராம்கி. அவருக்கு ஜோடி சங்கவி.

முதல்நாள் பால் தம்ளருடன் வந்து ராம்கி காலில் விழுகிறார் சங்கவி. விழுந்தவரை ஆசையோடு தொட்டுத்தூக்கிய ராம்கிக்கு அதிர்ச்சி. சங்கவி மயக்கமாகிக் கிடந்தார். ராம்கிக்கு பலத்த ஏமாற்றம்.

இரண்டாவது நாள் இரவும் சங்கவி மயங்கிச் சரிந்துவிட்டார். தேர்தலில் படுதோல்வி கண்டு கட்டுக்காசும் இழந்த வேட்பாளர்போல நின்றார் ராம்கி.

மூன்றாவது நாள். இந்தத் தடவை எப்படியாவது முயற்சியில் வென்றுவிட வேண்டும் என்று உஷாராக இருந்தார் ராம்கி. சங்கவி உள்ளே வந்ததும் அணைத்துக்கொண்டார். சங்கவியோ இம்முறையும் தடாலென்று மயங்கிவிழுந்தாள். ராம்கி பாடு திண்டாட்டமாகிவிட்டது.

ராம்கியின் முயற்சி வெற்றி பெற்றதா இல்லையா என்பதை படம் வெளியான பின்னர்தான் அறியமுடியும்.

# ஒலிம்பிக்கில் சிவாஜி

சிவாஜி கணேசனுக்கு விளையாட்டுப் போட்டிகள் என்றால் கொள்ளைப் பிரியம். ஒலிம்பிக் போட்டிகளை கண்டுகளிக்க மனைவி கமலாவுடன் செல்லப்போகிறார் சிவாஜி.

உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கானோர் விண்ணப்பித்து இருந்தமையால் கம்பியூட்டர் முறையில் குலுக்கல் நடத்தி ரிக்கெட்டுகளை வழங்கியிருக்கிறார்கள். சிவாஜிக்கு அதிஷ்டம் இருந்தமையால் ரிக்கெட் கிடைத்துவிட்டது.

அமெரிக்காவில் தங்கியிருக்கும்போது தனது உடல்நிலையைப் பரிசோதிக்கவும் திட்டமிட்டுள்ளார் சிவாஜி.

# "திருமணம் இனிக்காது"

## ஹீரா பரபரப்பான பேட்டி

நடிகை ஹீரா உண்மையில் வித்தியாசமானவர்தான். "திருமணம் எப்போது?" என்று எந்த நடிகையிடம் கேட்டாலும் "அதற்கு வயது வரவேண்டுமே" என்பார்கள். அல்லது, "மனதுக்கு பிடித்தவர் கிடைக்கவில்லை" என்பார்கள். ஆனால் ஹீரா பட் பட் என்று சுடுவதுபோல பதில் சொல்லியிருக்கிறார். ஹீராவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள்.

**கேள்வி- கிசு கிசுக்களில் அதிகம் சிக்கிக் கொண்டதால்தான் தமிழ்ப் பட வாய்ப்புக்கள் குறைந்துவிட்டதாகக் கூறுகிறார்களே?**

**ஹீரா-** ஆண், பெண் என்று பாராமல் எல்லோரிடமும் ரொம்ப சகஜமாக பேசும் சுபாவம் கொண்டவள் நான். ஒரு பெண் என்றால் அடங்கி உட்காரணும், ஆண்களைக் கண்டால் ஒதுங்கிப் போகணும். ஆண்களிடம் சிரித்துப் பேசக்கூடாது போன்றவை எல்லாம் எனக்குப் பிடிக்காது. எல்லோரிடமும் சிரித்துப் பேசுவேன். அதனால் என்மேல் நிறையக் கிசு கிசு வரலாம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அது அவரவர் பார்வையில் உள்ள கோளாறு.

**கேள்வி:- உங்கள் திருமணம் எப்போது?**

**ஹீரா:-** என்னுடைய மனநிலைக்கு திருமணம் சரிப்பட்டு வராது. நான் சுதந்திரமான உணர்வுகளைக் கொண்டவள்.

கணவன் என்று ஒருத்தன் வந்து இப்படி நடிக்காதே, அவனுடன் பேசாதே, இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று கட்டுப்பாடுகள் போடுவது எனக்குப் பிடிக்காது. அதைச் செய்யாதே என்றால், வேண்டுமென்றே அதைச் செய்கிற சுபாவம் கொண்டவள் நான்.

வருடத்திற்கு ஒரு தடவை தனியாக வெளிநாடுகளுக்கு சென்று ஒரு மாதம் ஜாலியாக சுற்றிப்பார்த்துவிட்டு வருகிறவள். திருமணத்திற்கு பின்னர் இந்த சுதந்திரம் எனக்குக் கிடைக்குமா? இப்போது எனக்குப் பிடித்திருப்பது சினிமா மட்டும்தான். என்கிறார் ஹீரா.

'கிருஷ்ணா', 'காதல் கோட்டை', 'அமைதிப்பூங்கா', மற்றும் பாலுமகேந்திராவின் ஹிந்திப்படம் ஆகியவற்றில் ஹீரா நடித்துக்கொண்டிருக்கிறார்.







# சினி விசிட்

# ஒரு நடிகையும் ஒரு பங்களாவும்

தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் சுகன்ய நடிகைக்கு ஒரு புறம் மகிழ்ச்சி, மறுபுறம் சின்ன சின்ன அச்சம்.

மகிழ்ச்சிக்கு காரணம் என்ன தெரியுமோ? சுகன்ய நடிகையோடு நெருக்கமாக இருந்த முன்னாள் அமைச்சர் ஒரு பங்களா வாங்கி கொடுத்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தை முன்கூட்டியே ஊகித்துவிட்ட அமைச்சர் நடிகையிடம் பங்களாவை திருப்பித் தருமாறு கேட்டிருக்கிறார். பங்களாவின் பெறுமதி கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய். அதில் பாதிப்பணம் தருவதாகவும் பங்களாவை திருப்பித் தருமாறும் கேட்டிருந்தார். சுகன்ய நடிகையோ முடியாது என்றுவிட்டார். முன்னாள் அமைச்சர் மிரட்டலில் இறங்கியும் நடிகை மசியவில்லை.

இந்நிலையில் ஆட்சி மாறிவிட்டது. இனி முன்னாள் அமைச்சரின் பருப்பு வேகாது. நடிகைக்குத்தான் பங்களா சொந்தம். அதனால் மகிழ்ச்சியாக இருக்கிறார் சுகன்ய நடிகை.

யார் யாரையோ எல்லாம் மசியவைக்க என்னை பயன்படுத்தினார்கள் அவர் சொன்னதால்தானே நானும் ஒப்புக் கொண்டேன். பின்னர் பங்களாவைக் கேட்டால் என்ன நியாயம்? அது நடிகையின் வாதம்.

ஆட்சி மாறியதால் நிம்மதிப் பெருமூச்சு விட்டாலும், புதிய ஆட்சியில் தனக்கு ஏதாவது தொந்தரவு ஏற்படலாமோ என்று பயந்து கொண்டும் இருக்கிறார் நடிகை.

புதிய ஆட்சிக்கு நெருக்கமான தயாரிப்பாளர்களை கைக்குள் போட்டு தன்னை தற்காத்துக் கொள்ளவும் யோசித்துவருகிறார் சுகன்ய நடிகை.

# இரு

அதிரடி
பொறுத்தவ
நடிக்க ஒப்
களில் நடிக்
அக்கா
சிறு சிறு தி
விதமான ச
ஆனந்த்
ஆகியோரும்
விஜயசா
படங்களை

# வில்

வில்லன்
வில்லன் நடி
தெலுங்கு
நடித்தவர். ச
அமோக வெ
வெற்றி பெற்

# சங்கவியின் கவனிப்பு! கடற்

யுவராணியோடு கிசு கிசுக்கப்பட்ட நடிகர் விக்னேஷ். இளம் நடிகரான விக் நடிக்கும் நடிகைகள் விடயத்தில் சற்று ஈடுபாடு காட்டும் ஜாலி டைப்.

'மண்ணுக்குல் மரியாதை' படத்தில் விக்னேஷ் ஜோடியாக நடித்தவர் சங்கவி காட்சிகளில் சங்கவியும் பூரணமாக ஒத்துழைத்து விக்னேஷின் அன்பை பெற்ற

படம் வெளியாகி தோல்வியடைந்தமையால் விக்னேஷ் - சங்கவி ஜோடி ராசிய மாறமுடியாமல் போனது. சங்கவியும் வேறு இளம் ஹீரோக்களுடன் அவரவ ஒத்துழைத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

அப்படியிருந்தும் விக்னேசும் சங்கவியும் தற்போதும் எப்போதா கொள்கிறார்களாம். விக்னேஷ் பிஸியாக இல்லாவிட்டாலும் சங் அதனால் மாதத்தில் ஒரு தடவைதான் சந்திப்பு.

விக்னேஷ்மீது சங்கவிக்கு என்ன பிடிப் பெரிய ஹீரோவாக விக்னேஷ் விட்டால் என்ன செ அதுதான் இப்போதே த பண்ணி வைக்கிறார்.

விக்னேஷ்-சங்கவி வரும் சந்திக்கும் விவக இரகசியமாகவே இரு திடீரென்று வெளியான காரணம் ஒரு நிருபர்

சென்னைக் கடற் ஒன்றின் விடுதியில் இரு தங்கியிருந்து, கால ஒன்றாக வெளியேறி கண்டுவிட்டார் நிருபர். ஓட்டமாக ஓடிப்போ கிறார். இவரைக் கண் கார் கதவை ஓங்கி அ முடியபடி பறந்துவிட் களாம்.

# விலை 4 கோ

அரவிந்தசாமி-ஸ்ரீ நடித்து வெளியாகிய படம் 'தேவராகம்'. த விட இந்தியில் அ வரவேற்பை பெற்றுள் இந்திய பண மதிப்பி சுமார் 4 கோடி ரூபா இந்தியில் விற் யாகியுள்ளது.

# முகப்பி

கௌத

பிரா

படம்:-
சிவ

# மினி சினி

★ சரத்குமார் நடித்த 'நாடோடி மன்னன்' தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சிறிது இடைவெளிக்குப் பின்னர் புதிய படமொன்றை இயக்கவிருக்கிறார் மணிவாசகம். இதில் பிரபு ஹீரோவாக நடிக்கிறார்.

★ சிவாஜி-மோகன்லால் மலையாளத்தில் நடித்துவரும் 'யாத்ரா மொழி' படத்தின் தமிழ் உரிமையை 'சின்ன மாப்ளே..' படத்தைத் தயாரித்த அம்மா கிரியேசன்ஸ் டி.சிவா வாங்கியுள்ளார்.

★ தமிழில் ஓரிரு படங்களில் நடித்து வரும் ரஞ்சிதா, தெலுங்கில் பார்வையைத் திருப்பியுள்ளார். தெலுங்கில் இவர் ஜெகபதிபாபுவுக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ விஜயகாந்த்- சங்கீதா நடிக்கும் 'அலெக்சாண்டர்' படத்தை இயக்கி வரும் கேயார், அடுத்து இயக்கவிருக்கும் 'காதல் ரோஜாவே' படத்தில் புதுமுகங்களை நடிக்க வைக்கவுள்ளார்.

★ அரவிந்தசாமி-ஸ்ரீதேவி இணைந்து நடித்த தேவராகம் படத்தைத் தயாரித்த வி.என்.சுந்தர் அடுத்து தயாரிக்கும் படத்திலும் அரவிந்தசாமி கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடி 'ரங்கீலா' புகழ் ஊர்மிளா.

★ 'காவியத் தலைவன்', 'முற்றுகை' ஆகிய படங்களுக்கு இசையமைத்த சித்தார்த்தா தற்போது தனது பெயரை அரவிந்த் என்று மாற்றிக் கொண்டுள்ளார். செல்வமணியின் 'ராஜாளி' படத்திற்கு அரவிந்த் என்ற பெயரிலேயே இசையமைத்துள்ளார்.

★ தமிழில் 'மன்னவா' படத்தில் நடித்து வரும் ஊர்வசி, கன்னடத்தில் பிரபல நடிகரான ஆனந்த்நாக் ஜோடியாக புதிய படமொன்றில் நடித்து வருகிறார். இப்படத்தில் விஷ்ணுவர்த்தன்-குஷ்பு ஜோடியும் நடிக்கிறார்கள்.

★ துரைப்பாண்டியன் இயக்கத்தில் நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் 'புலி பொறந்த மண்ணு' படத்தில் நெப்போலியனுக்கு தந்தையாக கௌரவ வேடத்தில் நடிக்கிறார் அருண்பாண்டியன்.

★ 'பூவரசன்' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடித்து வரும் ரக்ஷனா அந்தப் படம் வெளிவருவதற்கு முன்னரே பார்த்திபனுக்கு ஜோடியாக 'டாட்டாபிர்லா' படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் படங்களில் ஒன்றான 'சக்தி' படத்தின் இயக்குநரான ரகுராஜ், ஒரு முன்னாள் பத்திரிகையாளர்.



விக்னேஷ்-சங்கவி



படிப்பகம்

www.padippakam.com

## வளர்கிறது "அலெக்சாண்டர்"

விஜயகாந்த்-ரோஜா நடிக்க, பாரதிராஜா இயக்கிய தமிழ் செல்வன் படம் திரைக்கு வரப்போகிறது.

விஜயகாந்த்-சங்கீதா நடிக்கும் 'அலெக்சாண்டர்' படம் வேகமாக வளர்ந்து வருகிறது. விஜய்காந்த்-சங்கீதா ஜோடியாக நடிக்கும் முதல் படம் இதுதான்.

கோவிலில் சாமி கும்பிடுகிறார் சங்கீதா. திரும்பிச் செல்லும்போது விஜயகாந்துடன் மோதிவிடுகிறார். அப்போது சங்கீதாவின் தலையில் இருந்த பூ கீழே விழுகிறது.

மன்னிப்புக் கேட்கிறார் சங்கீதா. தெரியாமல் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கிறாய். தெரிந்து செய்த தவறை ஏன் மறைக்கிறாய்?" என்று கேட்கிறார் விஜயகாந்த். "என்ன தவறு?" என்று சங்கீதா கேட்க, "அருண்குமாரை ஏன் கொலை செய்தாய்?" என்று கேட்கிறார் விஜயகாந்த். இக் காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டுள்ளது.

மணிவண்ணன், பிரகாஷ்ராஜ், கவிதா ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம், கேயார். கதை, திரைக்கதை, பஞ்சு அருணாசலம்.

## மறவாத நன்றி

'அமராவதி' படத்தில் அறிமுகமாகி 'ஆசை' படத்தில் பிரபலமானவர் அஜித்குமார். இடையில் தளர்ந்திருந்த அஜித்குமாருக்கு 'பவித்ரா' படம் மூலம் மறுவாழ்வு கொடுத்தவர் இயக்குநர் சுபாஷ்.

இப்போது அஜித் படுபடு பிஸி. அப்படியிருந்தும் சுபாஷ் இயக்கவுள்ள புதிய படத்தில் நடிக்க உடனே சம்மதித்துவிட்டார். படத்தின் பெயர்: 'தாரா மை டார்லிங்'.



கார்த்திக்-நக்மா
படம்: மேட்டுக்குடி

# கௌதமியின் நண்பர்கள் யார்?
## மனம் திறந்து பதில் சொல்கிறார்

கமலுடன் நெருக்கமான நடிகைகளில் ஒருவர் கௌதமி. கமல் படம் என்றால் அதில் கௌதமியும் இருப்பார். கௌதமிக்கு கமல் மறக்காமல் முத்தமும் கொடுப்பார் என்னுமளவுக்கு நெருக்கமாக இருந்தவர் கௌதமி.

கமலின் சொந்தப்படமான அபூர்வ சகோதரர்கள், தேவர் மகன், நம்மவர், குருதிப்புனல் ஆகியவற்றில் கமலுக்கு ஈடுகொடுத்தார் கௌதமி.

'இந்தியன்' படம் கமலின் சொந்தப்படம் அல்ல. ஆனாலும் கமல் முழு ஈடுபாடுகாட்டிய படம். அதனால் கமலின் சிபாரிசில் கௌதமி நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கௌதமிக்கு பதிலாக சுகன்யா நடித்திருக்கிறார்.

"இந்தியன் படத்தில் ஏன் நடிக்கவில்லை? கமலுடன் தகராறு ஏற்பட்டுவிட்டதா?" கௌதமி பதில் சொல்கிறார்.

"கமலின் சொந்தப்படமல்ல என்பது முதல் காரணம். குருதிப்புனலில் எனது நடிப்பு ரசிகர்களின் மனதில் பதிந்திருப்பதால், அடுத்த படத்திலும் நான் நடித்தால் சரியாக வராமல் போகலாம் என்று நினைத்திருக்கலாம். மற்றபடி கமல் எனது நல்ல நண்பராகத்தான் இருக்கிறார்."

இந்தியில் மிதுன் சக்கரவர்த்தியுடன் நெருக்கமாக பேசப்பட்டது தொடர்பாகவும் கௌதமி விளக்கியுள்ளார்.

"இந்திப் படவுலகில் சுதந்திரம் அதிகம். தமிழ்ப் படவுலகம் போல அங்குள்ள நடிகர்களோ, நடிகைகளோ போலி வேடம் போடுவதில்லை. தமக்கு பிடித்தமானவர்களுடன் நெருங்கிப் பழகுகிறார்கள். இந்தியில் எனக்கு மிதுன், ஜாக்கி ஷெராப் போன்ற நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களோடு மனம் விட்டுப் பழகினேன் அவ்வளவுதான்."

'தமிழ் நடிகர்களில் கமலோடு மட்டும்தான் கௌதமி முத்தக் காட்சிகளில் நடிப்பாரா?' இல்லை. ஆனால் எல்லோருடனும் நடிப்பேன் என்றும் சொல்லமாட்டேன் என்கிறார் கௌதமி.



வினீத்-யுவராணி
படம்: சக்தி

## ...வேடங்களில் விஜயசாந்தி

...ண்டைக்காட்சிகளில் நடிப்பது விஜயசாந்தியைப் ... அல்வா சாப்பிடுவது மாதிரி. விஜயசாந்தி புதிதாக ...மாகியுள்ள படம் அபூர்வ சகோதரிகள். இரு வேடங் ...ார் விஜயசாந்தி.

...த்தில் நாகக் கன்னியாகவும், இன்னொரு வேடத்தில் ...டு தொழில் செய்யும் பெண்ணாகவும் நடிக்கிறார். 5 ...டைக்காட்சிகளிலும் நடிக்கப்போகிறார்.

...க்ரம், சங்கவி, சுசன்கான், சில்க் சுமிதா, சுரேந்தர் ...டிக்கின்றனர்.

... நடித்த 'ஆட்டோ ராணி' 'ஸ்ரீட் பைட்டர்' ஆகிய ...க்கிய பி.கோபால் இயக்குகிறார்.

## ...னுக்கு அமோக வெற்றி

...ர்கள் கதாநாயகர்களாக மாறுவது புதிய விஷயம் அல்ல. ஒரு ...அரசியலில் கதாநாயகனாக மாறியுள்ளது புதிய விஷயம். ...கர் சத்தியநாராயணா 700க்கு மேற்பட்ட படங்களில் வில்லனாக ...பாபு நாயுடு கட்சி சார்பாக எம்.பி.பதவிக்கு போட்டியிட்டார். ...பெற்றுவிட்டார். 80 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் ...சத்திருக்கிறார்.

## ...ரையில் சந்திப்பு!

... தன்னுடன் ...நெருக்கமான ...டார். ... ஜோடியாக ...ளுக்கு ஏற்ப ... சந்தித்துக் ... படு பிஸி. ... திடீரென்று ...



பிரசாந்த்-சங்கவி
படம்: மன்னவா

## வினிதாவின் வேகம்

காதல் காட்சிகளில் நடிக்கும்போது உணர்ச்சிவசப்படுவீர்களா? என்று எந்த நடிகரிடமும், நடிகையிடமும் கேட்டாலும் 'இல்லை' என்று பதில் வரும். 'எல்லாம் நடிப்புத்தானே' என்பார்கள்.

ராம்கியும்-வினிதாவும் நடித்துவரும் படம் ஒன்றில் முத்தக் காட்சி படமாக்கப்பட்டது. உதட்டோடு உதடு சேர முத்தம் கொடுத்தார்கள். காட்சி முடிந்தது என்று 'கட் கட்' என்று குரல் கொடுத்தார் இயக்குநர். கமரா ஓய்ந்துவிட்டது. ஆனால் நடிகையோ விடுவதாக இல்லை. நடிகரின் கீழ் உதட்டை கடித்து விட்டார் நடிகை.

இதனையெல்லாம் படப்பிடிப்பிலா வைத்துக் கொள்வது. அவர் என்ன ஓடியா போகப்போகிறார்? என்று ஜோக்கடித்தாராம் இயக்குநர்.

இச் செய்தி தமிழக சினிமா இதழ்கள் சிலவற்றிலும் வெளியாகிவிட்டது. 'நான் ஒன்றும் உணர்ச்சிவசப் படவில்லை' என்று சொல்லியிருக்கிறார் ராம்கி.

## குஷ்புவுக்கு கடிதம்

குஷ்பு நடித்த நாட்டுப்புறப்பாட்டு யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு வெற்றி குவித்துவிட்டது. குஷ்புவின் கரகாட்டதைப் பாராட்டி ரசிகர்கள் எழுதிய கடிதங்கள் குஷ்பு வீட்டில் குவிந்து கிடக்கிறதாம்.

பெரிய பட்ஜெட் படம் எடுக்க பலரும் ஓடித்திரியும் போது, சிறிய பட்ஜெட்டில் வெளுத்து வாங்கியுள்ளது 'நாட்டுப்புறபாட்டு'

அதுபோல சிறிய பட்ஜெட் படமான 'காலம் மாறிப் போச்சு' படமும் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. பெரிய தயாரிப்பாளர்கள் ஆச்சரியத்தில் திறந்தவாய் மூடாமல் இருக்கிறார்கள்.

## மாறியது ஆட்சி! மாட்டிக் கொண்டார் ஆச்சி!

நடிகை மனோரமா ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்து உலக சாதனைப்புத்தகமான கின்னஸில் இடம்பிடித்தவர். பொம்பிளை சிவாஜி என்றும், ஆச்சி என்றும் அழைக்கப்படுபவர்.

தமிழகத் தேர்தலில் ஜெயலலிதாவை ஆதரித்து சூறாவளிப் பிரசாரம் செய்தார். பிரசாரம் செய்தவர் நாகாக்கத் தவறிவிட்டார். ரஜினி காந்த்தை கண்டபடி வசைபாடிவிட்டார்.

மன்னிப்பு கேட்க வேண்டும் மனோரமா என்று ரஜினி ரசிகர்கள் கொதித்து நிற்கிறார்கள். 'மன்னிப்பா? அது இந்த மனோரமாவின் அகராதியில் கிடையாது! என்று வரிந்துகட்டி நிற்கிறார் மனோரமா.

ஆட்சி மாறிவிட்டது. ஆச்சியை தமது படங்களில் ஒப்பந்தம் செய்தால் வீண் பிரச்சனையாகிவிடும் என்று தயங்கத் தொடங்கிவிட்டார்கள் பட அதிபர்கள்.

ஏற்கனவே ஒப்பந்தமான இரண்டு படங்களில் இருந்து மனோரமா தூக்கப்பட்டு விட்டார்.

ரஜினியை பகைத்துக்கொள்ள யாருமே விரும்பமாட்டார்கள் என்பதால் ஆச்சி பாடு திண்டாட்டமாகியிருக்கிறது. வாயால் கெட்டார் ஆச்சி.

## எம்.பிகளான நடிகைகள்

தமிழ்நாட்டில் நடிகைகளை முற்றாக நிராகரித்து தோற்கடித்துவிட்டார்கள் தமிழக வாக்காளர்கள்.

ஆந்திர மாநிலத்தில் இரண்டு நடிகைகள் எம்.பியாகியுள்ளனர். ஒருவர் ஜெயப்பிரதா. இன்னொருவர் சாரதா. நடிப்பில் ஊர்வசி விருது பெற்ற சாராதாவுக்கு வாக்காளர்கள் கொடுத்துள்ள விருது எம்.பி.பதவி.

சாரதாவுக்கு ஆதரவாக நடிகை விஜயசாந்தி பிரசாரம் செய்திருந்தார். சாரதாவும், ஜெயப்பிரதாவும் தெலுங்கு தேசம் (சந்திரபாபு நாயுடு) கட்சி சார்ப்பாகவே போட்டியிட்டு வென்றுள்ளனர்.

## ராணியின் கனவில்......

நடிகை யுவராணி இப்போது கனவிலும் நினைத்துப் பார்ப்பது 'சக்தி' படத்தை பற்றித் தான்.

குஞ்சுமோன் தயாரிப்பில் பணத்தைக் கொட்டி எடுக்கப்படும் படம் சக்தி. 'பாட்ஷா' படத்தின் பின்னர் இனிமேல் அக்கா, தங்கை வேஷம்தான் கதி என்று நினைத்தவர் யுவராணி. அவரை அழைத்து கதாநாயகியாக பிரமாண்டமான படத்தில் நடிக்கவைத்திருக்கிறார் குஞ்சுமோன். 'சக்தி' வசூலில் சக்தியைக் காட்டினால் எங்கோ போய் விடுவார் யுவராணி.



வடிவேலு-கோவை சரளா
படம்: காலம் மாறிப்போச்சு



படிப்பகம்

www.padippakam.com



# நீங்களும் ஜெயிக்கலாம்

மற்றவர்களுடன் நன்றாகப் பழகுங்கள். உங்கள் இனிய பழக்கத்தால் அவர்களை வெற்றி கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் வெற்றி, மகிழ்ச்சி எல்லாம் மற்றவர்கள் மூலமாகத்தான் கிடைக்கின்றது என்பதை உணருங்கள். மற்றவர்களின் எண்ண ஓட்டங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களின் விருப்பங்களையும் தேவைகளையும், அவர்களின் இலட்சியங்கள், ஆர்வங்களையும் அறிந்து கொள்ளுங்கள். அவர்களின் தேவைகளில் ஒன்றையாவது உங்களால் நிறைவேற்றித்தர முடியுமென்றால் சந்தோஷமாகச் செய்யுங்கள்.

மற்றவர்களிடமிருந்து நீங்கள் ஒன்றை எதிர்பார்த்தால் உங்களிடமிருந்தும் அவர்கள் ஒன்றை எதிர்பார்க்க வாய்ப்பு உண்டு என்பதை உணருங்கள். உங்களுக்கு மற்றவர்கள் உதவி செய்ய வேண்டுமென்றால், மற்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்யுங்கள். 'நான்', 'நீ' என்று பிரித்து வைக்காமல் 'நாம்' என்று ஆகிப்போனால், வாழ்வில் பல விஷயம் சுலபமாகி விடும்.

யாரோடு பேசினாலும், அவர்களின் ஆர்வம் மற்றும் தேவை, இலட்சியங்களைப் பற்றிப் பேசுங்கள். நல்லதைப் பாராட்டுங்கள். தட்டிக் கொடுங்கள். ஆலோசனை சொல்லுங்கள். அவர்களின் தேவையை ஈடேற்றுவதில் நீங்கள் எவ்வளவு உதவி செய்கிறீர்களோ, அந்த அளவு அவரிடம் நீங்கள் முக்கியத்துவம் பெறுவீர்கள். மனிதர்களிடம் எந்த அளவு நீங்கள் முக்கியத்துவம் பெறுகிறீர்களோ அந்த அளவு உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.



மற்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும் போது பதிலுக்கு அவர்களும் உதவி செய்யத் துவங்குகிறார்கள். ஒருவரை அழுத்திவிட்டுத் தான் நீங்கள் மேலே வர வேண்டும் என்றில்லை.

ஒருவருக்கு உதவி செய்து, அவரின் உதவியுமின்றி, தானாக உச்சிக்குப் போவதற்கு நாமொன்றும் ஏவி விடப்பட்ட ஏவுகணையோ, தானே பறக்கும் பறவையோ அல்ல. மனிதர்கள் படிப்படியாகத்தான் மேலே வரவேண்டும்.

நம்மால் உதவி பெற்ற, நம்மீது அன்பு வைத்த மக்களின் உதவி மிக அவசியம். மற்றவர்களுடன் நம்பிக்கையாய்ப் பேசுங்கள். எல்லோராலும் வரவேற்கப்படும் நபராக நீங்கள் மாறினால், வெற்றி உங்களைத் தேடி வருவது உறுதி.

# கர்ப்பிணிப் பெண்கள் கவலைப்படலாமா?

தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள உமா வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் உமாதேவியின் பேட்டி.

பிரசவ சிகிச்சையில் கைராசிக்கார டாக்டர் என்று பெயரெடுத்தவர் உமாதேவி.

**கே:- கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படக்கூடிய ஆரோக்கிய பிரச்சனைகள் என்ன டாக்டர்?**

ப:- கடும் வேலை செய்வதால் இரத்தச் சோகை நோய் ஏற்படுகிறது. பின்னர் தட்டம்மை போன்ற வைரஸ் கிருமிகளின் பாதிப்பினால் வரக்கூடிய நோய்களும் ஏற்படுகிறது. சுத்தம் இல்லாத தண்ணீர், வேலைப்பளு போன்றவைதான் ஆரோக்கியப் பாதிப்புக்கு காரணங்கள்.

**கே:- பிரசவ காலத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் மனக்கவலைகள் குழந்தையைப் பாதிக்குமா?**

ப:- அளவுக்கதிகமாக ஏற்படும் கவலைகள் கண்டிப்பாகக் குழந்தைகளைப் பாதிக்கும்.

**கே:- எந்தவகையில் பாதிக்கும் டாக்டர்?**

ப:- ஆராய்ச்சியாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், மன அழுத்தம் இருக்கிற பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு எதையும் திடமாக கையாளும் தெளிவான அறிவுக்கூர்மை இல்லாமல் போகும். தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**கே:- அடிக்கடி 'ஸ்கேன்' செய்வதால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படுமா?**

ப:- இதுவரையில் எந்த முறையீடும் வந்ததில்லை. வெளிநாடுகளில் மாதம் ஒரு முறை 'ஸ்கேன்' எடுத்துப் பார்க்கிறார்கள்.

**கே:- கர்ப்பிணிப் பெண்கள் எந்த உணவுகளை உட்கொள்ளலாம்?**

ப:- இயற்கையாகக் கிடைக்கும் உணவுவகைகளை சாப்பிடுவது நல்லது. கீரை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சோயாபீன்ஸ், பட்டாணி மற்றும் பச்சைக் காய்கறிகள் சாப்பிடலாம். அதனால் தேவையானளவு விட்டமீன், கல்சியம், புரோட்டின் என்பன கிடைத்துவிடும். பேரீச்சம்பழமும் சாப்பிடலாம். இரும்புச் சத்து அதில் இருக்கிறது.

**கே:- சாப்பிடக்கூடாத உணவுப் பொருட்கள்?**

ப:- பப்பாளி, அன்னாசி சாப்பிடக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆனாலும் வழக்கமாக சாப்பிடுபவர்களுக்கு ஒன்றும் ஆகாது. அதிகப்படியாகச் சாப்பிட்டால் ஒருவேளை கெடுதல் ஆகலாம்.



**கே:- சுகப்பிரசவம் பெறுவதற்கு என்ன யோசனை சொல்கிறீர்கள் டாக்டர்?**

ப:- நல்ல சாப்பாடு. நல்ல தூக்கம். அதற்காக சாப்பிட்டு சாப்பிட்டுத் தூங்கவும் கூடாது. கொஞ்சம் உழைப்பும் வேண்டும். ஒழுங்காக, கிரமமாக செக்-அப் பண்ணிக் கொள்வது நல்லது.

# பெண்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

சமீபத்திய ஒரு ஆராய்ச்சி முடிவின் படி, ஆண், மற்றும் பெண்ணின் மூளை வேலை செய்யும் திறன் வேறுபடுவதாகத் தெரிவித்துள்ளார் கலிபோர்னியா மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூளை ஆராய்ச்சியாளர் ஆன் மாயர்.

மூளை வேலை செய்யும் திறன் ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்தெந்த விதத்தில் மாறுபடுகிறது என்று பார்ப்போமா?

* ஒரு விஷயத்தைப் பற்றி மற்றவர்களுக்குப் புரிய வைக்க ஆண்கள், வார்த்தைகளோடு, கைகளையும், கண்களையும் அதிகம் பயன்படுத்துவர். பெண்கள், வெறும் வாய் வார்த்தை மூலமே புரிய வைக்கும் திறம் படைத்தவர்கள்.
* ஆண்களால் பகலில் நன்றாகச் சிந்திக்க முடியும். பெண்களின் சிந்திக்கும் அறிவு இரவில் நன்றாக இருக்கும்.



* பெண்களுக்கு மோப்ப சக்தி அதிகம்- ஆண்களுக்குக் குறைவு.
* பெண்கள் அடிக்கடி ஏதாவது ஒரு பாடலை முணுமுணுத்துக் கொண்டிருப்பர், ஆனால் ஆண்களால் அது முடியாது. ஆண்களுக்கு வரும் கனவுகள் பெரும்பாலும் சண்டை சச்சரவுகள், பிரச்சனைகள் தொடர்பானவையாகவே இருக்கும். இவர்களது கனவில் ஒரு பெண் வந்து விட்டால், அது 'விவகாரமாக' தான் இருக்கும்.
* மற்றவர்களுடன் தோழமையுடன் இருப்பது போன்ற கனவுகள் தான் பெண்களுக்குப் பெரும்பாலும் வரும். எப்பொழுதாவது தான் 'விவகாரமான' கனவுகள் வரும். மேலும், பெண்கள் ஒரு பிரச்சனையை எல்லாப் பக்கங்களில் இருந்தும் பார்க்கும் திறம் படைத்தவர்கள்.

எல்லாவிதத்திலுமே பெண்களின் மூளை, ஆண்களின் மூளையை விட சிறப்பானதாகவே செயற்படுகிறது என்கிறார் இங்கிலாந்தைச் சேர்ந்த மனோதத்துவ ஆராய்ச்சியாளர் கிளன் வில்சன் என்பவர்.

# சமைப்போம் சுவைப்போம் (தொகுத்துத் தருவது)

**– சுகந்தினி –**

## இறால் கூட்டு

**தேவையான பொருட்கள்:**

இறால்- 1/2 கிலோ
முட்டைக்கோவா- 200 கிராம்
பெரிய வெங்காயம் - 2
இஞ்சி - 1 துண்டு
மஞ்சள்தூள் - 1 சிட்டிகை
எண்ணெய், உப்பு - தேவையான அளவு
கறிவேப்பிலை - சிறிது.

**செய்முறை:**

இறாலைச் சுத்தம் செய்து கொள்ளவும். முட்டைக்கோவாவைத் துருவலாக நறுக்கிக் கொள்வும். ஒரு பாத்திரத்தில் முட்டைக் கோவா, மஞ்சள் தூள் போட்டு வேக வைத்துத் தண்ணீர் வடிகட்டி இறக்கி வைக்கவும். தக்காளி, வெங்காயம், பூண்டு, இஞ்சி, கறிவேப்பிலை ஆகியவற்றை அம்மியில் தட்டி (அரைக்காமல்) எடுக்கவும்.

ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி, தட்டி வைத்த கலவையைப் போட்டு வதக்கி அரை டம்ளர் தண்ணீர் உற்றி மிளகாய்த்தூள், உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். பிறகு இறாலைப் போடவும். 5 நிமிடம் கழித்து இறால் வெந்ததும் வேக வைத்த முட்டைக் கோவாவைக் கொட்டி இரண்டையும் நன்றாகக் கிளறி சுண்ட வதக்கவும். தீயை நிதானமாக எரியவிட வேண்டும். கலவை நன்றாக வெந்து மணமாக வந்ததும் இறக்கி பரிமாறவும்.

# காய்கறிகளும் பதமும்

இயற்கையாகவே காய்கறிகளில் விட்டமின்கள், தாதுப்பொருட்கள் கல்சியம் மற்றும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளன. அதனால் அவை வீணாகாமல் சமைப்பது அவசியம். புதிதாகவுள்ள காய்கறிகளைத்தான் வாங்க வேண்டும். காய்கறிகளை வாங்கியவுடன் நன்கு தண்ணீரில் அலச வேண்டும். வெட்டுவதற்கு முன் கழுவ வேண்டும். வெட்டிய பின் கழுவினால் விட்டமின்கள் அழிந்துவிடும்.

காய்கறிகளைப் பொடியாக அரியாமல் கொஞ்சம் பெரிய துண்டாக அரிய வேண்டும்.

மேல் தோலை மிகவும் ஆழமாகச் சீவக் கூடாது. இலேசாகச்சீவி எடுக்க வேண்டும். ஏனெனில் காய்கறிகளின் தோலில் நிறைய சத்துக்கள் உள்ளது.

அதிக நேரம் வேக வைக்கக்கூடாது. அளவான தண்ணீரில் ஊற்றி வேக விட வேண்டும். அத்துடன் வேக வைத்த நீரை வெளியே கொட்டவும் கூடாது. சத்துக்கள் அழிந்து விடும். செப்புப் பாத்திரத்தில் வேகவைத்தால் காய்கறிகளில் உள்ள சில உயிர்ச் சத்துக்கள் அழிந்துவிடும்.

சமைத்த உணவை நான்கு மணி நேரத்திற்குள் சாப்பிட்டு முடித்து விட வேண்டும்.

திரும்பத் திரும்ப சமைத்ததை சுடவைக்கவும் கூடாது. இதனால் காய்களின் சத்துக்களும் அழிந்துவிடும். சுவையும் குறைந்து விடும்.

உணவில் அன்றாடம் ஏதாவது ஒரு கீரையை உபயோகிக்க வேண்டும்.

இப்படி இயற்கையிலே கிடைக்கும் சத்தான காய்கறிகளை வாங்கி முறைப்படி சமைத்துச் சாப்பிட்டால் டொனிக்கும், சத்து மாத்திரைகளும் வாங்கும் அவசியம் இல்லை.

## வீட்டுக் குறிப்புக்கள்

* ஒரு சிட்டிகை சமையல் சோடா சேர்த்துப் பாலைக் காய்ச்சி வைத்தால் நீண்ட நேரம் கெடாமல் இருக்கும்.
* பாகற்காயின் கொட்டைகளை நீக்கி, தயிரிலோ அல்லது மோரிலோ சிறிது உப்புப் போட்டு ஊற வைத்து ஒரு மணி நேரங்கழித்து எடுத்துச் சமைத்தால் பாகற்காயின் கசப்புச்சுவை மாறிவிடும்.
* இனிப்புப் பலகாரம் வைத்துள்ள இடத்தைச் சுற்றி சிறிது மஞ்சள் தூள் தூவி வைத்தால் எறும்புகள் அதனை நெருங்காது.

# ஒலிம்பிக்கில் பெண்கள் பிரச்சனை

இம்முறை அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் நடக்கப்போவதுதான் நூறாவது ஒலிம்பிக் போட்டி. எதிர்வரும் ஜூலை மாதம் 19ம் திகதி ஆரம்பமாகிறது.

ஒலிம்பிக் போட்டிக்காக பத்தாயிரம் தீப்பந்தங்கள் தயாராகின்றன. அமெரிக்காவில் ஒரு மைலுக்கு ஒரு தீப்பந்தம் என்ற கணக்கில் எடுத்துச் சென்று ஒலிம்பிச் ஜோதியை ஏற்றி வைக்கப்போகிறார்கள். இந்த ஜோதி காற்று அடித்தாலும், மழை கொட்டினாலும் அணையாது.

ஒலிம்பிக்போட்டிகளில் நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சனைகள் எதிரொலிப்பதுண்டு. அதனால் புறக்கணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவை ஏற்படுவதுண்டு.

இம்முறை நாடுகளுக்கிடையிலான பகைகள் ஒலிம்பிக்கில் தலைநீட்டவில்லை. ஆனால் வேறு ஒரு பிரச்சனை மூக்கை நுளைத்திருக்கிறது.

பெண் விளையாட்டு வீராங்கனைகளை தமது குழுவில் அனுப்பாத நாடுகளை ஒலிம்பிக் போட்டியில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது.

குரல் எழுப்பியிருப்பவர்கள் ஜெர்மன் அரசின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், குவைத் என்று 35 நாடுகளை தடை செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நிறவெறி காரணமாக முன்பு தென்னாபிரிக்காவை ஒலிம்பிக்கிலிருந்து ஒதுக்கி வைத்ததுபோல, பெண்களை தடை செய்யும் நாடுகளையும் ஒதுக்கிவைத்தால் என்ன என்கிறார்கள் அவர்கள்.



எனினும் அவர்களது கோரிக்கையை ஒலிம்பிக் கமிட்டி ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகம்தான்.

# ஓட்டப்போட்டியில் மோதல்

ஒலிம்பிக் ஓட்டப் போட்டிகளில் இந்த முறை பிரிட்டனும், அமெரிக்காவும் கடுமையாக மோதிக்கொள்ளப்போகின்றன.




100 மீட்டர் ஓட்டத்தில் தற்போதைய சாம்பியனாக இருப்பவர் பிரிட்டன் வீரர் கிறிஸ்டி. அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிக்குப் பின்னர் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார் கிறிஸ்டி.

"ஓய்வுபெறும் போது வெற்றியுடன் விடைபெறுவேன்" என்று அவர் அறிவித்துள்ளார். அதனால் அவருடன் மோதுகிறவர்கள் பலத்த முயற்சி செய்ய வேண்டியிருக்கும்.

கிறிஸ்டிக்கு இப்போது 36 வயது. ஒவ்வொரு போட்டியின்போதும் சாதனை படைப்பதுதான் இவரது தாகம். 100 மீட்டர் தூரத்தை 9.85 நொடிகளில் கடந்த லெராய் பூரல்லின் சாதனையை இம் முறை கிறிஸ்டி முறியடிப்பாரா? "முயற்சி செய்வேன். போட்டி என்று வந்துவிட்டால் உலகமே என் பின்னால்தான்" என்கிறார் கிறிஸ்டி.

அமெரிக்க வீரர் கார்ல் லூயிஸ் மட்டுமே இதுவரை ஒலிம்பிக் சாம்பியன் பட்டத்தை 2 முறை தொடர்ச்சி யாகப் பெற்றுள்ளார்.

1984 இல் லொஸ் ஏஞ்சலில் சாம்பியன் பட்டத்தை வென்றார் லூயிஸ். 1988 இல் பென் ஜோன்சனிடம் அதனைப் பறிகொடுத்தார். பென் ஜோன்சன் போதைப் பொருள் பயன்படுத்தியதாக கண்டுபிடிக்கப் பட்டதால் கால் லூயிஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதே போல 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பிரிட்டன் வீரர் டுவைன் லடேஜாவிற்கும், அமெரிக்க வீரர் மைக்கேல் ஜோன்சனுக்கும் கடும் போட்டி நிலவுகிறது.

பிரிட்டன் வீரர் லடேஜா பின்வருமாறு கூறுகிறார்: "உலகில் மிகச் சிறந்த வீரருடன் (மைக்கேல் ஜோன்சன்) மோதுகிறேன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதற்கேற்றபடி சரியான பயிற்சியைப் பெற்று வருகிறேன்."

400 மீட்டர் தூரத்தை 43.29 நொடிகளில் கடந்த பட்ச் ரெனால்டின் சாதனையை முறியடிப்பதும் தனது இலட்சியம் என்று அறிவித்துள்ளார் லடேஜா.

போட்டி கடுமையாக இருப்பதால் மோதல் விறுவிறுப்பாக இருக்கும்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கந்தேகெதர வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**செல்வி. எஸ்.மாலா**
நாரங்கலை எஸ்டேட், கந்தேகெதர.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** P

பெயர்:........................
முகவரி:........................
........................
கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-06-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞரின் கணைகள்

தமிழ் திரையுலக வரலாற்றில் 'பராசக்தி' ஒரு திருப்புமுனை. காரணம், அதில் கலைஞர் கருணாநிதி எழுதிய வசனங்கள். பராசக்தியில் கலைஞர் எழுதி, சிவாஜி தன் சிம்மக்குரலில் முழங்கிய வசனம் இது:

"...யார் வழக்கிற்குமில்லை! அதுவும் என் வழக்குத்தான்! என் தங்கையின் வழக்கு! தங்கையின் மானத்தை அழிக்க எண்ணிய மாபாவிக்கு புத்தி புகட்ட அண்ணன் ஓடுவதில் என்ன தவறு? கல்யாணி தற்கொலை செய்து கொள்ள முயன்றது ஒரு குற்றம். குழந்தையைக் கொன்றது ஒரு குற்றம். நான் பூசாரியைத் தாக்கியது ஒரு குற்றம்! இத்தனை குற்றங்களுக்கும் யார் காரணம்? கல்யாணியை கஞ்சிக்கில்லாமல் அலையவிட்டது யார் குற்றம்? பஞ்சத்தின் குற்றமா? பஞ்சத்தை மஞ்சத்துக்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா? கடவுளின் பேராலே காமலீலைகளை நடத்தும் போலி பூசாரிகளை நாட்டிலே நடமாடவிட்டது யார் குற்றம்? கடவுளின் குற்றமா? அல்லது கடவுளின் பெயரைச் சொல்லி காலட்சேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா? இக் குற்றங்கள் களையப்படும்வரை குணசேகரன்களும் கல்யாணிகளும் குறையப் போவதில்லை! இதுதான் எங்கள் வாழ்க்கை ஏட்டின் எந்தப் பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம்...! பகுத்தறிவு! பயனுள்ள அரசியல் தத்துவம்!"



சிவாஜி நடித்த 'இல்லற ஜோதி' படத்தில் இடையே ஒரு நாடகம் அனார்க்கலி தன்னைக் காதலித்தது இளவரசர் சலீம் என்று தெரிந்ததும் அனார்க்கலி பேசும் வசனம்:

"கேட்டேனே பல முறை: கேடயமும் ஈட்டியும் தாங்கிப் போர்முனை செல்லும் பட்டாளத்து வீரனடி நான் என்று கூறிய போலிப் பேச்சைக் கேட்டேனே பல முறை. அப்போதெல்லாம் தெரியாதே எனக்கு அந்தஸ்து பேதத்தின் அளவு! தெரிந்திருந்தால் ஆகாயத்துச் சூரியனுக்காக இந்தத் தடாகத்துத் தாமரை மலர்ந்திருக்காதே? பிறைக் கொடிகாக்கும் பெம்மானின் பிள்ளையே! டெல்லி ஏகாதிபத்தியத்தின் எதிர்காலக் காவலரே! என்ன விழிக்கிறீர்? திரைமறைவில் அனுபவித்த தேன் விருந்து, தெவிட்டியபின் வீசி எறியவேண்டிய காதல் அமுதம், அந்தத் தேவை தீருவதற்கு முன்னரே தடைபோட்டு நிற்கிறதே என்று எண்ணுகிறீரா? படை போட்டு வாழும் பாதுஷாவின் மைந்தரே! சிப்பாய் நடைபோட்டு வந்து என்னை ஏமாற்றியது போதும்!"

'மனோகரா'-கலைஞர் வசனத்தில் சிவாஜியின் நடிப்போடு புகழ்பெற்ற படம். வசந்தசேனை என்பவளிடம் மயங்கிக்கிடக்கிறான் மன்னன். அவன் மகன் மனோகரன் கொதித்து எழுகிறான். வசந்தசேனையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் மனோகரன். அது மன்னன் உத்தரவு. மனோகரன் சீறுகிறான்:

"...கோமளவல்லி, கோமேதகச்சிலை, கூவும் குயில், குதிக்கும் மான் என்றெல்லாம் உம்மால் புகழப்படும் இந்தக் கோணல் புத்திக்காரியின் கொள்ளிக் கண்களை, கொடிய நாக்கை என் கூர் வாளுக்கு இரையாகத் தந்துவிட்டு, அதை எதிர்த்தால் உம்மையும், உமக்குப் பக்கத்துணை வந்தால் அந்த பட்டாளத்தையும் பிணமாக்கிவிட்டு; சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றியவர்களை சுடுகாட்டுக்கு அனுப்பி விட்டேன் என்று சுழலும் வாளுடன், சூழும் புகழுடன், என் அன்னையிடம் ஓடி மன்னிப்பு கேட்க வேண்டும்! நிறைவேற்றட்டுமா அந்த உத்தரவை? தயார்தானா? ஏன் நடுங்க வேண்டும்? ஹஹ்ஹா! புருஷோத்தமர்-போரிலே புலி. வாள் எடுத்தால் வையம் கலங்கும். அவரா இப்படி பயப்படுகிறார்? பாவம், வேலின் கூர்மையை சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக் கொண்டிருக்கின்றன! பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்தப் பாபபாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன! கோட்டை கொத்தளங்களை நினைத்துக்கிடந்த நெஞ்சம் இந்தக் குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர் காணுகிறது."



# நிர்ணயிக்கப்படும் காதல்....

கிரிக்கெட்
விளையாட்டில்...
காலநிலை சாதகமெனக்-
கணிக்கப்பட்டு
ஆடுகளம் இறங்கிய பின்-
இடிமழைபெய்து
ஆட்டம் ரத்தாகலாம்...!
♥♥
நாணய சுழற்சியில்
வெற்றி பெற்றும்..
தலைசுற்றுமளவு
பலத்த தோல்வி வரலாம்...!
♥♥
பந்து 'பின்காலில்' படாமலேயே...
'அம்பயர்' 'அவுட்' செய்யலாம்
அனைவர்-
(எதிர்) பார்ப்பிலும்
மண்தூவப்படலாம்....!
♥♥
கையிலிருப்பு
ஒரு பிடி, ஒரு விக்கெட்...
வெற்றிக்கு ஒரு 'ரன்'
இருக்க...
'தோல்வி'
விதியென்றாகலாம்...!
♥♥
வெற்றியைத் தொட
ஒரு-
'ரன்'மிச்சமிருக்கும்
உச்சத்தில்-கரண்ட் போய்
அடிவயிற்றைக் கலக்கலாம்...!
♥♥
நண்பி...!
காதலும் 'கிரிக்கெட்'தான்...!
நிர்ணயிக்கப்படுபவையும்
இவைதான்!
முகம் கொடுக்கலாமென்றால்
வா...!
ஆரம்பமாய் 'நாணயம்'
சுழற்றுவோம்...!

பாணகமுவ-எஸ்.முஸ்தாக்,
குருநாகல்.

# இரத்த வரிகள்!

என் சிந்தனை(ச்) சிகரங்கள்
சிதறல்களாகி
புள்ளியாகி(ப்) போனதில்
எனக்கு நானே
சூன்யமானேன்!
**
மலர்கள் ஸ்பரிசித்த
எம் சரித்திர(ப்) பக்கமெல்லாம்,
இன்று
இரத்தவரிகளாயின!
**
பூட்ஸ்களின் நசுங்கலில்
எத்தனையோ நந்தவனங்கள்
குற்றுயிராயின,
அவை-இழந்தவை
பகிரங்க மாக்கமுடியாத
இழப்புக்கள்!
**
மனிதம்
நிர்வாணமாக்கப்பட்டதை
வாசித்து(க்)காட்டுவதும்
கடந்த கால சரித்திரத்தின்
இரத்த வரிகளே!
**
ஹிருதயங்கள் கருகும்
இரவுகளின் விடியலில்
பிணவாடை.....!
சமாதானம்
வேர் அறுந்து
சாக்காட்டில் சயனிக்கிறது!
**
என் கண்களில்
கண்ணீருக்கும்
இரத்தங்களுக்கும்
வித்தியாசம் தெரியாது:
மெதுவாக அழுகிறேன்...
சமாதானத்தின் பாதங்கள்
கழுவ(ப்)படவேண்டும்
என்பதற்காக!?
**

மாவனல்ல-அப்பாஸ்.

# தேன் கிண்ணம்

# ச-மாதானம்

உடலும்
உணர்வும்
களைத்து உறங்கையில்
கனவு வந்தது......
••
கண்முன் ஒரே
"புகை!"
••
புகையின் நடுவில்
தேவதை!
••
தேவதையின் முகத்தில்
சாந்தம்!
••
கழுத்தில் தங்க
"நகை!"
••
நுனியில்
பதக்கம்!
••
அதன் நடுவே
வைரம்!
••
தொட்டு பார்க்க
கையை நீட்டினேன்!
••
துப்பாக்கிச் சத்தம்
கனவைக் கலைத்தது.

சுபா வரன்-கண்டி.

# கொல்லுதடி நீயில்லாத் தனிமை!

காரிகைநீ வெறியூட்டும் மாது!-உன்
கட்டுடலே உறவுக்குத் தோது!
ஏரியிலே தாமரையின் மொட்டு!-
எழிலூட்டும் உன்மார்புத் திட்டு!

கரங்களுக்கு காந்தள்மலர் ஒப்பு!-என்
கற்பனையில் தவறுண்டோ: செப்பு?
நிரந்தரமாய் உனதன்பைக்காட்டு!-நீ,
நினைவினிலே என்னுருவைத் தீட்டு!

மார்பினிலே என்னவொரு மச்சம்?- ஏன்
மச்சானுக் கருகில்வர அச்சம்?
போர்வையினை விலக்கிவிடின் அங்கம்;-நிகர்
புவியினிலே விலையில்லாத் தங்கம்!

முத்துப்பல் முறுவலது முல்லை!-நீ
முகம்காட்டி நகைசெய்தாற் றொல்லை!
சித்தத்தில் இடம் பெற்ற பெண்ணே!-நீ
சீர்கவிஞன் பார்க்கின்ற கண்ணே!

கயல்மீனை ஒத்ததடி விழிகள்!- அவை,
காவினிலே பறக்கின்ற அளிகள்!
குயிலைவிட, உன்குரலே இனிமை!-எனைக்
கொல்லுதடி நீயில்லாத் தனிமை!

அ.கௌரிதாசன்- ஆலங்கேணி கிழக்கு.

# வசந்தமினிச் சுடுகாட்டில்...!

உனது திருமணச் செய்தியைக்
கேட்ட கணத்திலேயே
எனது சர்வாங்கமும்
நடு நடுங்கிப் போனது!
-o-
உடலின்
சகல உயிரணுக்களிலிருந்தும்
சீவன் பிரிவதைப் போலச்
சிரமப் பட்டேன்!
-o-
நெஞ்சுக்குள்
கொதிக்கும் எண்ணெய்யைக்
கொட்டி விட்டதாய்
உன் நினைவுகள்
கொடூரப் படுத்தின!
-o-
ஊமைபோல நடிக்கும்
உன்னோடு பேச
என்னால் முடியவில்லை!
-o-
செவிடாய்க்
குருடாய்
ஊமையாய்-எனை
உருவாக்கிவைத்துள்ளாய்!
-o-
உன் மீது
உயிரை வைத்த நேரமே;
தண்டவாளத்தில்
கழுத்தை வைத்திருக்காலம்-என
இப்போது நினைக்கிறேன்!
-o-
எனது கண்ணீர்
நதியைத் தாண்டி
நந்தவனங்களுக்கு
நீந்திச் செல்ல
உன்னால் முடியாது!
-o-
எனை உயிரோடு
புதைத்த
புதை குழி மேல் நின்று
புதுவாழ்வைச் சூடிக்கொண்டாய்!
-o-
எனது பெருமூச்சும்
பெற்றோரின் சாபங்களும்
உன் வாழ்வில்
புயல்களைக் கிளப்பும்!
-o-
சுடுகாடுகளிற் தான்
உனக்கினி வசந்தம்!
-o-

செல்வி-பஹீமா ஜஹான் ஸவாஹிர்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

# நமது கல்வி

புத்தகம்
வாங்க முன்னமே
பாடத்திட்டம்
முடிந்து விடுகிறது...
**
பாடம்
தொடங்கமுன்னமே
பரீட்சை
வந்து விடுகிறது...
**
நாளை நாளையென்று
இன்றைய நாளையும்
இழந்து விடுவதால்,
வேலை கிடைக்கும்போது
வாலிபம்
தொலைந்து விடுகிறது!!
**

அ.டக்ளஸ் ஜெய சேகரன்,
வவுனியா.

# நெருப்பு இராத்திரிகள்

அர்த்த ராத்தரியில்
தூக்கத்தைத் தொலைத்துவிட்டு
நான்
அழிந்து போகிறேன்.....!
✍
வெறுப்புகளை
உமிழ்ந்து விட்டு
நீ ஓடிப்போன
வெண்மணற் தரையில்
உன் பாதங்களுக்குள்
முகம் புதைத்து...
✍
சோகம்
கொண்டலையும்
தனித்திருத்தலாய்
எரிந்து
சடரிழக்கவும்
என்னால் முடியாதா?
✍
ஏன் தான்
என்
நினைவுகளில்
வந்து
தொலைக்கிறாய்?
போ!
✍
என் ஆத்மாவின்
கவிதைகளைப்
படித்துக் கொண்டிரு!!
நான்
இங்கே
செத்துப் போகிறேன்.
என்
கற்பிழந்து போகாத
உத்தமியே...
✍
போதும்
ஊர்ப்பழி சுமந்தது.
வா
என்னருகில்
'முன்பைப் போல
நான் கோழையல்ல...'
என்றுனக்கு
எத்தனை தரம்
சொல்வது?
✍
விழிகள் பரப்பி
வைத்திருக்கிறேன்.
உன் வருகைக்காய்
பெண்ணே!
ஒரு கடிதமெழுது!

மானுடபுத்ரன்.

# ஹைக்கூ..

பூமியின் முந்தானையில்
இராத்திரி நகர்வலம்..
சந்திரன்..
***
கடுங்குளிரிலும்..
மலர்களுக்கு வியர்வை...
பனித்துளி..
***
முறைத்தாலும் சிரிப்பு..
சிரித்தாலும் சிரிப்பு.....
போட்டோவில் நான்..
***

என்.சஹாப்தீன்,
ஒட்டமாவடி.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 26.05.96 முதல் 01.06.96 வரை)

'சோதிட மாமணி'
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

மேடம் - செவ்வாய்.
இடபம் - சூரியன், புதன்.
மிதுனம் - வெள்ளி.
கன்னி - இராகு.
தனு - வியாழன்.
மீனம் - சனி, கேது.

சந்திரன்-சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

## மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| மேடம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தன்னம்பிக்கை, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- பணச் செலவு, மனத்தைரியம். | பி.ப. 1 மணி |
| வியாழன்-மனக்குறை நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 8 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் குறை கேட்டல், மனச்சஞ்சலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## இடபம்:
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)

| இடபம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| செவ்வாய்- பணத்தட்டுப்பாடு, அந்நியர் எதிர்ப்பு. | பகல் 11 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், பணப்புழக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- முயற்சிகளில் வெற்றி, செல்வாக்கு நிலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தெய்வ தரிசனம், மனமகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| சனி- அந்நியர் உதவி, புதிய முயற்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

## மிதுனம்:
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| மிதுனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் வருகை, பணத் தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- கடன் பயம், கடின உழைப்பு. | மு.ப. 9 மணி |
| புதன்- வெளியூர் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

## கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| கர்க்கடகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுக நன்மை, கௌரவம். | காலை 8 மணி |
| திங்கள்- தெய்வ நம்பிக்கை, முயற்சி வெற்றி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உறவினர் வருகை, பணச் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- திடீர் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, தனலாபம். | பி.ப. 3 மணி |
| சனி- காரியசித்தி, வீண் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## சிம்மம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| சிம்மம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் இலாபம், பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள் நட்டம், கடன் படல். | மு.ப. 9 மணி |
| புதன்- உயர்ந்த நோக்கம், துயர் நீங்கும். | பி.ப. 4 மணி |
| வியாழன்-காரிய சித்தி, பணவரவு. | காலை 8 மணி |
| வெள்ளி- பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் நட்டம், மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

## கன்னி:
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| கன்னி | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் முன்னேற்றம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- முயற்சிகளில் வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- இனசன கொண்டாட்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- மனஅமைதி குன்றும், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சிகளில் வெற்றி, தன்னம்பிக்கை. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

## துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| துலாம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- முயற்சி விருத்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உறவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| புதன்- உயர்ந்த எண்ணம், கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவ நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி-திடீர் சுகயீனம், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- தொழில் கேடு, மனப்பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

## விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| விருட்சிகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், கடன் பயம் நீங்கும். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- கடன் படல், பொருள் நட்டம். | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் தொல்லை, மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் முன்னேற்றம், கௌரவம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| தனு | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், குடும்ப சுகம். | பகல் 11 மணி |
| செவ்வாய்-வெளியிடப் பயணம், அகால போசனம். | பகல் 12 மணி |
| புதன்- காரிய சித்தி, முயற்சி மேன்மை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- மறைமுக எதிர்ப்பு, தெய்வானுகூலம். | காலை 6 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன்., அதிஷ்ட இலக்கம்-8

## மகரம்:
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| மகரம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண் அலைச்சல், பிரயாச மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- வேலைப்பழு, அலைச்சல். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தெய்வானுகூலம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன் - அந்நியர் சகவாசம், குடும்ப சுகம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- செய்தொழில் விருத்தி, மனநிம்மதி. | காலை 8 மணி |
| சனி- மறைமுகத் தொல்லை, மனக் கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

## கும்பம்:
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| கும்பம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- பண வரவு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வியாழன்- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், சோர்வு நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- இனசன கொண்டாட்டம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

## மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)


| மீனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி தடை, வீண் குறை கேட்டல். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, வெளியிடப் பயணம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- அதிகார விருத்தி, உயர்ந்த நோக்கம். | காலை 8 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, கவலை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தன்னம்பிக்கை, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5


படிப்பகம்

www.padippakam.com





# எழு தம்பி

சரிந்து சாய்ந்து அமராதே!
சலுகை கேட்டுப் பழகாதே!
ஒய்ந்து கிடக்க நினையாதே!
உதவி கேட்டே குனியாதே!
**
முடியாதென்று முடங்காதே!
முயற்சி செய்யத் தயங்காதே!
கெட்டோம் என்று துடிக்காதே!
கெடுத்தார் என்று வெடிக்காதே!
**
மலையும் வளையும் உழைப்பாலே,
மனமே எல்லாம் மறவாதே!
அலை போல் அடுத்துச் சிந்திப்பாய்!
அறிவே துணையாய் முந்திப்போ!
**
உன்னால் முடியும் எழு தம்பி!
உலகிருக்குது உனை நம்பி.
மின்னல் கீற்றோ நீயில்லை;
மெலெழு சூரிய ஒளிப்பிள்ளை!

அனுப்பியவர்- எஸ்ரீயெம். சாதிக்கீன்- மீராவோடை.

விதையினைத் தெரிந்திடு! வீரியம் பெருக்கு!
வெடிப்புறப் பேசு! வேதம் புதுமை செய்!
வையத் தலமை கொள்! வெளவுதல் நீக்கு!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கொக்கிற்கு எத்தனை கால்?

ஓர் ஊரில் மாசிலாமணி என்ற செல்வந்தர் ஒருவர் இருந்தார். காட்டிற்குச் சென்று **வேட்டையாடுவது அவரின்** பொழுது போக்கு.

ஒரு நாள் மாலை மாசிலாமணி வேட்டையாட காட்டிற்குப் புறப்பட்டார். காட்டிற்குச் செல்லும் வழியின் அருகில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் கொக்குகள் நின்று மீன் பிடித்துக் கொண்டு நின்றன.

மாசிலாமணி தான் கொண்டு வந்திருந்த துப்பாக்கியால் அந்தக் கொக்குகளை நோக்கிச் சுட்டார். ஒரு கொக்கு அவரது துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியது.

அந்தக் கொக்கை எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிய மாசிலாமணி, சமையல்காரனான கந்தசாமியிடம் கொடுத்துச் சமைக்கச் சொன்னார்.

கந்தசாமியும் அந்தக் கொக்கைக் கறி சமைத்தான். அதன் மணம் அவனது மூக்கைத் துளைத்தது. அவனது நாவில் நீர் ஊறியது.

அவன் கொக்கின் கால்களில் ஒன்றை எடுத்துச் சுவைத்துச் சாப்பிட்டான். மிகவும் சுவையாக இருந்தது.

இரவுச் சாப்பாட்டின் போது மாசிலாமணிக்குக் கொக்குக் கறியை பரிமாறினான் கந்தசாமி.

கறியை ருசித்துச்சாப்பிட்ட மாசிலாமணி, அப்போதுதான் கறியில் கொக்கின் ஒரு கால் மட்டுமே இருப்பதைக் கண்டார். பின்,



"கந்தசாமி! கறியில கொக்கின் ஒரு கால் மட்டும் தானே இருக்கிறது. இன்னொரு கால் எங்கே?" என்று கேட்டார்.

"அதுவா? அது வந்து முதலாளி... நீங்கள் கொடுத்த கொக்கிற்கு ஒரு கால்தானே இருந்தது. அதை அப்படியே சமைத்தேன்!" என்று பவ்யமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு சொன்னான்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்ட மாசிலாமணி,

"என்ன... நான் கொண்டு வந்து கொடுத்த கொக்கிற்கு ஒரு கால்தான் இருந்ததா? என்னிடமே பொய் சொல்லுகிறாயா?" என்று கோபமாகக் கேட்டார்.

அதைக் கேட்டுச் சற்றும் பயந்து விடாத கந்தசாமி,

"ஐயா! நான் சொல்வது உண்மை. கொக்கிற்கு ஒரே ஒரு கால்தான் உண்டு. வேண்டுமானால் நான் உங்களுக்கு இதை நாளை மாலை குளக்கரையில் நிரூபித்துக் காட்டட்டுமா?" என்றான்.

"சரி. நாளைக் காலை இதை எனக்கு நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் உனக்கு ஐம்பது சவுக்கடி கிடைக்கும்" என்றார் மாசிலாமணி.

கந்தசாமி அதற்கு ஒப்புக் கொண்டான். மறுநாள் மாலை.

மாசிலாமணி, கந்தசாமியை அழைத்துக் கொண்டு குளக்கரைக்குச் சென்றார். குளத்தில் ஏராளமான கொக்குகள் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தன.

"பார்த்தீர்களா முதலாளி? எல்லாக் கொக்குகளுக்கும் ஒரு கால் தான் இருக்கின்றது," என்றான்.

அவனை முறைத்துப் பார்த்த மாசிலாமணி,

"சற்றுப் பொறு! கொக்குகளுக்கு இரண்டு கால்கள் இருப்பதை உனக்குக் காட்டுகிறேன்!" என்று சொல்லிவிட்டு குளத்தை நோக்கித் திரும்பி "ஓ...ஓ..." என்று குரல் கொடுத்தார்.

இந்தச் சத்தத்தைக் கேட்ட கொக்குகள் 'குபீர்' என்று எழும்பிப் பறந்தன. அப்போது கொக்குகளுக்கு இரண்டு கால்கள் இருப்பது நன்றாகத் தெரிந்தது.

அதைக் கந்தசாமிக்குக் காட்டிய மாசிலாமணி,

"பார்த்தாயா கொக்குகளுக்கு இரண்டு கால்கள் இருப்பதை?" என்று கோபமாகக் கூறினார்.

என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்த கந்தசாமி சட்டென்று,

"முதலாளி! நேற்று இரவு நீங்கள் சாப்பிடும் போது இதே போல் 'ஓ...ஓ...' என்று குரல் கொடுத்திருந்தால் ஒரு வேளை கறியில் மற்றக்காலும் இருந்திருக்கும்!" என்றான்.

கடும் கோபத்தில் இருந்த மாசிலாமணி இந்தப் பதிலைக் கேட்டதும் 'கல கல' வென்று சிரித்துவிட்டார்.

"கோபக்காரனான என்னையே சிரிக்க வைத்து விட்டாயே. நீ பிழைத்துக் கொள்வாய். ஆனால் பொய் சொல்லாதே. பொய் சிலநேரங்களில் தான் உன்னைக் காப்பாற்றும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் உன் காலை வாரி விட்டு விடும் தெரிந்ததா?" என்றார்.

கந்தசாமியும் தன் தவறை ஒப்புக் கொண்டு மாசிலாமணியிடம் மன்னிப்புக் கேட்டான்.

## வாரம் ஒரு நாடு



### மொரீஷியஸ்

தலைநகர்- போர்ட் லூயிஸ்
பரப்பு - 2,040 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 11,41,000
மொழி- ஆங்கிலம், பிரெஞ்சு, கிரியோல் மற்றும் இந்துஸ்தானி, தமிழ் பேசுவோரும் உளர்.
எழுத்தறிவு - 90%
சமயம் - இந்துசமயம், இஸ்லாம், கிறிஸ்தவம்
நாணயம்-ரூபாய்
தனிநபர் வருமானம் - 2300 டொலர்.

அமைவிடம்:
மொரீஷியஸ்,இந்தியப் பெருங்கடலில் மடகாஸ்கருக்கு 500 மைல்கள் கிழக்கில் அமைந்துள்ளது.

வரலாறு:
1638 இல் டச்சுக்குடியேற்றம். 1721 இல் ஃபிரான்சின் ஆதிக்கம். 1814 இல் பிரிட்டனின் ஆதிக்கத்திற்குட்பட்டது. கரும்பு பயிரிடுவதற்காக பிரிட்டன் பல இந்தியர்களை மொரீஷியஸிற்கு அழைத்துச் சென்றது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பகுதி இந்தியரே. 1968 இல் சுதந்திர மடைந்தது. 1992 இல் குடியரசானது.

பொருளாதாரம்:
மொத்த விவசாய நிலத்தில் 90% கரும்பே பயிரிடப்படுகிறது. தேயிலை, புகையிலை போன்றவையும் விளைவிக்கப்படுகின்றன. துணியாலைகள் வளர்ந்து வருகின்றன. ஏற்றுமதியின் பெரும்பகுதி சீனி. சுற்றுலா மிக முக்கிய வருமான மூலம் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.06.1996.


வர்ணம் தீட்டும் போட்டி இல: 142
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 140

பரிசுக்குரியவர்:
செல்வன். எம். முகமட் பாறூக்.
காலி வீதி, பாணந்துறை.


பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி. சர்மிலா.<br>கல்பொத்த வீதி, கொட்டாஞ்சேனை. | சி. றெஜினோல்ட்.<br>நீர்கொழும்பு வீதி, கந்தானை. |
| வி. லஷாந்த்.<br>திருத்துவ கல்லூரி, கண்டி. | எவ். பருஸா.<br>ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம், கண்டி. |
| செல்வி. எஸ். சத்தியகலா.<br>நு/ டயகம சிங்கள பாடசாலை, டயகம. | வை. கௌதமி.<br>சாந்த அன்றூஸ் வித்தியாலயம், புத்தளம். |
| ஏ. முஹம்மது அஸாம்.<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | எவ். நுஸ்ரத்.<br>மடிகே, கலகெதர. |
| என். மைதிலி.<br>பாலையூற்று, திருகோணமலை. | கே. சுபாஸ்கரன்.<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-04. |



படத்தில் இருப்பது பிளமிங்கோ என்னும் ஒரு வகைப் பறவை. இதன் கால்கள் மிக நீளமானவை. இவ்வளவு நீளமான கால்களை உடைய இப்பறவை எப்படி உட்காரும் என்று எல்லோருக்கும் ஒரு சந்தேகம். இந்த பிளமிங்கோ பறவை கால்களை முன்பக்கமாக நீட்டியபடியே உட்காருகின்றது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் பிளமிங்கோ பறவை, தன் கால்களைப்பின் பக்கமாக மடக்கி கட்டில் போன்று இருக்க அதன் மேல் உட்கார்ந்து கொள்ளும்.

## செல்சியஸ்



*** செல்சியஸ் என்பவர் யார்?**

சுவீடன் நாட்டைச் சேர்ந்த வானியல் அறிஞர் தான் அண்டர்ஸ் செல்சியஸ். இவர் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

*** இவர் செய்த பணி என்ன?**

நட்சத்திரங்களின் அளவை, அவை உமிழும் ஒளியின் தன்மையை வைத்துக் கண்டு பிடிக்க முதன் முதலில் முயற்சி செய்தார்.

*** இவரது கண்டுபிடிப்பு என்ன?**

வெப்பநிலையை அளக்க உதவும் செல்சியஸ் வெப்பமானியைக் கண்டுபிடித்தார்.

*** இந்த செல்சியஸ் வெப்பமானியில் எத்தனை பிரிவுகள் உள்ளன?**

இதில் 100 பிரிவுகள் உள்ளன. 0 சியில் ஆரம்பித்து (தண்ணீரின் உறைநிலை அளவு) 100 சி (கொதி நிலை அளவு) வரை உள்ளது.

*** செல்சியஸ் வெப்பமானியும், சென்டிக்கிரேட் வெப்பமானியும் அளவில் ஒன்றா?**

ஆம். இரண்டுமே ஒன்றுதான். செல்சியஸ் வெப்பமானியைத் தான் சென்டிக்கிரேட் வெப்பமானி என்றும் சொல்கிறோம்.

## முதல் கொடி

தேசியக் கொடிகளின் தாத்தா யார் தெரியுமா? டென்மார்க் நாட்டுக்கொடி தான். 13ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட அந்தக் கொடி இன்னும் அப்படியே பயன்படுத்தப்படுகிறது. எந்தவித மாறுதலுமின்றி.

## சின்னச் சின்ன செய்திகள்




◁ உலகில் தினமும் அதிக நேரம் தூங்கும் பிராணி 'ஸ்லோத்.' அது ஒரு நாளில் 18 மணி நேரம் தூங்கும். இன்னொரு வேடிக்கை- இது வெளவாலைப் போன்று தலை கீழாகவே மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும்.



பாலின் நிறம் வெள்ளை தானே? ஆனால் திபெத்திலுள்ள 'யாக்' என்னும் எருமையின் பால் மட்டும் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.



◇ கண்ணாடி மீனின் உடல் கண்ணாடி போல் இருக்கும். அதன் உடலின் உள்ளே உள்ள ஜீரண உறுப்புக்களையும், முள் எலும்புகளையும் தெளிவாகப் பார்க்க முடியும்.



△ பாம்பு தன் வாயில் அடைத்துக் கொண்ட இரையை துப்ப முடியாது. அதை விழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை.



△ மற்றப் பிராணிகளுக்கு இல்லாத சிறப்பு முதலைக்கு உண்டு. மற்றப் பிராணிகளால், தாம் சாப்பிட்ட இரையின் எலும்புகளை ஜீரணிக்க முடியாது. ஆனால் முதலை, எலும்புகளையும் ஜீரணித்து விடும்.



படிப்பகம்

www.padippakam.com

14 திகில்

# நீ! > நீயா!

"ஐயா வணக்கமுங்க" என்ற குரலுக்கு கார் ஏற முயன்ற ராஜாவும் ஜென்னியும் திரும்பிப் பார்த்தார்கள்.

"வணக்கமுங்க."

"அதுதான் சொல்லிட்டியே. அப்புறம் சொல்லு. ஏதாவது புதுவழக்கா? நேரமில்லே. அவசரமா ஓடிட்டிருக்கோம்."

"வரப்பு தகராறுங்களை ஏத்துப்பீங்களா?"

"சே. சே. சிவில் கேஸ் எல்லாம் நாங்க ஏத்துக்கறதில்லே. தோத்தாத்திரின்னு இருக்கார், இதே தெரு முனையில. போய் அவரைப் பாரு."

"இல்லிங்களே. அவுகதான் உங்களைப் பார்க்கச் சென்னாங்க. அதான் வெந்தேன்."

"வெந்தது சரி. சீக்கரம் சொல்லுய்யா. நாங்க போகணும்."

"அவ்ளோவ் பெரிய விஷயத்தை அதெப்புடிங்க அவ்வளவு சுருக்க சொல்ல முடியும்? இருவது வருஷ கதையாச்சுதே."

"விஷயத்தை சொல்லு மேன்."

"அதில பாருங்க சாமி. பாலு சாமின்னு எனக்கொரு பங்காளி பயலுங்க. அவன் என்ன பண்ணினான்னா."

"கொஞ்சம் இருங்க. டேய் ஜேம்ஸ் பாண்ட்."

"சார் வர்றேன்."

"கதை கேட்கிறதுல உனக்கு ஆர்வமதிகமில்லே?"

"ஆமாம். மர்ம நாவல் எல்லாம் நிறைய படிப்பேன். இங்கே சம்பளம் பத்தல்ல. வாங்கி படிக்க முடியல்ல."

"பணம் வேணாம். ஐயா ஓஸியிலயே கதை சொல்லுவார். கேட்டுக்க. நாங்க வந்ததும் கதைச் சுருக்கத்தை மட்டும்


அம்மாள் முகத்தில் திடீரென்று கருமை படர்ந்தது. அச்சமாகப் பார்த்தாள். "துப்பறியும் நிபுணர்கள். நீங்க ஏன் என் அபிராமியைத் தேடி வந்தீங்க? எனக்கு கவலையாயிருக்கே."

"பயப்படாதீங்க. உங்க இரண்டாவது மகள் ராஜேஸ்வரி சொல்லித்தான் வந்தோம்."

"ஓ!" அம்மாள் முகம் தெளிந்தது. "ராஜியைப் பார்த்தீர்களா?"

"ஆமாம். உங்களை ரொம்பவும் விசாரிச்சாங்க."

"பொய் சொல்றீங்க. அம்மான்னு ஒருத்தி இருக்கிறதை அவள் மறந்து போய் ரொம்ப நாளாகிப் போச்சு. நான் தான் நொண்டி அவளைப் பார்க்கப் போக முடியாது. அவளாவது வந்து பார்க்கக்கூடாதா? அப்படியென்ன பயம்? அவள் முகமே கூட மறந்து



போயிடுச்சு."

"வருத்தப்படாதீங்கம்மா. அவங்களுக்கு அங்கே சூழ்நிலை எப்படி இருக்கிறதோ யாருக்குத் தெரியும்."

"அவங்க இல்லையா?"

"அபிராமியைக் கேட்கறியா? பெண்ணே! ராஜி பரவாயில்லே. அவள் புருஷன் வீட்ல இருக்கிறவ. அடிக்கடி வர போக முடியாது. இவ இந்த வீட்டிலேயேயிருந்துகிட்டும் என்னைப் பார்க்க நேரமில்லே. மனசுமில்லே." கண்ணீர் விட்டார். "எல்லாம் என் தலைவிதி."

"இப்ப வீட்ல இருக்கிறாங்களா இல்லையா?"

"யாருக்குத் தெரியும்? அவள் வெளியே போகிறதும் தெரியாது. எப்ப வீட்டுக்குள்ளே வருகிறான்னும் தெரியறதில்லே."

"அதென்னம்மா? வாசலுக்கு நேரே

"இருக்காங்கம்மா. இப்பதான் காப்பிக்கு பெல் அடிச்சாங்க."

விசிட்டிங் கார்டை நீட்டினான் ராஜா. "வந்திருக்கோம். அவசரமா பார்க்கணும்னு சொன்னதாகச் சொல்லு."

திரும்பி திரும்பி பார்த்தவாறு மாடி ஏறிப் போனவள் திரும்பி மாடி வராண்டாவில் நின்று சொன்னாள்–

"வரச் சொன்னாங்க வாங்க."

மாடி ஏறிப் போகும் போது அம்மையார் சொன்னார். "எனக்கும் அப்பாயிண்ட்மெண்ட் தர முடியுமான்னு கேளுங்க ப்ளீஸ்."

பரிதாமாக இருந்தது.

"உள்ளே வாங்க." என்ற அனுமதிக்கு இவர்கள் உள்ளே போன போது–

கட்டிலில் ஒருக்களித்து கிளியோபாட்ரா போஸிலிருந்தாள் அவள். திரும்பிக்கூட பார்க்காமல்

"சொல்லுங்க மிஸ்டர் ராஜா! எங்கே வந்தீங்க?"

"ஒரு சின்ன விளக்கம் கேட்க வந்தோம்."

கோபமாக திரும்பிப் பார்த்தாள். "உங்களுக்கு விளக்கம் சொல்ற தேவை எனக்கில்லே. ஸாரி. நீங்கள் போகலாம்."

சிகரெட் ஒன்றை வாயில் பொருத்தி லைட்டரை நுணுக்கிப் பற்றவைத்துக் கொண்டாள். "இன்னுமா நீங்க போகல்ல?"

"போகிறதாகயில்லே." ஜென்னி சொன்னாள். கோபமாக. "ஒரு விளக்கம் கேட்டேயாகணும். நாங்க கேட்டால் அது படு சாதாரணமாக இருக்கும். அதையே போலிஸ் கேட்டால் ரொம்பக் கடுமையாக இருக்கும். வசதி எப்படி? நாங்களே கேட்கலாமா?"

எரிச்சலாகப் பார்த்தாள்: "கேட்டுத் தொலைங்க. ஆனா சீக்கிரம். ஒரு போன் கால் எதிர்பார்க்கிறேன். அது வந்தால் உடனே கிளம்பிடுவேன்."

"இன்பவல்லியம்மா கொடுத்த பார்ட்டிக்கு நீங்க போனீங்க."

"ஆமாம். அதில் என்ன தப்பு?"

"தப்பேயில்லே" ஜென்னி கேட்டாள். "அங்கே சிகரெட் பிடிச்சீங்களா?"

"அங்கே மட்டுமில்லே எங்கேயும் பிடிப்பேன் சிகரெட். அதனால் என்ன?"

"அதனால் என்ன ஒண்ணுமில்லே. நீங்க லைட்டர் கேட்டதாகவும் அந்த ஜோதி கைப்பையிலிருந்து எடுத்துக்க சொன்னதாகவும் நேரில் பார்த்தவங்க சொன்னாங்க.

சாட்டினா. அப்புறம் தான் அவன் பார்வை போன இடம் வேறுன்னு தெரிஞ்சு மன்னிப்புக் கேட்டாள். நடந்ததை மறந்து நானும் சகஜமா பழக ஆரம்பிச்சேன். மாறிட்டாள்னு தான் நினைச்சேன். இல்லே இப்ப திருட்டுப் பட்டமா சுமத்தறா? பிட்ச்."

"சே. சே. அவளாக ஒண்ணும் சொல்லவேயில்லே. அவளைத் தப்பாக நினைக்காதீங்க."

"பின்னே நான் லைட்டர் கேட்டதும் எடுத்ததும் உங்களுக்கெப்படி தெரியும்?"

"அதான் சொன்னேனே. இன்னொருத்

னும் சொல்லிட்டாங்க."

"இதுல என்ன தப்பிருக்கு?"

"அதில தப்பில்லே. அம்மா செத்ததாக சொன்னது தான் தப்பு."

பார்த்தாள்.

"கீழே ஹால்ல, உங்கம்மா முடமாக உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தோம். உங்களுக்கு அம்மான்னா உங்களோட பிறந்த அவளுக்கும்தானே அம்மா? அதென்ன உயிரோடிருக்கிற அம்மாவை இல்லேன்னு சொல்லணும்?"



மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

சொல்லிடு. போதும்."

"அதில்லீங்க–"

"அங்கே!" ஜென்னி சொன்னாள். "அங்கே சொல்லு."

"ராசாங்கிறது?"

"அவன் தான்! சொல்லிட்டு இரு." என்றான் ராஜா ஜென்னியை வண்டியில் திணித்து சுற்றிப் போய்காரில் ஏறி நகர்த்தினான்– மிக அவசரமாக "பாலு சாமின்னா சொன்னான். ஒரு விஷயம் துப்பு கண்டு பிடிச்சேனே."

"எது?"

"அந்த ஆளு சமீப காலத்திலதான் வேதம் புதிது படம் பார்த்திருக்கான்."

"அறுக்கறீங்க பார்த்தீங்களா? சீக்கிரமா போங்க பாஸ்! பட்சி பறந்துடப் போகுது."

அவர்களின் கார் போர்ட்டிகோவில் நின்ற போதே ஹாலில் அந்தம்மாள் கண்ணில் பட்டார். அவர் அமர்ந்திருந்த சக்கர நாற்காலியே அவரைக் கால் ஊனமுற்றவர் என்று உணர்த்தியது.

மனசுக்குள் லேசாக பரிதாபம் வர இறங்கி நடந்தார்கள்.

"மிஸ் அபிராமியோட வீடு இது தானே?"

"சரியான இடத்துக்கு தான் வந்திருக்கீங்க. உள்ளே வாங்க."

"நான் ராஜா."

"நான் ஜென்னி." சொன்னாள் "துப்பறியும் நிபுணர்கள்."

உட்கார்ந்திருக்கீங்களே. போகிறதும் வருகிறதும் தெரியாமலா போயிடும்?"

"இந்த வீட்டுக்கு மூணு வாசலிருக்கும்மா. வடக்கே தவிர மூணு திக்கிலேயும் கதவு வச்சு கட்டி இருக்கார் என் கணவர். இந்தக் கதவு கிழக்கு பக்கமாக இருக்கிறதினால என்னை இங்கே உட்கார்த்தி வைச்சு அவள் வேற வழிகளைத் தான் உபயோகிப்பா."

"ஏன் அப்படி?"

"சொன்னேனே தலைவிதி. அதுதான், ஆரம்ப நாளில இந்தப் பக்கமா தான் வரப்போக இருந்தா. சில நாள்கள்ல அவள் திரும்பற நிலையைப் பார்த்து சத்தம் போட்டேன். அதிலேர்ந்து தனி வழி எடுத்துக்கிட்டா. என்னையும் பார்க்கிறதை தவிர்க்கிறா."

"அப்படி என்ன கோலத்தில வந்தாளாம்?"

"குடிச்சிட்டு உளறிகிட்டு கண்ட கண்ட பயல்களோட–" கும்பிட்டார். "கேட்காதீங்க என்னை எதுவும் கேட்காதீங்க."

"சரி. கேட்கல்ல விடுங்க. இப்ப அவங்க இருக்கிறாங்களான்னு மட்டும் விசாரிச்சு சொல்லுங்க போதும்."

"தாய்ம்மா."

சமையலறையிலிருந்து வந்த அம்மாளிடம் ஈர உளுந்து வாசனை வந்தது. "கூப்பிட்டீங்களாம்மா?" ஜென்னியை ஆராய்ந்தவாறு–

"ஆமாம், மேலே அபிராமி இருக்கிறாளா? பார்த்துச் சொல்லு."

"உண்மை. என் சிகரெட் லைட்டர்ல கியாஸ் தீர்ந்து போனதினால் கேட்டேன். என்ன தப்பு?"

"தப்பு? நாங்க சொல்லாத வார்த்தை. அப்புறம் என்ன நடந்தது?"

"சிகரெட் லைட்டரை எடுத்தேன். பற்ற வைத்தேன். மறுபடியும் அவள் பையிலேயே வைச்சிட்டேன்." தோள்கள் உயர்த்தி கைகளை விரித்தாள்.

"கையை வெளியே எடுக்கும் போது வெறும் கை வந்ததா? இல்லே கூடவே ஏதாவது வைர நெக்லஸும் ஒட்டிக் கிட்டு வந்ததா?"

எரிப்பது போல் பார்த்தாள் அந்த அபிராமி.

"என்ன சொல்ல வர்றீங்க? அந்த வைர நெக்லஸை நான் திருடி எடுத்தேனான்னா? என்ன துணிச்சலிருந்தா இப்படியொரு கேள்வி கேட்பே நீ?"

"அமைதி. அமைதி!" கையமர்த்தினான் ராஜா. "கேட்டதாக நீங்க சொல்கிற கேள்வியை அவள் இன்னமும் கேட்கவேயில்லேயே. அதுக்குள்ளே நீங்களாக நினைச்சு குற்றம் சாட்டினால் எப்படி?"

"எனக்குத் தெரியும். எல்லாம் அந்த ஜோதியோட வேலை. அவளுக்கு என் பேரில இன்னமும் ஆத்திரம் மாறல்லன்னு தெரியுது."

"ஆத்திரம்? என்ன அது புதுக்கதை?"

"அவளோட காதலனை நான் கடத்திட்டுப் போயிட்டதாக தப்பாக நினைச்சு குற்றம்

தர் சொல்லித்தான் தெரியும்னு. அப்புறம் என்ன?"

"யார் அந்த இன்னொருத்தர்?"

"சொல்வதற்கில்லை. மன்னிக்கவும்."

"அவருக்கென்ன என்மேலே குற்றம் சாட்ட வேண்டிய தேவை?"

"மன்னிக்கவும். அதுவும் தெரியாது."

"இப்ப ஏன் மேன் இங்கே வந்தீங்க? என் மேல குற்றம் சாட்டவா? சண்டை போடவா?"

"இரண்டுமில்லே ஒரு சின்ன விசாரணை. அவ்வளவுதான். அதுவும் நாங்களாக வரல்ல. உங்க தங்கையா அக்காவா? அந்த ராஜேஸ்வரி சொல்லித்தான் வந்தோம்."

அவள் முகம் ஒரு முறை இருண்டு பிறகு தெளிந்தது.

"அவளைப் பார்த்தீங்களா?"

"ஆமாம். நகை தொலைஞ்ச சமாச்சாரமாக அவங்க அத்தையம்மாவைப் பார்க்கப் போனப்ப இவங்களோட பேசினோம். அவங்களும் நிறையப் பொய் பேசறாங்க. உங்க மாதிரின்னு நான் இன்னமும் சொல்லல்ல மைண்ட் யூ."

"என்ன பொய் சொன்னாள்?"

"அவங்கம்மா நல்லவங்க. அத்னால நேரே சொர்க்கம் தான் போயிருப்பாங்கன்னு சொன்னாங்க." என்ற ஜென்னியைத் தொடர்ந்தான் ராஜா.

"பொய் சொல்றது தனிக்கலை. அது பாவம் அவங்களுக்கு வரல்ல. அதையும் சொல்லிட்டு உங்களோட ஒட்டிப் பிறந்தவள்

"கீழே இருக்கிறவங்களை நானாகட்டும் ராஜியாகட்டும் அம்மாவாக நினைக்கிறதில்லே. அதனால்தான்."

"ஓ! அதனால்தான் நீங்களும் அவங்களை ஒரே வீட்டிலிருந்தும் பார்த்து பேசறதில்லையாக்கும்?"

"யார் அந்தம்மாவே சொன்னாங்களா?"

"ஆமாம்."

"நம்பாதீங்க. அவங்க சொல்கிறதில் முக்கால் வாசி பொய். மத்தவங்க அனுதாபத்தைச் சம்பாதிக்க எதையும் சொல்லுவாங்க. எதுவும் பேசுவாங்க. அவங்க நடக்க முடியாத முடம்னுதானே சொன்னாங்க?"

"ஆமாம்."

எழுந்து போய் கதவைத் திறந்தாள். வராண்டாவுக்குப் போய் எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

"போய் பார்த்துட்டு அப்படியே இறங்கி போயிடுங்க."

"ஏன்?"

"அந்தச் சின்ன நெக்லஸைத் திருட வேண்டிய அவசியம் எனக்கில்லே. கெட் லாஸ்ட்."

எழுந்து வெளியே வந்து படியிறங்கும் போது பார்த்தார்கள்.

நாற்காலி மட்டுமிருந்தது.

அம்மாள் காணாமல் போயிருந்தாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி.சிவலிங்கம்.
வயது: 26
முகவரி: 46, நுவரெலியா வீதி, தலவாக்கலை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: தீபன்.
வயது: 23
முகவரி: CAFE MULLER, 8640 RAPPERS WIL, SWITZERLAND.
பொழுதுபோக்கு: சினிமா, பேனா நட்பு.



பெயர்: பி. இதயரஞ்சனி.
வயது: 27
முகவரி: 62, ஜெயந்தி வீதி, ஜெயந்தி புரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எச். மஸாஹிம்.
வயது: 30
முகவரி: 210/20, மெசஞ்சர் வீதி, கொழும்பு -12.
பொழுது போக்கு: கிரிக்கெட், உதைபந்து.



பெயர்: எம். சுக்ரி.
வயது: 19
முகவரி: 424, பிரதான வீதி, பசறை.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: எம். ஷாபி.
வயது: 25
முகவரி: P.O.BOX-3717, SAFAT 13030, KUWAIT.
பொழுதுபோக்கு: ரீ.வி, பத்திரிகை.

பெயர்: ஏ. பாறூக்.
வயது: 18
முகவரி: இல.08, மகறூப் கிராமம், கிண்ணியா.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எம். பாரிஸ்.
வயது: 25
முகவரி: 58, ஸாஹிரா கல்லூரி வீதி, தர்ஹா நகர்.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: பி. சிறி
வயது: 23
முகவரி: GL. NYKQBING V13, 4560 VIG DENMARK.
பொழுது போக்கு: ரி.வி., பேனா நட்பு.

பெயர்: கே. சிவகுமாரன்.
வயது: 20
முகவரி: நவகம்புர, எவ்-13, கொழும்பு -14.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: என். ராமகிருஷ்ணன்.
வயது: 18
முகவரி: கிளாசோ எஸ்டேட், நானு ஓயா.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, கிரிக்கெட்.

பெயர்: முகமட் சலாம்.
வயது: 25
முகவரி: P.O.BOX- 4103, DOHA, QATAR.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, ரீ.வி.



படிப்பகம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

77



எல்லோரும் நல்லபடி இருக்க வேண்டும் என்ற எண்ணம் தாயிடம் பிறந்து நிரம்பி வழிந்தது.

"தோழனே, நீங்கள் சொல்வது தவறு" என்றாள் அவள்: "இரத்தத்தை உறிஞ்சுபவர்கள் உங்களை மதிப்பிடுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவே கூடாது. நீங்கள் உங்களையே மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். உங்களது இதயத்துக்குள் இருப்பதைக்கொண்டு, உங்கள் நண்பர்களைக் கொண்டு தான் மதிப்பீடு செய்ய வேண்டும். எதிரிகளைக் கொண்டு அல்ல."

"எங்களுக்கு எந்த நண்பர்கள் இருக்கிறார்கள்?" என்று அந்த முஜீக் மெதுவாகக் கூறினான். "நண்பர்கள்- ஒரு வாய் ரொட்டிக்கு நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்துச் சண்டை போடுகிற வரையிலும் தான், நண்பர்கள் எல்லாம்!"

"இல்லை சாதாரண மக்களுக்கும் நண்பர்கள் உண்டு என்று நான் தான் சொல்கிறேன்."

"இருக்கலாம்; ஆனால் இங்கு அப்படி ஒருவருமே இல்லை. அது தான் விஷயம்," என்று எதையோ நினைத்துக் கொண்டு சொன்னான் ஸ்திபான்.

"ஏன் இங்கேயும் கூட நண்பர்களை நாம் தேடிக்கொள்ளக் கூடாதா?"

ஸ்திபான் பதில் சொல்வதற்கு முன் ஒரு கணம் யோசித்தான். பிறகு சொன்னான்:

> "அதிகாரிகளைக் கண்டு புன்னகை புரிவதையோ, அன்பு காட்டுவதையோ நிறுத்திவிட்டால், அவனது வழக்கத்துக்கு மாறான அந்தத் தன்மையைக் கண்டு, அவன் அதிகாரிகளுக்கு எதிராகச் செயல்படுகிறான் என்று கருதி, அவனை இலேசாக மோப்பம் பிடித்து விடுகிறார்கள்."
>
> — பியோத்தர்.

"ஹூம்! ஆமாம், தேடித்தான் பார்க்க வேண்டும்."

"சரி, உட்காருங்கள், சாப்பாடு தயார்" என்று அழைத்தாள் தத்யானா.

தாய் தங்களிடம் கூறிய பேச்சினால் இழுக்கப்பட்டு சிந்தை இழந்திருந்த பியோத்தர் சாப்பிடும்போது மீண்டும் உற்சாகம் பெற்றான்.

"அம்மா, நீங்கள் அதிகாலையிலேயே போய் விட வேண்டும்; அப்போதுதான் யார் கண்ணிலும் படாமல் போகலாம்" என்றான் அவன்: "பக்கத்து ஊர் வரையிலும், வண்டியிலேயே போக வேண்டும். ஆனால் நகருக்குள் போகக் கூடாது. ஒரு தபால்வண்டியை அமர்த்திக்கொள்ளுங்கள்."

"அவள் ஏன் அமர்த்த வேண்டும்? நானே அவளுக்கு வண்டியோட்டுகிறேன்" என்றான் ஸ்திபான்.

"இல்லை. நீ ஓட்டக்கூடாது. அவர்கள் யாராவது உன்னைப் பார்த்து, 'இவள் இரவு உன் வீட்டில் தங்கினாளா?' என்று கேட்டால், நீ என்ன சொல்வாய்? 'ஆமாம், தங்கினாள்' என்பாய். 'இப்போது எங்கே போகிறாள்?' என்றால், 'நான் அவளைப் பக்கத்து ஊர் வரையிலும் கொண்டு விடப்போகிறேன்' என்பாய். உடனே, 'ஓஹோ, நீதான் அவள் தப்பித்துக் கொண்டு போக வழி செய்தாயா?' என்று சொல்வார்கள்; 'அப்புறம் நீ சிறைக்குப் போக வேண்டியதுதான்.' சிறைக்குப் போவதற்கு இப்போது ஒன்றும் அவசரமில்லை, எல்லாம் அதனதன் காலத்தில் தானே நடக்கும். சாகிற காலம் வந்து விட்டால் ஜார் அரசனும் கூட சாகத்தான் செய்வான் என்பது பழமொழி. ஆனால் நான் சொல்கிறபடி செய்தால், அவளாக எங்கோ இரவைக் கழித்து விட்டு? ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு போவது மாதிரி இருந்தால் நல்லது. நம்முடைய கிராமம் ராஜபாட்டைக்கு அருகிலிருப்பதால், எத்தனையோ பேர் இரவில் இங்கு தங்கிப் போவார்கள்."

"பியோத்தர்! இவ்வளவு தூரம் பயப்படுவதற்கு நீ எங்கே கற்றுக் கொண்டாய்?" என்று குத்தலாகக் கேட்டாள் தத்யானா.

"ஏனம்மா எப்படியெப்படிச் செய்வது என்று தெரிந்து கொள்ளவுமா கூடாது?" என்று தன் முழங்காலில் தட்டிக்கொடுத்தவாறே சொன்னான் பியோத்தர். "எப்போது பயப்படவேண்டும், எப்போது தைரியமாயிருக்க வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்துதான் வைத்திருக்க வேண்டும். நினைத்துப் பார். அந்தப் பத்திரிகையை வைத்திருந்ததற்காக வாகானவைப் ஜில்லா அதிகாரி என்னபாடு படுத்தினார் என்பது உனக்குத் தெரியாதா? அப்புறம் காசுக்காகட்டும், ஆசைக்காகட்டும்- அவன் கையிலே ஒரு புத்தகத்தைக் கொடுக்க முடியுமா? கொடுத்தால் வாங்கத் துணிவானா? அம்மா, நீங்கள் என்னைப் பரிபூரணமாக நம்பலாம். நான் என்னவோ கொஞ்சம் அடாபிடிக்காரன். இருந்தாலும் நான் நீங்கள் தரும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் ஆள் பார்த்து இடம் பார்த்து விநியோகிக்கிறேன். எங்கள் ஜனங்களில் பெரும்பாலோர் மிகவும் பயந்தவர்கள், படிப்பில்லாதவர்கள் என்பது உண்மைதான். இருந்தாலும், பலமாக மூடிய கண்களைக் கூட, பலவந்தமாகப் பிதுக்கித் திறந்து உண்மையைப் பார்க்கும்படி செய்யும் காலம் வரத்தான் போகிறது. இந்தப் பிரசுரங்கள், விஷயத்தை மிகவும் சுளுவாகச் சொல்லி விடுகின்றன. விஷயம் இதுதான்: 'சிந்தித்துப்பார். மூளைக்கு வேலை கொடு'-என்பது தான். சமயங்களில் படித்தவர்கள் புரிந்து கொள்வதைவிட படியாதவர்களே அதிகமாய் புரிந்து கொள்கிறார்கள். அதிலும் படித்தவர்களுக்குத் தொந்தி விழுந்து சோற்றுக் கவலையில்லாது போய் விட்டால் அவர்களுக்குப் புரியவே புரியாது. இந்த வட்டாரத்தில் நான் எவ்வளவோ பிரயாணம் செய்திருக்கிறேன். எவ்வளவோ பேரைக் கண்டிருக்கிறேன். நாங்கள் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறோம். ஆனால், எடுத்த எடுப்பிலேயே அகப்பட்டுக் கொள்ளாதவாறு, மிகுந்த ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வதற்குக் கொஞ்சம் மூளையைச் செலவழிக்க வேண்டும். அவ்வளவுதான். நிர்வாகிகள் தாங்கள் கத்திமீது அமர்ந்திருப்பது போலவே உணர்கிறார்கள். எவனாவது ஒரு முஜீக் அதிகாரிகளைக் கண்டு புன்னகை புரிவதையோ, அன்பு காட்டுவதையோ நிறுத்தி விட்டால், அவனது வழக்கத்துக்கு மாறான அந்தத் தன்மையைக் கண்டு, அவன் அதிகாரிகளுக்கு எதிராகச் செல்கிறான் என்று கருதி, அவனை லேசாக மோப்பம் பிடித்து விடுகிறார்கள். அன்றைக்கு இப்படித்தான் ஸ்மல்யகோவோவிலே- அதுவும் பக்கத்துக் கிராமம்- அதிகாரிகள் வரி வசூல் செய்வதற்காக வந்திருந்தார்கள். உடனே அங்குள்ள முஜீக்குகள் கம்பும் தடியும் எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார்கள். பொலிஸ் தலைவனுக்கு அதைப் பற்றிக் கொஞ்சம் கூடப் பயமில்லை. 'ஏ, நாய்க்குப் பிறந்த பயல்களா! நீங்கள் ஜார் அரசனுக்கு எதிராகக் கிளம்புகிறீர்கள்!' என்று ஊளையிட்டான். அங்கே ஸ்பிவாகின் என்று ஒரு முஜீக் அவன் முன்னாலேயே வந்து பதில் சொன்னான்: "உன் ஜாரோடு நீயும் நாசமாய்ப்போ. அவன் எப்படிப்பட்ட ஜாராம்? உடம்பிலேயே ஒத்தைத் துணி கூட இல்லாமல் உரித்துப் பிடுங்குகிறவன் தானே!" என்று கூறினான். எனவே, காரியங்கள் இவ்வளவு தூரத்துக்குப் போயிருக்கிறது. அம்மா. அவர்கள் ஸ்பிவாகினைப் பிடித்துச் சிறையில் போடத்தான் செய்தார்கள். இருந்தாலும் அவன் வார்த்தைகளைச் சிறையில் போட முடியுமா? சின்னஞ்சிறு பிள்ளைகளுக்குக்கூட அவன் பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. அவன் பேச்சு என்றென்றும் ஒலிக்கிறது; என்றென்றும் வாழ்கிறது!"

அவன் எதுவுமே சாப்பிடாமல் விறுவிறுவென்று இரகசியக் குரலில் பேசியவாறே, தன்னைச் சுற்றிக் குறு குறுவென விழிக்கும் இருண்ட கண்களை ஒரு பார்வை பார்த்து விட்டு, விவசாயிகளின் வாழ்க்கையைப் பற்றித் தான் அறிந்தவற்றையெல்லாம் தாயிடம் பொல பொல வென்று உதிர்த்துத் தள்ளினான்.

ஸ்திபான் இடையே இரண்டு முறை குறுக்கிட்டுப் பேசினான்:

"நீ முதலில் ஏதாவது சாப்பிடப்பா."

அந்த இரண்டு முறையும் பியோத்தர் ஒரு ரொட்டித் துண்டையும் கரண்டியையும் கையில் எடுத்ததுதான் மிச்சம்; அவற்றைக் கையில் வைத்தவாறே உல்லாசமாகப் பாடும் வானம்பாடி மாதிரி தனது கதைகளையே சொல்லிக் கொண்டிருந்தான். சாப்பாடு முடிந்தவுடன் அவன் திடீரெனத் துள்ளியெழுந்து நின்று பேசினான்:

"சரி. நான் போவதற்கு நேரமாகிவிட்டது. வருகிறேன். அம்மா" என்று கூறிவிட்டு அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். "ஒரு வேளை நாம் இருவரும் மீண்டும் சந்திக்க இயலாமலே போகலாம். இருந்தாலும் உங்களைச் சந்தித்ததும் உங்களோடு பேசியதும் என்றென்னும் மறக்க முடியாத இனிய விஷயங்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சரி அந்த டிரங்குப் பெட்டியில் பத்திரிகைகளைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா? கம்பளிச் சவுக்கம் ஏதாவது? ரொம்ப நல்லது-கம்பளிச் சவுக்கம் தானே? ஞாபகம் வைத்துக்கொள், ஸ்திபான். இவன் இன்னும் ஒரு நிமிஷத்தில் டிரங்குப் பெட்டியைக் கொண்டு வந்து சேர்ப்பான். புறப்படு, ஸ்திபான். வருகிறேன், அம்மா. உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும்!"

அவர்கள் சென்ற பிறகு சுவர்க் கோழிகளின் இரைச்சல் கூடத்தெளிவாகக் கேட்டது. காற்று கூரையின் மீது சலசலத்தது; புகைக் கூண்டு வழியாகப் படபடத்தது. மெல்லிய மழைத் தூவானம் ஜன்னலின் மீது பெய்து வழிந்தது. தத்யானா அடுப்புக்கு மேலாக இருந்த பரணிலிருந்து சில போர்வைகளை எடுத்து, ஒரு பெஞ்சின் மீது விரித்து, தாய்க்கு படுக்கை தயார் பண்ணிக் கொடுத்தாள்.

"அவன் ஓர் உற்சாகமான பேர்வழி" என்று கூறினாள் தாய்.

"பெரிய வாயளப்புக்காரன். சத்தம் போடுவது தான் மிச்சம்."

"உன் கணவன் எப்படி?" என்று கேட்டாள் தாய்.

"அவன் ஒழுங்கானவன்தான். ஓரளவு நல்லவன்தான். குடிப்பதில்லை. நாங்கள் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம். அவனிடம் பலவீனமான குணம்....."

அவள் நிமிர்ந்து நின்றாள்.

"அதற்கு இப்போது நாங்கள் என்ன செய்வது?" என்று ஒரு கணம் கழித்துச் சொன்னாள் அவள். "நாங்களெல்லாம் போராடி எழ வேண்டாமா? போராடத்தான் வேண்டும். அதைப் பற்றித் தான் எல்லோரும் நினைக்கிறார்கள். ஒவ்வொருவனும் தனக்குத் தானே நினைத்துக் கொள்கிறான். ஆனால் அதை வெளிப்படையாக நினைத்துப் பார்க்க வேண்டும். யாராவது முதலில் துணிந்து காலடி எடுத்து வைக்க வேண்டும்....."

அவள் பெஞ்சின் மீது உட்கார்ந்து தாயைப் பார்த்துக் கேட்டாள்:

"சீமான் வீட்டு வயசுப் பெண்கள் கூட, தொழிலாளிகளோடு கலந்து பழகுவதாகவும், அவர்களுக்குப் பாடம் சொல்வதாகவும் நீங்கள் சொல்கிறீர்கள். அவ்வளவுக்கு, அப்படிச் செய்வதற்கு அவர்களால் முடியுமா? அவர்களுக்குப் பயமாயிருக்காது?"

அவள் தாயின் பதிலைக் கேட்டு ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். பிறகு தன் கண்களையும் தலையையும் தாழ்த்திக் கொண்டு மேலும் பேசத் தொடங்கினாள்:

"ஏதோ ஒரு புத்தகத்தில் 'அர்த்தமற்ற வாழ்க்கை' என்ற அடியைப் படித்தேன். அதைப் பார்த்த மாத்திரத்திலேயே எனக்கு அதன் அர்த்தம் உடனே புரிந்துவிட்டது. அந்த மாதிரி வாழ்க்கை எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். அதில் கருத்துக்கள் எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. எனினும் சம்பந்தா சம்பந்தமற்று, தொடர்பு இல்லாமல் இருக்கின்றன. மேய்ப்பவன் இல்லாத ஆட்டு மந்தை மாதிரி, கட்டி மேய்க்க ஆளில்லாமல் தான்தோன்றியாய்த் திரிகின்றன. அது தான் அர்த்தமற்ற வாழ்க்கை. என்னால் முடியுமானால், இந்த மாதிரி வாழ்க்கையிலிருந்து திரும்பியே பார்க்காமல் ஓடிவிடுவேன். அதிலும், உண்மை இதுதான் என்று உணர்ந்த பிறகும் அந்த வாழ்க்கையில் என்னால் கால்தரித்து நிற்க முடியாது."

அவளது பசிய கண்கள் வறண்ட பிரகாசத்திலும், மெலிந்த முகத்திலும், அவளது குரலின் தொனியிலும் தோன்றிய வேதனையைத் தாயால் உணர முடிந்தது; அவளைத் தழுவி ஆசுவாசப்படுத்தி ஆறுதலளிக்க கவிரும்பினாள் தாய்.

"அடி பெண்ணே! என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கு நன்றாகத் தெரிகிறதே...."

"ஆனால் எப்படிச் செய்வது என்று தெரியவேண்டுமே" என்று குறுக்கிட்டாள் தத்யானா. "சரி, படுக்கை தயாராகி விட்டது."

அவள் மீண்டும் அடுப்பருகே சென்று, அங்கே சிந்தனை வயப்பட்டு மெய்மறந்து ஆடாமல் அசையாமல் அமைதியாக நிமிர்ந்து நின்றாள். தாய் தன் உடையைக் கூடக் கழற்றாமல் அப்படியே படுத்துக் கொண்டாள். அவளது எலும்புகள் அசதியினால் வலித்தன; அவள் லேசாக முனகினாள். தத்யானா விளக்கை இறக்கி அணைத்தாள். அறை முழுவதும் இருள் பரந்து கவிந்த பின்னர் அவள் நிதானமாகத் தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள். அந்த இருட் படலத்திலிருந்து எதையோ துடைத்தெடுப்பது போல அவள் பேச்சு ஒலித்தது.

"நீங்கள் பிரார்த்திப்பதாகத் தோன்றவில்லையே. நானும் கடவுள் ஒருவர் இருப்பதாக நம்பவில்லை. அற்புத லீலைகளிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது."

தாய் நிலை கொள்ளாமல் பெஞ்சின் மீது புரண்டு படுத்தாள். ஆழங்காண முடியாத அந்த இருட்புலம் ஜன்னலின் வழியாக அவளை நோக்கி வாய்திறந்து கொட்டாவி விட்டது. மங்கிய சப்தங்கள் இருளின் ஊடாகத் தவழ்ந்து வந்தன. அவள் பயத்தோடு இரகசியம் போலப் பேசினாள்:

"கடவுளைப் பொறுத்தவரை- எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆனால் நான் கிறிஸ்துவை நம்புகிறேன். அவரது வாசகத்தை-'அயலானையும் உன்னைப் போல் நேசி' என்ற வாசகத்தை-நான் நம்புகிறேன்."

தத்யானா மௌனமாக இருந்தாள். அடுப்பின் இருண்ட புகைப்புலத்திலே அவளது மங்கிய உருவத்தைத் தாயால் காண முடிந்தது. அவள் அசைவற்று நின்று கொண்டிருந்தாள். தாய் துயரத்தோடு கண்களை மூடிக் கொண்டாள். திடீரென்று அந்தப் பெண்ணின் கசப்பான குரல் ஒலித்தது.

"என்னுடைய குழந்தைகள் செத்துப் போனதற்காக நான் கடவுளாகட்டும், மனிதனாகட்டும் இருவரையும் மன்னிக்க மாட்டேன், ஒருக்காலும் மன்னிக்க மாட்டேன்!"

பெலகேயா ஆர்வத்தோடு எழுந்தாள். அப்பெண்ணின் வார்த்தைகளால் சுருக்கென்று தைக்கும் வேதனையுணர்ச்சியைத் தனது இதயத்தில் உணர்ந்தாள்.

"நீங்கள் இன்னும் சின்னவர்தானே, உங்களுக்கு இனிமேலும் குழந்தைகள் பிறக்கும்" என்று அமைதியாகச் சொன்னாள்.

அந்தப் பெண் இதற்கு உடனே பதில் சொல்லவில்லை; பிறகு மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

(தொடர்ந்து வரும்)

# அநாதைகள்!

## எஃப். லெனாட்குமார்

ஊர் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. யுத்தம் பற்றி நித்தம் சிந்திக்கும் உள்ளங்கள் கூட தற்காலிகமாய் சிந்தனைக்கு ஓய்வு கொடுத்திருந்தன.

ஆனால் ஆங்காங்கு தெரு நாய்களின் சத்தம் மட்டும் தெளிவாகக் கேட்டன.

இந்த ஊர் மயான அமைதியில் மூழ்கிக்கொண்டிருக்க ஒரு ஓலைக் குடிசையில் மட்டும் சின்னதாய் ஒரு முனகல் சத்தம்.

"ஐயோ!.. அம்மா... வலிக்குது!... தாங்க முடியல்லம்மா..!" பார்த்துக் கொண்டிருக்கும் அந்த தாயுள்ளத்தால் பிரசவவலியை உணர முடிந்தாலும் எதுவுமே செய்ய முடியாத நிலை.

"பிள்ள.. எப்படி சரி கொஞ்சம் பொறுத்துக்கம்மா..! விடிஞ்சிடும்..! பிறகு ஆசுப்பத்திரிக்கு போயிடலாம்" அம்மாவான விசாலாட்சியின் குரலில் ஒரு கரகரப்பு.

ஆண் துணையில்லாத குடும்பம்.

மகளின் கணவனான வரதராஜனை யுத்தம் பலியெடுத்திருந்தது. நான்கு மாதங்களுக்குமுன் மீன் பிடிப்பதற்காய் படகில் போனவர்கள் திரும்பிவரவேயில்லை. அவர்களில் வரதராஜனும் ஒருவன்.

மகள் குமுதினியின் முனகல் மேலும் அதிகரித்திருந்தது. இதை தாயுள்ளத்தால் மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாத நிலை..

"பிள்ள.. கொஞ்சம் பொறுத்துக்கம்மா! நான் ஓடிபோய் பக்கத்து வீட்டு ராஜேஸ்வரியையும் கூட்டிக்கிட்டு வாரன்.." மகளது தலையை தடவி விட்டு நகர்ந்தாள் தாய்.

குமுதினியின் முகமெல்லாம் வியர்வை அப்பியிருந்தது. "எங்கெங்கோ விழுந்து அப்பாவிகளின் உயிர்களை பலியெடுக்கும் "ஷெல்" இங்கொன்று வந்து விழுந்து என்னை பலியெடுக்கக் கூடாதா?" என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் அவள். பிரசவ வலிதான் அவளை அவ்வாறு நினைக்க வைத்தது.



என்ன தான் யுத்தபயம் மனமெல்லாம் நிறைந்திருந்தாலும் யாருக்காவது ஆபத்தென்றால் அடுத்த கணமே எல்லாம் மறந்து உதவிக்கு வரும் அவ்வூர் மக்களைப் பற்றி விசலாட்சிக்கு நன்கு தெரியும். ஏனெனில் அது அவர்களின் தமிழ்ப் பண்பாடு.

நினைத்ததைப் போலவே அழைத்த அடுத்த கணமே ராஜேஸ்வரியும் ஓடிவந்தாள்.

விசயமறிந்து இன்னும் பலரும் சேர்ந்தனர்.

"ராஜேஸ் அக்கா மகள ஆசுப்பத்திரிக்கு கொண்டு போறது தான் நல்லமென்று நினைக்கிறன்."

விசாலாட்சி சொன்னதும் உள்ளுக்குள் சற்று பயந்தே போனாள் ராஜேஸ்வரி.

"என்ன.. தங்கச்சி நீ? விசயம் தெரியாத மாதிரி பேசிற..! ஊருல ஒரு வாகனமும் இல்ல...! எரிபொருள் தட்டுப்பாடு வேற இருக்கு. தூக்கிக் கொண்டும் போக முடியாது. அதைவிட போற வழியில "செக் பொயின்ற்" ஒன்றுமிருக்கு."

அவளது பேச்சில் நியாயமில்லாமலில்லை. சில வாரங்களுக்கு முன்புதான் அடுத்த ஊரில் கர்ப்பிணிகள் உட்பட வயது வேறு பாடின்றி யாரோ மனித லேட்டை நடத்தியிருந்தார்கள். இந்நிலையில்- அதுவும் இந்த ராத்திரி நேரத்தில் ஒருத்தியை அழைத்துச் செல்ல பயப்படுவதிலும் நியாயமிருக்கத்தான் செய்தது.

ஆனாலும் எதையும் பொருட்படுத்தாது பிரசவ வலி மட்டும் அதிகரித்துகொண்டேயிருந்தது.

"குமுதினி.. பயப்படாதம்மா! இன்னும் கொஞ்ச நேரத்தில குழந்தை பிறந்திடும்!"

ராஜேஸ்வரி எட்டு பிள்ளைகளுக்கு தாயானவள். அந்த அனுபவமே குழந்தை பிறக்குமென குமுதினிக்கு தைரியமூட்டு வைத்தது.

* * *

விசாலாட்சி தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். யாருக்கு யார் தான் ஆறுதல் சொல்லிக்கொள்ள முடியும்?

அவள் எத்தனையோ இழப்புக்களை தன் வாழ்நாளில் சந்தித்தவள். ஆனால் இன்று தன் ஒரே மகளையும் இழந்ததில் அவள் மனம் அதிகமாய் வேதனைப் பட்டுப்போனது.

ஆம்!

பிரசவத்தின் போது குமுதினியால் தன் குழந்தையைமட்டுந்தான் இந்த உலகுக்கு உயிருடன் காட்ட முடிந்தது.

விடிந்தது.

ஊர் ஒன்று கூடியது. விசாலாட்சிக்கு ஏதேதோ ஆறுதல் சொன்னார்கள்.

அழுதாள்! அழுதாள்!! அழுது கொண்டேயிருந்தாள். ஆனால் எதுவும் அறியாத அந்த சிறு குழந்தை மட்டும் அநாதையாய் இந்த உலகத்தை அதிசயமாகப் பார்த்துக்கொண்டேயிருந்தது.

www.padippakam.com

# அவள் + இரண்டு 'அவன்'கள்



கேம்பல் கனி

காஞ்சனாவுக்கும், அவனுக்கும் உள்ள உறவையும், அவள் அழகையும் மிகைப்படுத்தி, ஆனந்தனிடம் சொல்லி வெகு நேரமாக அறுத்துக் கொண்டிருந்தான் சங்கர்.

ஆனந்தனுக்கு எரிச்சலாக இருந்தது. அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

"போதும்.. நிறுத்தடா! வயித்தெரிச்சல கிளப்பாதே. நானும் இப்படித்தான் எங்க ஆபீஸ்ல, 'டைப்பிஸ்ட்' நிரூபா மேல பைத்தியமாய் திரிஞ்சேன். அவ காதலுக்காக ஏங்கிக் கிடந்தேன். நிரூபாவின் அழகைப் பற்றி சொல்லணும்னா.. இன்னிக்குப் பூரா சொல்லிட்டிருக்கலாம். ஒப்பனை எல்லாம் செய்துக்கமாட்டா.. அவளுடைய இயற்கையான அழகே போதும். பார்க்கிறவன் விழுந்துடுவான்.

இருந்தாலும் அவ... அழகைவிட, அலட்டிக்காத அவளுடைய அடக்கமான சுபாவம் தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது." என்று ஒரு புலம்பலுடன் சொந்தக் கதையை ஆரம்பித்துவிட்டான்.

"அவளோட பேசணும், நெருங்கிப் பழகணும்னு ரொம்ப நாளா ஏங்கிட்டிருந்தேன். அந்த அதிர்ஷ்டமான சந்தர்ப்பம் ஒரு நாள் கூட கிடைக்கல்ல. ஆபீசுக்குள்ள நுழையும் போது மட்டும் என்னை பார்த்தும், பார்க்காமலும் போலியான ஒரு சிரிப்பை லேசா காட்டிவிட்டு சீட்ல உட்காருவா-. அதுக்கப்புறம், வானமே இடிஞ்சி விழுந்தாலும் சரி- அவளுடைய பார்வை எல்லாம் அந்த டைப்பிங் மிஷின் மேலதான். பெரிய அழகிங்கிற நினைப்போ, ஆர்வமோ அவளுக்கு இருந்ததாகவும் தெரியல. கொஞ்சம் முன் எச்சரிக்கையான 'டைப்'ன்னு நினைச்சேன்.

ஆபீஸ்ல இன்னும் சிலர் அவளப் பார்த்து ஜொள்ளு விடுவதுமுண்டு. பக்கத்து சீட்ல இருக்கிற எனக்கே பல்லைக் காட்டாதவ.. மத்தவங்களுக்கு எதைக் காட்டுவாள்? எல்லாருக்கும் 'புஷ்' தான்!

ஒரு நாள் நிரூபா ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு கிளம்பி விட்டாள். சிறிது நேரத்தில் நானும் புறப்பட்டேன். அவளுடைய மேஜையின் மேல் ஒரு கவர் இருந்தது. அன்று முதல் தேதியானதால் நிரூபா சம்பளம் வாங்கிய கவர் அது!

அவளுடன் பேச சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி, மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்றேன். அவள் திரும்பி ஆபீஸை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் ஒரு பதற்றம் தெரிந்தது. அவள் என்னைப் பார்த்தாள், நானும் அவளைப் பார்த்து லேசாகச் சிரித்தபடி "இந்தாங்க!" என்று கவரை நீட்டினேன். என்னை நெகிழ்ச்சியாக பார்த்து அவள், நன்றியை புன்னகையாகக் காட்டிவிட்டு, கவரை வாங்கிக் கொண்டாள்.

மறுநாள் புதுப் பொலிவுடன் ஆபீசுக்குள் வந்தாள். அவளுடைய இதமான பார்வை என் மீது விழுந்தது. ஒரு வித்தியாசமான சிரிப்புடன் என் அருகில் வந்து, 'குட்மார்னிங்' சொன்னாள்.

> "நாளைக்கு உங்களோட சினிமாவுக்கு வரணும்-அவ்வளவுதானே! நோ ப்ராப்ளம். நீங்க விரும்பினா நான் வரத்தயார்."

அன்று முதல் என்னுடன் பேசி, சிரித்து, நெருங்கிப் பழகத் தொடங்கினாள். நானும் அவளிடம் மனதை முழுமையாகப் பறி கொடுத்தேன். இருப்பினும், என் காதலை அவளிடம் சொல்லவில்லை. அவள் என்னை விரும்புகிறாளா? இல்லையா? என்றும் தெரியவில்லை. இப்படியே, நாட்களும், மாதங்களும் ஓடியது.

அன்று சனிக்கிழமை, ஆபீஸ் முடிந்து இருவரும் சேர்ந்தே வெளியே வந்தோம்.

"காபி சாப்பிடலாமா?" என்றேன், அவளும், 'சரி!' என்ற பாவனையில் புருவத்தை உயர்த்தினாள்.. ஒரு ஓட்டலுக்குள் சென்று இரண்டு காபி ஆர்டர் செய்துவிட்டு அமர்ந்தோம். நாற்காலியை, இடைவெளியில்லாமல் இணைத்து என்னுடன் நெருங்கி தோளும், தோளும் உரசியபடி நிருபா அமர்ந்தாள். அந்த ஸ்பரிசத்தில் 'சில்'லென்ற ஒரு உணர்வு மெல்லிய மின்சாரம் போல் என் உடம்பில் பாய்ந்தது. அந்த ஒரு நிமிடம் இன்ப சுகத்தில் லயித்திருந்த நான், சேர்வர் காபியை கொண்டு வந்து வைத்ததும் விடுபட்டேன். அவள் மௌனமாக தலையை கவிழ்ந்தபடி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். கிடைத்த சந்தர்ப்பத்தை விடக்கூடாதென்று மெதுவா பேச ஆரம்பித்தேன்.

"நீங்க, சினிமாவுக்கெல்லாம் போற பழக்கமில்லையா?"

"ஏ.. அப்படி கேட்கறீங்க?"

"இல்லை.. நாளைக்கி ஞாயிற்றுக் கிழமையாச்சேன்னு கேட்டேன்."

"நாளைக்கு உங்களோட சினிமாவுக்கு வரணும்... அதுதானே? அதுக்கு ஏன் இப்படி தயங்குறீங்க? நோ ப்ராப்ளம். நீங்க விரும்பினா நான் வரத் தயார்."

பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்தது போல் 'பட்'டென்று சொன்னாள். மின்னல் வேகத்தில் என் எண்ணத்தைப் புரிந்து கொண்டு இப்படி ஒரு இனிப்பான பதிலைச் சொல்வாள் என்று நான் நினைக்கவே இல்லை. மேலே எதுவும் பேச முடியாமல் நான், திணறுவதைப் புரிந்து கொண்ட அவள், "நாளைக்கு மேட்னி ஷோவுக்கே போகலாம்" என்றாள்.

"தமிழா, இங்கிலீஷா,?" அதுக்கப்புறம் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

"உங்க இஷ்டம்!" என்றாள்.

அப்படீன்னா-நான் இப்பவே தியேட்டருக்கு போயி ரெண்டு டிக்கெட் 'புக்' பண்ணிக்கறேன்" என்று எழுந்தேன்.

"மூணு டிக்கெட் வாங்கிடுங்க.." என்றாள்.

'இன்னொரு டிக்கெட் யாருக்காக இருக்கும்?' என்று யோசித்தேன்.

'சரி.. தம்பியோ, தங்கச்சியோ துணைக்கு வருவார்கள்..' என்று நினைத்தேன்.

"ஆமா.. நாளைக்கு நாம எப்படி சந்திக்கிறது?"

"மூணு மணிக்கு ஷோ.. சரியா நான் ரெண்டு ஐம்பதுக்கெல்லாம் தியேட்டர் வாசல்ல வந்து நிப்பேன்." நிரூபா சொன்னாள்.

"அப்படீன்னா.. நான் ரெண்டு முப்பதுக்கெல்லாம் உங்களுக்காக காத்திருப்பேன்."

"ஷுயூர்! பை" என்றபடி டாடா காட்டிவிட்டு சென்றாள். இரவு முழுவதும் நிரூபாவை பற்றிய நினைவுகளும், கற்பனைகளும் என்னைத் தூங்கவிடவில்லை. எப்படியோ பொழுது புலர்ந்தது.

❖ ✣ ❖

சரியாக மணி ரெண்டு ஐம்பது, நான் தியேட்டர் வாசலில் நின்றேன். ஒரு ஸ்கூட்டர் என்னை மிரட்டுவதுபோல் 'பிரேக்' அடித்து நின்றது.

ஜீன்ஸ் பேண்ட், ஒயிட் ஜிப்பா, லேசான தாடியுடன் ஒரு இளைஞன் ஸ்கூட்டரை ஓட்டிவர, நிருபா பின் சீட்டில் இருந்து இறங்கி என்னைப் பார்த்துச் சிரித்தபடி மிடுக்காக நடந்து என் அருகில் வந்தாள்.

நான் கனவில் கூட நினைக்காத அந்த அருவருப்பான காட்சி எனக்கு பெரிய அதிர்ச்சியும், ஏமாற்றமும் அளித்தது. என் உள்ளத்தில் எரிமலை வெடித்துச் சிதறிய போதிலும், முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்து, அசடு வழிய சிரித்தேன். அதற்குள் அந்த தாடிக்காரனும், ஸ்கூட்டரை 'பார்க்' செய்துவிட்டு வந்தான்.

"இவர் ஷியாம்.. புயல் பத்திரிகை துணை ஆசிரியரா இருக்காரு" என்று அவனை எனக்கு அறிமுகப்படுத்தினாள்.

'ஆம்! உண்மையில் என் வாழ்க்கையில் வீசிய புயல்தான்!' என்று நினைத்தேன்.

"ஐயாம் வெரி சாரி! நான் உங்களுக்கு சொல்லவே மறந்துட்டேன். இவரத்தான் மேரேஜ் செய்துக்கப் போறேன், டேட் கூட 'பிக்ஸ்' அயிடுச்சு."

மீண்டும் என் நெஞ்சைப் பார்த்து இரண்டாவது ரவுண்ட் சுட்டாள்.

அதுக்கப்புறம், என்ன நடந்திருக்கும்னு நீயே நினைச்சிப் பாரு!"

என்று உருக்கமாக சொல்லி முடித்த ஆனந்த், சங்கரை திரும்பிப் பார்த்தான். அங்கே சங்கர் இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான்.

அவன் பாதியிலேயே எழுந்து போனது ஆனந்துக்கு தெரியாது.

நல்லவேளை, ஆனந்த் தனியா உட்கார்ந்து பேசிட்டிருந்ததை யாரும் பார்க்கல...

# அந்த தேவதை கிடைத்தால்.....

உண்மைக் கதை

சுரேஷ் பரமேஸ்வரன்

மாலையில் எழும்பியதும் முதல் வேலையாக அசோகன் வீட்டுக்கு சைக்கிளில் விரைந்தேன். மூன்று வருடங்கள் மத்தியகிழக்கில் ஏற்றுமதி நிறுவனமொன்றின் கணக்குகளை கட்டிக்கொண்டு மாரடித்து விட்டு ஊர் திரும்பியிருந்தேன். பழக்கமான முகங்கள் குசலம் விசாரித்தன. வேம்பன் சுடலை ஒழுங்கைக்குள் திரும்பினேன். ஐந்தாவது வீட்டின் கேற்றை தள்ளிக் கொண்டு நுழைந்தேன்.

அசோகனின் உழைப்பு-வீடு பிரமாதமாகக் கட்டப்பட்டிருந்தது. அசோகன் பால்ய நண்பன். பாடசாலைக் காலத்தில் நெருங்கிப் பழகினோம். அவை இனிமையான வருடங்கள். ஏ.எல். வகுப்பில் படிக்கும்போது இளமையுகத்தில் காலடி வைத்தகாலம். சைக்கிள் தான் எங்களுடைய வாகனம். யாழ்குடாநாட்டில் சுற்றாத இடம் இல்லை எனலாம். கீரிமலைக் கடலில் குளியல்,



கூவில் கள்ளுக்குப்பின்னர்தான். "கசுயூரினா" பீச் சவுக்க மரங்கள் அடர்ந்த கடற்கரை- இலங்கையின் மிக அழகான கடற்கரை அதுதான் எனும் எனது எண்ணத்தில் இன்னமும் மாற்றமில்லை.

நாங்கள் ஒன்றாகப் பார்த்த தமிழ், ஆங்கில திரைப்படங்களின் எண்ணிக்கையை கேட்டால் மயக்கம் போட்டு விழுந்துவிடுவீர்கள், "வயது வந்தவர்களுக்கு மட்டும்" திரைப்படங்களையும் விட்டு வைப்பதில்லை. திரைப்படங்களுக்கு போகும் நேரமெல்லாம் "டியுசன்" வகுப்புக்குப் போனதாக வீட்டில் கூறுவோம். பொடியள்கள் கடுமையாக படிக்கிறார்கள் என்பது வீட்டாரின் எண்ணம்.

அசோகன் வித்தியாசமான ஒரு காரெக்டர். குடும்பத்தின்மீது அபாரமான பற்றும் பாசமும் கொண்டவன். படிப்பில் பெரிய ஈடுபாடு இல்லை. பாடசாலையிலும் டியூசன் வகுப்புகளிலும் அழகான மாணவிகளை ஆழ்ந்து இரசிப்பான். எல்லா இளைஞர்களினதும் இயல்பு அது என்றாலும் அசோகனின் இரசனையில் ஒரு வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியும். மாணவிகளை கலாட்டா பண்ணுவது அவனுக்கு கொஞ்சம் கூட பிடிக்காத விடயம். "அழகான பெண்ணொருத்தியை மணந்து பூவைப்போல பாதுகாக்க வேண்டும்" என அடிக்கடி கூறுவான். யாழ் நகருக்கு டியூசனுக்குப் போகும் பொழுது கந்தர்மடம் சந்தியிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த வீட்டில் வேலியின் மறுபுறம் கிணற்றில் தண்ணீர் அள்ளும் அழகான இளம் பெண்ணொருத்தியின் முகம் ஒன்றை அடிக்கடி காண்போம். அப்போதெல்லாம் "அந்த தேவதை கிடைத்தால் அது என் யோகம்." என அசோகன் தனது குரல் வளத்தை காட்டுவான். அவள் இலேசாகப் புன்னகைப்பாள்.

"ஆ...... தம்பியே?" குரல் கேட்டு கற்பனை கலைந்தேன். அசோகனின் அம்மா கண்களில் கண்ணீர் பெருக ஓவென அழத் தொடங்கினார். நான் சற்றுக் குழப்பமடைந்தேன். "தம்பி அசோகன் எங்களை விட்டுப் போயிட்டாண்டா," நான் அதிர்ந்து நின்றேன். கடைசி ஆறுமாதங்களாகத்தான் அவனிடமிருந்து கடிதம் வருவது நின்று போயிருந்தது. அசோகன் சவப்பெட்டிக்குள் கிடத்தப்பட்டிருந்த காட்சிகளை புகைப்படங்களாகப் பார்த்தேன். அசோகனின் அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு சைக்கிளில் மனம் போன போக்கில் ஓடத் தொடங்கினேன். 'மது போதையில் எட்டாவது மாடியிலிருந்து தவறி விழுந்து மரணம்.' நம்ப முடியவில்லை.

எனக்கு பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பு கிடைத்தது. அசோகனுக்கு கிடைக்கவில்லை. பசுமை தேடி "ஏரோபுளொட்" விமானத்திலேறிப் பறந்தான். இத்தாலியில் சர்க்கஸ் ஒன்றில் குதிரை கழுவும் வேலை. பிரான்சில் பெட்ரோல் நிலையத்தில் பெட்ரோல் போடும் வேலை-என பலவிதமான உத்தியோகங்களுக்கு(?) பின்னர் கப்பல் ஒன்றில் சேர்ந்தான். வேலை எதுவாக இருந்தாலும் சம்பளத்தின் செழுமை-ஊரில் அசோகனின் குடும்பத்தில் தெரிந்தது. அக்காவின் திருமணம், தம்பியின் ஜப்பான் பயணம், ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் கல்வீடு. அசோகனின் அம்மாவுக்கு அவனைப்பற்றி ஏகப்பெருமை. பெண்கூட பார்த்து வைத்திருந்தார்.

கப்பலில் முதலில் "ஸ்டூவர்ட்" எனும் பணியாளாகத்தான் வேலைக்கு சேர்ந்தான் அசோகன். ஆனால் கப்பல் காப்டனின் "ஸ்டூவர்ட்" ஆக இருந்தது அசோகனின் முன்னேற்றத்துக்கு துணைபுரிந்தது. ஏ.எல் பௌதீக பாடத்தில் பெற்ற சித்தியினால் கப்பல் காப்டனின் கணிப்புகளுக்கு உதவ அசோகனால் முடிந்தது. பதவி உயர்வுகளும் கிடைத்தன. கப்பலில் வேலை செய்த ஏனைய நம்மவர்களின் பொறாமை பற்றியும் குறிப்பிடுவான் கடிதத்தில்.

கப்பலில் நம்மவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு பிடிபட அசோகனும் கைது செய்யப்பட்டான். மீண்டும் வழமை போல் வேறொரு கப்பலில் சாதாரண "ஸ்டூவர்ட்" ஆகச் சேர்ந்தான். ஒரு முறை கப்பல் அமெரிக்காவின் துறை நகரமொன்றில் நங்கூரமிட்டபோது, கப்பலில் இருந்து இறங்கி சென்றுவிட்டான். பின்னர் புத்தக நிலையமொன்றில் வேலை செய்யத் தொடங்கினான். கடிதங்களில் வெள்ளை தேவதைகளின் அழகு பற்றிய வர்ணிப்புகளும் இருக்கும்.

திடீரென்று ஒரு நாள் அமெரிக்க கறுப் பழகியை (வெள்ளைக்கார-கறுப்பு இன பெற்றோரின் மகள்) திருமணம் செய்யப் போவதாக எழுதியிருந்தான். அழகியுடன் இணைந்து நிற்கும் படமொன்றும் அனுப்பியிருந்தான். உண்மையிலேயே தேவதைதான். திருமணத்தின் பின் ஓரிரண்டு கடிதங்களே எனக்கு கிடைத்தன.

□□

விடுமுறை முடிந்து வேலைக்குச் செல்ல விமான நிலைய பரபரப்பில் மூழ்கியிருந்தேன். "ஹலோ மச்சான்!" திரும்பினேன். சுரேஷ் "அடேய் எப்படி?" வழமையான விசாரிப்புக்கள். அசோகனின் மரணம் பற்றி கதை வந்தது. "மச்சான் அது விபத்து மரணம் இல்லை-கொலை" என்றான் சுரேஷ். நான் அதிர்ந்து போனேன். "அசோகனின் ஆயுட் காப்புறுதி பணத்தைப் பெற, அவன்ர பொண்டாட்டியும் தம்பி மாரும், அசோகன் போதையில் மாடி பால்கனியில் நின்றபோது, தள்ளி கொலை செய்துட்டு விபத்து மரணம் என்று கதை விட்டாங்க," அமெரிக்க பொலிஸ்காரனுங்களா விடுவாங்க? கிண்டி கிளறி கதை வெளியே வந்துவிட்டது.

விமானம் முகில்களினூடாக பறந்து கொண்டிருந்தது. கடைசியில் அசோகனின் அழகுதேவதை மரணதேவதையாகி விட்டாளே. மனம் பாரமாக இருந்தது. "சேர், வட் யு லைக் டு ஹாவ்?" விமான தேவதை "சாப்பிடுவதற்கு என்ன விருப்பம்" எனக் கேட்டாள்.

# "காற்றினிலே வரும்....."

ஷர்மிலா இஸ்மியில் - கண்டி



"உனக்கான என் தேடலில் நான் தொலைந்து போய் விடுவேனோ தெரியாது அன்பே. கண்ணீரும் கவலைகளுமே என் வாழ்க்கையின் வரப்பிரசாதங்களா.....?"

கண்ணீர் தடவிய அவ்வரிகளில் கண்களை ஓட விட்டவள் மனதுக்குள் பரிதாப அலைகள் முட்டி மோதின. பாவமே என்ற பச்சாதாபம் மேலெழும்பியது. இன்னும் தொடர்ந்து வாசித்தாள்.

"நேசத்தை விதைத்து நெஞ்சமெல்லாம் நிறைந்து உயிருக்குள் உருகிப்போன என் அன்பே, இன்று கனவில் கூட நெருங்கும் தூரத்திற்கப்பால் போனதென்ன? எங்கிருக்கிறாய்? என்ன செய்கிறாய்? என்னை நினைத்திருக்கிறாயா? இல்லை என் பெயரைக் கூட உன் இதயம் நினையாது மறந்து விட்டதா?

வரண்டிருந்த என் வாழ்க்கையின் வசந்தங்களை துளிர்க்க வைத்து பூக்களைப் பறித்து விட்டாயே? விதியை நோவதா? என்னை நோவதா? இல்லை-இதயத்தைப் பறித்து நேசிப்பதாய் நெருங்கி வந்து பின் விலகிப் போன உன்னை நோவதா?

வெறும் கறுப்பு வெள்ளையில் மாத்திரமே வாழ்க்கையை வழி நடத்திக் கொண்டிருந்த எனக்குள் வர்ண ஜால வானவில்லாய் காதலை தீட்டிவிட்டு கரைந்து போனதென்ன? நந்தவனம் கட்டிவிட்டு இனிமையிலிருந்தேன் நரகத்தைக் காட்டி விட்டு நகர்ந்து விட்டாய்.

இதுதான் காதலென்பதா? இல்லை கானலென்பதா? என்ன தவறு செய்தேன்? ஏன் எனை விட்டு விலகிப் போனாய்? இத்தனை மனிதர் மத்தியில் நாள்தோறும் நான் தேடுகிறேன். உன்முகம் என்றாவது என் கண்ணிற்கு கிட்டாதா? தேடிப் பார்க்கிறேன். தெரிந்தவரெல்லாம் புன்னகைக்க மனதுக்குள் நான் கண்ணீரோடு புன்னகைப்பதாய் பாவனை செய்கிறேன்.

என்றாவது ஒரு நாள்-ஒருநாள் நீ திரும்பி வாருவாயென இதயத்துக்குள் ஒழுகும் இரத்தத்தின் ஓசையில் ஓர் ஒலி கேட்கிறது. இருட்டிய போதும் பின் விடிந்து போன பொழுதுகளிலும் அதே ஓசை, நீ வருவாய் என நான். ஆனால் நீ.....?"

> "உயிர் நதிக்கு
> உன்நினைவென்னும்
> அணை கட்டி
> அது ஒழுகிடாமல் வைத்துள்ளேன்"

வரிகளை வாசிக்க வாசிக்க அவள் மனதினுள் இனம் புரியாத சோகம் கவிழ்ந்து கொள்கிறது. 'என்ன மாதிரியான காயமிது? அழுதும் ஆறவில்லை. காலத்தால் மாற்ற முடியவில்லை. இது காயமில்லை; காதல். உண்மைக் காதல். விட்டுப்போன பின்பும் தொட்டுத் தொடரும் ஒரு மனதின் அடிவாரத்துப் புலம்பல்; அழுகை; சோகம், காதலின் கண்ணீர். நொறுக்கப்பட்ட இதயத்தின் இரத்தம் கண்ணீராய்க் கசிகிறது. கட்டுப் போடுவது எப்படி? விட்டுப் போன மறுபாதி என்று வந்து சேருமோ அன்றே ஆறும் காயம் இது. இல்லை எனில் இது காலமெல்லாம் கதறும். கண்ணீர் விடும். என்றாவது ஒரு நாள் சோகமான தன் உயிரைத் துறந்து மண்ணிற்குள் போகும்; விடும் கவலைகள் அப்போது. ஆனாலும் ஆத்மா? அது அழுத படியே கிடக்குமோ? அலையுமோ?"

யோசித்தாள். தலை கனத்தது. இப்படியும் இருக்க முடியுமா? இந்தக் காலத்தில்? நிமிஷக் கணக்கில் கண்டதும் காதலும் பின் விருப்பில் குறை கண்டதும் கைகழுவிப் போதலும் சகஜமான நவீன காலத்தில் காத்திருக்கக்கூடுமா? இத்தனைகாலமாய் ஒரு காதல் மனம்? இது கூடுமா, நிறைவேறுமா? சாத்தியந்தானா இந்தக் காத்திருப்பு? அவளுக்குப் புரியவில்லை. இன்னும் வாசித்தாள். கடிதத்தைப் பிடித்திருந்த கைவிரல்கள் மெலிதாய் நடுங்கின.

".....உயிர் நதிக்கு உன்நினைவெனும் அணை கட்டி-அது ஒழுகிடாமல் வைத்துள்ளேன். ஒரு தரம் முகங் காட்டிப் போ. ஒரு வார்த்தை எனை நோக்கி பேசிப்போ போதும். நான் இனி சிரித்திருப்பேன். வாழ்வெலாம். உன் நினைவிலேயே கழித்திருப்பேன். ஒரு முறை- ஒரே ஒரு முறை எனக்கந்த வரம் தர.. .வந்து போ. உன் கரிய விழிகளால் என்னை ஊடுருவிப் பார். உதடு திறந்து ஒரு வார்த்தை சொல் போதும். எனக்கதுவே போதும். மீண்டும் நீ வந்தெனை பார்த்ததையெண்ணி வாழ்வினில் வேறொரு காதலை ஒதுக்கி வைப்பேன். கருமங்கள் பல கொண்டதே வாழ்க்கை. அதில் காதல் மட்டுமில்லை; கடமைகளும் அடக்கம் தெரியும். உன்னோடு தொலைந்தது என் காதல். மீதிருக்கும் கடமைகளே வாழ்வாகட்டும். கனவுகளே நீ தந்த சுகங்களாகட்டும். நினைவுகளே உன் பரிசுகள். சுகமான சுமைகள். ஒரு முறை எனை சிரிக்க வைத்து காலமெல்லாம் அழவைத்து விட்டாய். இருப்பினும் நன்றிகள்....."

எங்கிருந்தோ காற்றிலே பறந்து வந்து காலுக்கடியில் விழுந்த அக்கடிதத்தை வாசித்து முடித்தவள் கையிலிருந்து மறுபடியும் வந்த காற்று பறித்து அடித்துப் போயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## பொல்லாத கள்!

தருவது ரசிகன்

இருபுறமும் அடர்ந்த காடு. சூரியன் தொலைந்துபோன மாலை என்பதால் இருளின் தட்டிக் கேட்க ஆளில்லாத ஆட்சி. காட்டுவழிப் பாதையில் இரு புரவிகள் இழுத்துச் செல்ல பறந்து கொண்டிருந்த தேரில் பயம் கவிந்த முகங்களோடு அழகிகள் இருவர்.

ஒருத்தி இளவரசி நீலவிழி. அடுத்தவள் தோழி. "விரைவாகப் போ" என்றாள் தேர் ஓட்டியிடம் நீலவிழி.

"இதற்காகத்தான் சொன்னேன். இந்தப் பாதையில் செல்ல வேண்டாம் என்று. குறுக்கு வழி என்றீர்கள். இப்போது பாருங்கள் குருட்டு வழி போலத் தெரிகிறது." என்றாள் தோழி.

"ஏனடி பயப்படுகிறாய்?" என்றாள் தனது பயத்தை மறைத்தபடி இளவரசி.

"ம்ஹூம். உங்களுக்கு மட்டும் பயமில்லையாக்கும்?"

"எனக்கென்ன பயம்?"

"அதுதானே!" என்றாள் கேலியாகத் தோழி.

"நான் பயப்படுவதாக நினைக்கிறாயாக்கும்!"

"சேச்சே.. பயம் என்றால் என்னவென்று அறியாதவரல்லலோ நம் இளவரசியார்."

"சும்மா போடி!" என்று தோழியின் கன்னத்தைக் கிள்ளினாள் நீலவிழி.

"வலிக்கிறது. விடுங்கள்!"

"இதற்கே வலிக்கிறது என்றால், நாளை வருபவன் கிள்ளினால் என்ன பாடுபடப் போகிறாயோ?"

"ஏன் கிள்ளவேண்டும்?"

"என்னடி கேள்வி இது.? ஆனால் ஒன்று. கன்னத்தில் மட்டும்தான் கிள்ளுவான் என்றில்லை!" சொல்லிவிட்டு நகைத்தாள் இளவரசி நீலவிழி.

தேர் ஓட்டிக்குக் கேட்கப்போகிறது என்று சைகையால் காட்டினாள் தோழி.

திடீரென்று தேர் ஓட்டம் தடைப்பட்டது.

"ஏன் நிறுத்திவிட்டாய்?" என்று கேட்டபடியே திரையை விலக்கி எட்டிப்பார்த்த நீலவிழி 'வீல்' என்று அலறிவிட்டாள்.

தேர் எதிரே கையில் குறுவாளுடன் நின்றான் அவன். சற்றுக் குள்ளமான உருவம்தான். ஆனால் திடமான உருவம். கறுத்த உடம்பு. விரிந்து கிடந்த வெற்று மார்பில் முடிப்புதர்கள். உதட்டுகளுக்கு மேலே மீசை இல்லை. கண்கள் சிவந்திருந்தன. வாரிவிடப்படாத தலைமுடி.

"யார் உள்ளே?" என்றான். பயம் காட்டும் குரல். திரையை மூடிக்கொண்டு நீல விழியும், தோழியும் உள்ளே நடுங்கிக் கொண்டிருந்தனர்

தனது கேள்விக்கு பதில் சொல்லாமல் தேர் ஓட்டி நடுங்கிக்கொண்டிருக்க, மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான் அவன்; "யார் உள்ளே?"

இப்போதும் பதில் வராமல் போகவே தேர் ஓட்டியின் அருகில் நெருங்கி மிரட்டுவதுபோல முறைத்துவிட்டு, தேரின் பக்கவாட்டுப் பக்கமாகவந்து திரையை முரட்டுத்தனமாக இழுத்தான்.

முகத்தை கைகளால் மூடிக்கொண்டு குனிந்திருந்தாள் இளவரசி நீலவிழி. தோழி மட்டும் பயத்தில் உறைந்தபடி அவனை நோக்கினாள்.

முகம் குனிந்திருந்தவளை அதட்டும் குரலில், "ஏய்! உன்னைத்தான்!" என்றான்.

தன்னைத்தான் என்று இளவரசிக்கும் புரிந்தது. கேட்காதது போல இருந்துவிட்டாள்.

"ம்.. என்ன திமிர். உயிரோடு திரும்பும் உத்தேசமில்லையா பெண்ணே! இந்த



மாயத்தேவனின் குரலைக் கேட்டால் சீறும் புலி கூட சினம்விட்டு பணிந்துவிடும் தெரியுமா?" என்றான்.

மாயத்தேவன் என்ற பெயரைக் கேட்டதும், "ஆ.." என்ற ஒலி எழுந்தது தோழியின் இதழ்களில் இருந்து.

மாயத்தேவன். அவன் புரட்சிக் கூட்டத் தலைவனா?, கொள்ளைக் கூட்டத் தலைவனா? என்று நாடெங்கும் ஒரு விவாதமே நடந்து கொண்டிருந்தது.

கொள்ளையிட்ட சொத்துக்களையெல்லாம் ஏழைகளுக்கு கொடுப்பதே அவன் வேலை என்றனர் ஒரு சாரார். என்னதான் இருந்தாலும் கொள்ளையிட்டா கொடுப்பது? குற்றமல்லவா என்றனர் மறு சாரார்.

அரச படையினர் அவனைப் பிடிக்க முடியாமல் பூனை பிடிக்கச் சென்ற எலிகள் போல திரும்பிக்கொண்டிருந்தனர்.

அந்த மாயத்தேவன்தான் தன் முன்பாக நிற்கிறான் என்றதும், பயத்தை விரட்டியது வியப்பு. சட்டென்று முகம் நிமிர்த்திப் பார்த்தாள் இளவரசி.

என்ன விந்தை.?!

-பார்த்தாள்-

அதுவரை பாயும் புலியாக சீறியவன் பணிவான சேவகன்போல, அந்தப் பார்வைக்கு கட்டுப்பட்டான். •

குறுவாளோடு வந்தவன், விழி வாளால் வெல்லப்பட்டான்.

இளவரசிக்கும் அவனது வெற்று மார்பும், விரிந்த தோள்களும், வியப்பான பார்வையும் வெட்கத்தை மட்டுமல்ல, நெஞ்சில் இனிப்பையும் விதைத்தது.

'கொடுமைக்காரர் என்றார்கள். அப்படி தெரியவில்லையே!' என்று மனதுக்குள் நினைத்தாள்.

"சேச்சே.. இப்போதுதானே கண்டேன். அதற்குள்ளாக இவருக்காகப் பரிந்து பேச ஆரம்பித்துவிட்டதே மனம்." என்று வெட்கப்படவும் செய்தாள்.

பயத்தில் குனிந்திருந்ததாலும், பதட்டத்தாலும் சரிசெய்ய மறந்திருந்த மேலாடை இளமைக் குன்றுகளின் வசீகரத்தை மாயத்தேவனுக்கு புரியவைத்தது.

இருவருக்கும் இடையே நடக்கும் மௌன நாடகத்தை கவனித்துக் கொண்டிருந்தமையால், சற்றே துணிச்சல் வந்தது தோழிக்கு. தொண்டையைச் செருமிக்கொண்டாள்.

"நாங்கள் போகலாமா," என்று கேட்டாள். இருவருக்குமே அவள் கேள்வி செவியில் ஏறியதாகத் தெரியவில்லை.

இரண்டாவது முறையாக சற்று உரக்கவே கேட்டாள் தோழி. "நாங்கள் போக அனுமதியுண்டா?" இருவரும் மீண்டனர்.

அவன் வாயே திறக்கவில்லை. 'போகலாம்!' என்பதற்கு அடையாளமாக தலையை மட்டுமே ஆட்டினான்.

தேர் ஓட்டியைப் பார்த்து "போகலாம்" என்று உத்தரவிட்டாள் தோழி. தேர் பறந்தது.

தேர் சென்று மறையும் வரை பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந்தான்.

"என்னப்பா மாயத்தேவா, கொஞ்ச நாட்களாய் உன் போக்கே மாறிவிட்டதேயப்பா!" என்றான் நண்பன்.

கேட்டவனுக்கு தன் காதல் கதை சொன்னான் மாயத்தேவன்.

"காட்டுக்குள் அவளை வழி மறித்தேன்! கையில் உள்ளதை தா என்றேன்! கண்ணில் இருந்ததை நீட்டிவிட்டாள்! மனதை எடுத்துக் கொடுத்துவிட்டேன்!"

நண்பன் வியந்தான். கல்லுக்குள் ஈரமா? இரும்புக்குள் நெகிழ்ச்சியா?

"காணாததைக் கண்டுவிட்டாயாக்கும் போடா!" என்று சீண்டினான்.

"ஏறாத மலையெங்கும் ஏறி வந்தேன். ஆனால், எங்கும் காணாத மலையிரண்டை அன்றுதானே கண்டு கொண்டேன்! மலை அசையும் என்றும் பார்த்தறிந்தேன்!"

"மயங்கிப் போனாய். பிதற்றாதே. அவள் யாரோ, இனி மீண்டும் வருவாளோ?" என்றான் நண்பன்.

"விதைபோட்டு போன கள்ளி, நீரூற்ற வராமலோ போவாள்? நெஞ்சில் பால் வார்க்க நினைக்காமலோ போவாள்?" என்றான்.

"நீ பெரிய திருடன் என்று தெரிந்தும் திரும்பிவர நினைப்பாளோ சொல்?"

"அட, போடா போ! என்னைவிட மா கள்ளி அவள்! மா கள்ளி! திருடினாள், திகைக்க வைத்தாள்! பார்வையால் வருடினாள்! இதழ்களில் மொழியின்றியே என்னோடு பேசினாள்! பாவி மகள், என் இதயத்தைக் களவிச் சென்றாள்! திரும்பக் கிடைக்காத திருட்டு!"

"ஆனால் நீயும் விரும்பித்தானே கொடுத்தாய்?"

"விரும்பாமல் போவேனோ, கண்டதும் இனிப்பில் மொய்த்த எறும்பாகிப் போனேனே!"

"அடடா, இரும்பாக நின்றவனை கரும்பாக நினைத்து கடிக்க நினைத்தாளோ அக் காரிகை?" நண்பன் கேட்டான்.

"உனக்கென்ன கேலிதான்! எனக்கென்றோ தெரியும் சுகம்! பார்வைக்குள் கள்ளை வைத்தாள். நெஞ்சுக்குள் வெறியைத் தந்தாள்! நினைவெல்லாம் போதை மயம்! கனவெல்லாம் அவள் உருவம்! காணக் காணக் கள் ஊறும்! நினைக்க, நினைக்க வெறியேறும்!"

மாயத்தேவன் புலம்பினான். நண்பன் அவன் எதிரே ஒரு குவளையில் கள் கொண்டு வந்து வைத்தான்.

"இதைக்குடி! நிஜக் கள்ளால் போகுமடா நினைவுக் கள்!" என்றான்.

மாயத்தேவன் கள் குடித்தான். பிடிக்கவில்லை. வைத்துவிட்டான்.

"கள் பெரிதா, கள்ளியவள் பெரிதா?" என்றான் நண்பன்.

"கள்ளியவள் ஊறவைத்த ஆசை பெரிது. பெரிதிலும் பெரிது!" என்றான்.

"எப்படியடா?"

"உண்டால்தானே கள் மயக்கம் தரும் ஆனால் அவளைக் கண்டாலே மயக்கம் வரும்!" என்றான் மாயத்தேவன்.

அவன் சொன்னதில் தவறு உண்டோ? இல்லை என்கிறாரே திருவள்ளுவரும்.

**"உண்டார்கண் அல்லது அடு நறாக்**
**காமம் போல்**
**கண்டார் மகிழ் செய்தல் அன்று."**

அதிகாரம்-109-குறள்-1090

# சிந்தியா பதில்கள்

* டியர் சிந்தியா! காதல் என்பது எதுவரை?

செல்வி. கி. நிஷாந்தி, கம்பளை.

"முழுமைபெற்ற காதல் என்றால் முதுமைவரை ஓடிவரும்." அதுதான் கண்ணதாசன் சொன்னது.

* கலைஞர் கருணாநிதி பற்றி ஒரே வரியில் சொல்லுங்கள்?

சி. கோடீஸ்வரன், நுவரெலியா.

எழுபதைத்தாண்டிய இளைஞர்.

*டியர் சிந்தியா! இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் கருணாநிதி 4வது தடவையும் பதவியை மணந்தது சரியா?

எல். நூர்ஜகான், கொழும்பு-11.

நூர்ஜகான் கலைஞர் பதவியை மணந்தது பற்றி கவலைப்படவேண்டாம். அவர் சமாளித்து அசத்திவிடுவார். 26 வயது மணியம்மையை மணந்தபோது தந்தை பெரியாரின் வயது 72. துணிச்சல்காரர் பெரியார்தான்.

* 'இந்தியன்' படத்தில் கமலின் மேக்-அப் பலவிதம். அதில் உங்களுக்குப் பிடித்தது எது?

ஜி. ஜெகதீஸ், கொழும்பு-5.

அபூர்வ சகோதரர்கள் படத்தில் அந்த குள்ள அப்புவுக்காக சிரமம் எடுத்து அசத்தினார் கமல். அதே சிரமத்தை இந்தியன் அப்பு (வயதானவர் என்றால் அப்புதானே!) விடயத்திலும் செலுத்தியிருக்கிறார். ஹொலிவூட் நுட்பம் தமிழிலும் கலக்கல் கொடுத்திருக்கிறது. கமல்! கையைக் கொடுங்கள்!

* கருணாநிதி தவறு விட்டால் ரஜினி தட்டிக் கேட்பாரா?

சி. பிரமிளா, பசறை.

குட்டியே கேட்கலாம் என்றுள்ளாரே கலைஞர்.

* காலங்களால் அழியாதது கல்வியா, காதலா?

சா. பத்மகுமார், மகிழூர்.

காதலையும் காவியமாக்கும் கல்வி.

* மனைவியாகப்போகும் பெண்கள் கணவனுக்கு முதலில் என்ன கொடுக்க வேண்டும்?

கே. எம். இக்பால், அ/நிக்கவெவ.

அதுதானுங்க அது-மனது!

* காதலில் தோல்வி அடைந்தும் கவலையில்லாமல் இருக்கும் ஆண்களைப்பற்றி?

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07

டேக் இட் ஈஸி பொலிசி.

## கபில் பாய்ச்சல்

* சிந்தியா! அண்மையில் கிடைத்த சந்தோசமான செய்தி என்ன?

என். ரீ. அமீனுதீன்-அக்கரைப்பற்று-06.

அம்மணி கிளீன் போல்டானது.

* டியர் சிந்தியா! ரவுண்டப்பில் மாட்டியதுண்டா?

முகமட் ஹனிபா, தம்பலகமுவ.

சேச்சசே அப்படி ஒன்றும் நான் அழகு கிடையாது. அதுசரி, நீங்கள் எந்த ரவுண்டப்பைச் சொல்கிறீர்கள்?



* நடிகர் ரஜினிகாந்தின் தற்போதைய அரசியல் திட்டம் என்னவாக இருக்கும்?

எம்.எச். ஜெமீல், காங்கேயனோடை.

## கமல் அசத்தல்

அப்படியெல்லாம் திட்டம் போட்டு கோட்டையைப் பிடிக்கும் கனவெல்லாம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவர் உணர்ச்சிகரமான மனுஷன். மனதில் பட்டதை சட்டென்று சொல்லும், செய்யும் ரகம். நாளை என்ன நடக்கும் என்று இன்று அவருக்கே தெரியாது. அதுதான் மெய்.

* சென்ற ஆண்டில் உங்கள் சாதனை என்ன?

வே. பன்னீர் செல்வம், பலாங்கொடை.

சொன்னால் கோபிக்கமாட்டீர்கள்தானே? உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் அடிக்கடி தலைமறைவானதுதான். (பூ.... இதற்கா அந்தப் பீடிகை?)

*விரைவிலேயே 'இரண்டாவது இன்னிங்ஸின்' அவசியத்தை உணர்த்தும் இந்திய தேர்தல் முடிவு குறித்து?

எஸ். பி. சுப்பிரமணியம், அக்கரப்பத்தன.

அவசியம் பளிச்சென்று தெரிவதென்னவோ உண்மைதான். ஆனால் உடனடியாக ஆட்டத்தை ஆரம்பிக்காமல் இழுத்தடித்து கால அவகாசம் பெறத்தான் ஆட்டக்காரர்கள் நினைக்கிறார்கள். பிரதான ஆட்டக்காரர்களான காங்கிரசும், பாரதிய ஜனதாவும் பல கணக்குகள் வைத்திருக்கிறார்கள். கிடைக்கும் கொஞ்ச நஞ்ச அவகாசத்தில் தமது அணியைப் பற்றிய நல்லபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வது பா.ஜ. கட்சியின் கணக்கு. பதவிப் போட்டி, ஆட்சியமைக்க போட்டிகளை உருவாக்கிவிட்டு, நான் மட்டும்தான் நிலையாக நின்று ஆடக்கூடியவனாக்கும் என்று நினைக்கவைப்பதுதான் நரசிம்மராவின் மனக் கணக்கு. நிச்சயமாக இரண்டாவது இன்னிங்ஸ் உண்டு. எப்போது என்பதுதான் பிரச்சனையே!

* நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்கள் ஏன் புறக்கணிக்கப்படுகின்றனர்?

முஹம்மது நிஸ்தார் ஐயூப், கல்முனைக்குடி-07.

அரசியல்வாதிகள் அவர்களை நிமிர விடாமல் முதுகில் ஏறி இருக்கிறார்களே; அதனால்தான்!

* அன்புள்ள சிந்தியா! கிரிக்கெட்டிலிருந்து தோல்வியுடன் விடைபெற்ற இந்திய அணியின் மனோஜ் பிரபாகரின் அரசியல் பிரவேசம் பற்றி?

எஸ். கிருஸ்ணகுமார், ஹட்டன்.

கிரிக்கெட்டில் அரசியல் புகுந்துவிட்டது என்று கண்டித்துக்கொண்டே அரசியலுக்கு சென்றார். அரசியலும் அவரைக் கைவிட்டு விட்டது.

* மனோஜ் பிரபாகர் மீண்டும் கிரிக்கெட் ஆட வருவாரா?

சி. துஷ்யந்தன், மட்டக்களப்பு.

மனோஜ் பிரபாகருக்காக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைமீது பாய்ந்திருக்கிறார் கபில்தேவ். ஒரு வீரரின் திறமையை இரண்டு ஓவர்கள் எப்படித் தீர்மானித்தது என்று தெரியவில்லையே எனக் குமுறியிருக்கிறார். கபில் பழுத்த வீரர். அவரது கோபத்தில் உள்ள நியாயத்தை இந்திய கிரிக்கெட் சபை உணர்ந்தால், பிரபாகர் மீண்டும் பந்தை ஒரு 'பிடி' பிடிக்கலாம்.

* அன்பு காதலாக மலர்வது எப்படி? எப்போது?

என்டோ கமால், கொழும்பு-13.

இப்படியான கேள்வி கேட்கவேண்டும் என்று உங்களுக்கு எப்போது, ஏன் தோன்றியது என்று நினைவை 'ரிவைன்' பண்ணிப் பாருங்கள்-தெரியும்.

* திருமணநாள் முதலிரவில் மனைவிக்கு அருகில் உறங்க வெட்கமாக இருக்கிறதே?

எ.ப்.எம்.எம். றிம்ஸீன், அறக்கியால.

உங்களை யாருங்க உறங்கச் சொன்னது?!

* நம் நாட்டு குழந்தைகளின் வருங்காலம் எப்படியிருக்கும்?

எம்.எஸ்.எம். முஹம்மது அலி, வெல்லம்பிட்டிய.

நிச்சயமாக நம்மையெல்லாம் நினைத்துப் பெருமைப்படத்தக்கதாக இருக்கப்போவதில்லை. அவர்களுக்கு வெளிச்சத்தை விட்டுச் செல்லாவிட்டாலும் ஒரு கைவிளக்கைக்கூட நாம் கொடுக்க மறுத்துக்கொண்டிருக்கிறோமே!.

* டியர் சிந்தியா! பாகிஸ்தான் கிரிக்கெட் நட்சத்திரம் 'முஸ்ரக்' கைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

கவிதா-ரஞ்சனி-நிவித்திகலை.

எந்தக் கோணத்தில் பந்தைப் பிடிக்கிறார்? எப்படிக் காரியத்தை சாதித்து எதிராளியை வீழ்த்துகிறார்? என்று கிரிக்கெட் விமர்சகர்களையே ஆச்சரியப்படவைக்கிறாராமே!

* அஜித்குமார், பிரசாந்த், விஜய், அருண்குமார் ஆகியோரில் முன்னணியில் நிற்கும் ஹீரோ யார்?

ஏ.என்.எம். நாஸிர், கண்டி.

இன்றைய திகதிக்கு அஜித்குமார்தான்! அமிதாப்பச்சின் தமிழ் படத்தில்கூட அவர் ஹீரோவானதிலிருந்து மார்க்கெட்டை மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

* இந்திய தேர்தல் முடிவுகள் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சாதகமா, பாதகமா?

என். பாலன், கொழும்பு-12.

சாதகமும் பாதகமாகும் நம்மவர் விவேகம் வேலை செய்யாவிட்டால்! பாதகமும்



சாதகமாகும் நம்மவர் விவேகம் கூர்தீட்டப்பட்டால். எல்லாமே நம் கையில்தான் இருக்கிறது.

* டியர் சிந்தியா! அஜித்குமார் அதிகளவில் இளம் நடிகைகளுடன் கிசுகிசுக்கப்படுகிறாரே? காரணம் என்ன?

எஸ். சாந்தி-கொழும்பு-10.

வேறென்ன, இளமைதான், இளமை! நதி எங்கே போகிறது? கடலைத்தேடி.

* இலங்கைக் கிரிக்கெட் அணியில் தங்களைக் கவர்ந்தவர் யார்?

செல்வன். ஆர். சாந்தராஜா, இரத்தினபுரி.

ஜெயசூரியா என்று சொல்வது சுலபம். ஆனால், அணியை இந்தளவுக்கு கட்டுக்கோப்பாக வெற்றியை நோக்கி நடத்திச் சென்ற கப்டனை மறக்கமுடியுமோ? அவரேதான் கவர்ந்தவர்.

* ஹிந்தி தெரியாதவர்கள் எப்படி ஹிந்திப் பாடல்களை விரும்பிக் கேட்கிறார்கள்?

இரா. சாந்தி-நாவலப்பிட்டி.

இசைக்கு மொழி கிடையாது. தவிர, தமிழ் தெரிந்தவர்கள் என்பதால் தமிழ் பாடல்களையெல்லாம் அர்த்தம் தெரிந்துகொண்டா கேட்கிறீர்கள் சாந்தி?

*பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்கிறார்களே. அப்படியானால் பணம் இருந்தால் இறந்தவர்களை எழுப்பமுடியுமா?

எஸ்.பி. கணேஷ்-தாண்டியா.

இறந்தவர்களை எழுப்ப முடியும் சிலையாக! சிலை கட்டவும் பணம் தேவைதானே. ஹி.ஹி.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 32

இராமாயணத்தில் கம்ப நாட்டாழ்வார், சூர்ப்பணகையின் மானபங்கக் காட்சியினை எவ்வாறு வடித்தார் என்பதனைக் கண்டோம். வால்மீகி முனிவரோ சற்று வேறு விதமான காட்சியைத் தருகிறார்.

இராமபிரானின் திருவுருவினைக் கண்டு

## அரக்கர்குல அழிவின் ஆரம்பம்

காமுற்ற சூர்ப்பணகை அதே அலங்கோலமான அரக்கர் உருவிலேயே இராமரை அணுகுகிறாள்; தன்னை அறிமுகம் செய்கிறாள். இராமரைப் போன்ற வீரனுக்கு சீதையைப் போன்ற- கொடிபோன்ற உடலமைப்பைக் கொண்ட- பெண் பொருந்தமாட்டாள் என்றும் தன்னைப் போன்ற பலமுடைய ஒரு பெண்ணே உகந்தவள் என்றும் வாதாடுகிறாள். இராமர் தான் ஏற்கனவே திருமணமாகி, மனைவியுடன் இருப்பதாகவும் இரு பெண்களை ஒரே தடவையில் மனைவிகளாக வைத்திருப்பதால் தொல்லைகள்தான் ஏற்படும் என்றும் கூறுகிறார். தனிமையில் காலங்கழிக்கும் தனதுதம்பி இலக்குமணனிடம் போகுமாறு, அவளுடைய கோரிக்கையைத் தட்டிக் கழித்து விடுகிறார்.

இலக்குவனிடம் சென்ற சூர்ப்பணகை



யிடம் இலக்குவன், தனது அண்ணனான இராமருக்கு தான் அடிமையாகவிருந்து பணிபுரிவதால் இராமரையே அணுகுமாறு திருப்பி அனுப்பி விடுகிறான். இலக்குமணனின் பேச்சை உண்மை எனக்கருதிய சூர்ப்பணகை, இராமரிடம் மீண்டும் வருகிறாள். "இந்த அர்ப்ப பூச்சி உன்னருகில் இருப்பதால் தானே நீ என்னை ஏற்க மறுக்கிறாய்? இவளை நான் பிடித்து விழுங்கி விடுகிறேன். பின்னர் நாம் இருவரும் மகிழ்ச்சியாக வாழலாம்," என்று கூறிக்கொண்டு சீதையைப் பிடிப்பதற்காக விரைந்தாள்.

இராமர், இலக்குவனை அழைத்து, "தம்பி இத்தகையோரிடம் விளையாடுவது வினையாகிவிடுகிறது. இவளை விரட்டிவிடு." என்கிறார். இலக்குவன் தனது வாளை உருவி, அவளை வெட்டிக் கொன்றுவிடவே நினைத்தான். ஆனால் பெண்களைக் கொல்வது பாபம் என்பதனால் அவளுடைய மூக்கையும் காதுகளையும் அரிந்து விடுகிறான்.

*********

அங்கங்கள் அறுபட்ட நிலையில் தனது தம்பியாகிய கரன் இருக்கும் அரண்மனையை நாடி ஓடினாள் சூர்ப்பணகை. போகும் போதே தனது ஏனைய சகோதரர்களான இராவணன், தூடணர், மற்றும் தேவேந்திரனையே சிறைப்பிடித்த மருமகன் இந்திரஜித் ஆகியோர் அனைவரையும் அறை கூவி அழைத்தாள். இத்தகைய வீரர்களெல்லாம் இருந்தும் நரர்களால் தனக்கு இத்தகைய கொடுமை விளைவிக்கப் பட்டுவிட்டதே என்று பிரலாபித்து ஒப்பாரி வைத்தாள்.

கரன் தனது சகோதரிக்கு நடந்த கொடுமை கண்டு கொதித்தெழுந்தான். இந்நிலைக்கு சூர்ப்பணகையை ஆளாக்கியவர்களைக் கொன்றொழித்து விட்டு வரும்படி, தன் ஆளுகைக்குட்பட்ட பதினான்கு சிற்றரசர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். சூர்ப்பணகை முன் நடக்க, பதினான்கு சிற்றரசர்களும் அவர்களுடைய படைகளும் பின் தோடர்ந்தன.

### அசுர வீரர்களின் அழிவு

இராமர், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் இருந்த இடத்தை அடைந்ததும் சூர்ப்பணகை, "அதோ அங்கு நிற்கிறார்களே! அந்த இளைஞர்கள்: அவர்களால்தான் நான் இந்தக் கோலத்தை அடைந்தேன். அவர்கள் இருவரையும் கொன்று விடுங்கள்," என்று ஆவேசமாகக் கத்தினாள்.

சூர்ப்பணகை அசுர வீரர்கள் பலருடன் வருவதை இராமர் கண்டார். இலக்குவனிடம் சீதையை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு இராமர் தனியாகவே இப்பெரும் படையினை எதிர்த்துப் போரிடத் தயாராகி விட்டார். தனது அஸ்திரங்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுத்து அரக்கர் படையை அடியோடு அழித்தார்.

தன் எதிரிலேயே தன்னுடன் வந்த- தன் தம்பியின் கீழ் பரிபாலனம் செய்யும் சிற்றரசர்களும் படையும் சிதைந்து சின்னாபின்னப் பட்டுப் போனதைக் கண்ட சூர்ப்பணகை திகைத்துப் போனாள். இத்தகைய பராக்கிரமசாலிகளைத் தன்னந்தனியனாக நின்று வதம் செய்த இராமனின் தீரத்தைக் கண்ணாரக் கண்டு கொண்டாள். முன்பை விட அதிவேகமாகவும் பலத்த சப்தத்துடனும் மீண்டும் தன்தம்பி கரனிடம் ஓடிச் சென்று முறையிட்டாள்.

"அருமைத்தம்பி! நீ அனுப்பிவைத்த பதினாலு சிற்றரசர்களையும் படைகளையும் சற்று நேரத்திலேயே, இராமன் தனியாகவே நின்று அழித்து விட்டான். அவனைச் சாதாரணமானவனாகக் கருதிவிட வேண்டாம். அவனை நீ எப்படியும் அழித்தொழிக்காவிட்டால் நமது அரக்கர் குலமே அடியோடு அழிந்து போகும். முனிவர்களினது வேண்டுகோளுக்கு இணங்கி நமது குலத்தையே முழுமையாக அழிக்கப்போவதாக அந்த இராமனே கூறுகிறான். அருமைத்தம்பி! தாமதம் செய்யாமல் படை திரட்டிச் சென்று அவனையும் அவன் தம்பியையும் இன்றே அழித்துவிடு."

இவ்வாறு சூர்ப்பணகை கூறியதும் கரன் கடுங் கோபமடைந்தான். தூடணனை அழைத்து படைகளை உடன் தயாராக்கும்படி உத்தரவிட்டான். தனது அக்காளைப் பார்த்து, "அர்ப்ப மாநிடர்களுக்காக நீ இவ்வாறு பயப்படலாமா அக்கா? இதோபார்! இன்றுடன் அவன் அழிந்தான். மாலையாவதற்குள் அவர்களை பிணமாக்குகிறேன். ஆசைதீர அவர்களுடைய இரத்தத்தைப் பருக ஆயத்தமாயிரு," என்று கூறி போருக்குப் புறப்பட்டான் கரன்.

அசுரர்கள் மிகவும் பலசாலிகள் என்பது தெரிந்ததே. கரனின் தம்பியான தூடணன் படை நடத்தி முன்செல்ல கரன் மற்றுமொரு பெரும் படையுடன் பின் சென்றான்.

இராமபிரான் தனித்து ஒருவராகப் போருக்குத் தயாராக நிற்கும் போது அவரை எதிர்க்க அசுரர் பெரும்படை அணிவகுத்துச் சென்றது. போரின் முடிவு எவ்வாறிருக்குமோ என்று தேவலோக வாசிகள் அச்சமடைந்தவர்களாக ஆகாயத்தில் வந்து நின்று பார்த்தவண்ணமிருந்தனர்.

அக்காலப் போர் முறைக்கு ஏற்ப, கரன் தனது தூதுவனை இராமரிடம் அனுப்பி வைத்தான். தான் அதிக பலம் பொருந்திய பெரும்படையுடன் வந்திருப்பதாகவும், உயிருடன் வாழ வேண்டுமானால் உடனடியாக அக்கானகத்தை விட்டு ஓடிவிடுமாறும் தூதுவனிடம் எச்சரிக்கையினை அனுப்பினான்.

### கரன் மாண்டான்

இராமர் புன்னகை பூத்தவராக, "எப்படைவரினும் எதிர்கொண்டு போரிட எப்போதும் நான் தயாராகவே இருக்கிறேன். படையெடுத்து வந்தவன் வேண்டுமானால் தப்பிப் பிழைக்க சந்தர்ப்பம் தருகிறேன். சாவதற்குத் தயாரானால் உன் தலைவனை நேராக வரச்சொல்," என்று தூதனிடம் கூறி அனுப்பினார்.

போருக்கான சூழ்நிலை உருவாகி விட்டதைக் கண்ட இராமர், இலக்குவனிடம் சீதையை பாதுகாப்பானதோரிடத்துக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். இலக்குவனும் அண்ணன் சொற்படி சீதையை ஒரு மலைக் குகையில் வைத்து காவல் புரிந்தான்.

போர் மூண்டது. ஆயிரக்கணக்கில் திரண்டு வந்த அரக்கர்படை இராமபிரானின் அஸ்திரங்களால் அழிந்தது. தனி ஒருவராக நின்றமையினால் எதிரியின் பாணங்கள் எப்பக்கத்திலிருந்தும் தன்னை வந்து தாக்காமல் தன்னைச் சுற்றி ஒரு அஸ்திரக் கவசத்தை இராமர் ஏற்படுத்திக் கொண்டார். படைகள் முழுமையாக அழிந்ததைத் தொடர்ந்து கரனும் தூடணனும் மாண்டனர். இவர்களுடன் வந்திருந்த, இவர்களின் உறவினனான அகம்பன் பின்வாங்கி ஓடத் தொடங்கினான். அவனைக் கொல்லாமல் விட்டு விட்டார் இராமர்.

### இலங்கேஸ்வரனின் தடுமாற்றம்

அகம்பன் தனது விமானத்திலேறி வான் மார்க்கமாக இலங்காபுரிக்குப் பயணமானான். இலங்கேஸ்வரன் இராவணனின் அரசவைக்கே நேரடியாகச் சென்றான். அமைச்சர்களும் அரசியல் பிரமுகர்களும் பிரதானிகளும் புடைசூழ இராவணன் அரியணையில் வீற்றிருந்தான். இராவணனின் பாதங்களில் ஓடோடி வந்து வீழ்ந்த அகம்பனை எழுந்திருக்கும்படி கூறிய இராவணன், அகம்பனின் அலங்கோலத்தைக் கண்டு துணுக்குற்றான்.

"எழுந்திரு சகோதரனே! என்ன கோலமிது? உடம்பெங்கும் இரத்தம் வடியும் காயங்களுடன் களைப்படைந்து வந்திருக்கிறாய்? என்ன நடந்தது?" என்று வாஞ்சையுடன் வினவினான் இலங்கேஸ்வரன்.

"அண்ணலே! அகிலமே போற்றும் அரக்கர் குலத்துக்கே அபகீர்த்தி ஏற்பட்டு விட்டது. எமது மரபை வேரோடு மாய்ப்பதற்கென்றே அயோத்தி மாநகரிலிருந்து ஒரு மாநிடன் வந்திருக்கிறான். ஜனஸ்தானத்தில் தன்னிகரில்லா ஆட்சிபுரிந்த தங்கள் தம்பி கரனைக் கொன்று விட்டான்!"

"என்ன! கரனைக் கொன்றுவிட்டானா? யார் அவன்?"

"கரனை மட்டுமல்ல அண்ணா; தூடணனையும் அரக்கர் படையையும் கூட தன்னந்தனியனாக நின்று வதம் செய்துவிட்டான்!"

"அகம்பா! நீ என்ன சொல்லுகிறாய்? இலகுவிலே எவராலும் அழிக்க முடியாத எனது சகோதரர்களைக் கொன்றவன் யார்? தேவனா? மூவரில் ஒருவனா? அல்லது மூவுலகுக்கும் அதிபனா? சொல்....யாரவன்?"

"அண்ணா! கோசல நாட்டரசன் தசரதச் சக்கரவர்த்தியின் மூத்த மகனாம். இராமனாம் அவன் பெயர்!"

"என்ன! இராமனா? ஓர் அற்ப மாநிடனுக்கு அவ்வளவு திமிரா? இப்பொழுதே புறப்படுகிறேன்! அவனை அணு அணுவாக அழித்தொழித்து விட்டு வருகிறேன்." இவ்வாறு கொக்கரித்த இலங்கேஸ்வரன் தன் அரியணையிலிருந்து வலது காலை எடுத்துக் கீழ்ப் படியில் வைக்கும் போதே, அக்கால் தவறியது. இதனால் கீழே விழப்பார்த்தவன்- சிம்மாசனத்தின் பிடியை கெட்டியாகப் பிடித்தமையினால் தப்பித்துக் கொண்டான்.

தனது வாழ்க்கையில் எப்போதுமே ஏற்படாத தடுமாற்றம் ஏற்பட்டதை உணர்ந்த இராவணனின் உள்ளுணர்வுகள் விபரிக்க முடியாத பதட்ட நிலையை அடைந்தன. இக்காட்சியினைக் கண்ட அவையிலுள்ள அனைவரும் ஒருகணம் செய்வதறியாது ஸ்தம்பித்து விட்டனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 30**

**சரியானவிடை:- ஊர்மிளை.**

1. பிறான்சிஸ் ஸ்ரான்லி. 24 ஏ, சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
2. க. கருணாகரன். மமா/ கொத் இறம்பொடை த.ம.வி.
3. K. வடிவேலு. வட்டகொட பஸார், லிந்துல்ல.
4. பி. தேவகி. சமாகிகம, நாவலப்பிட்டிய.
5. தேவசுந்தரி ஆறுமுகம். சோலையடி 3ம் கட்டை, உப்புவெளி, திருகோணமலை.

**போட்டி இல. 32** கேள்வி:- அசுரர்களுடனான யுத்தத்தில் பின்வாங்கித் தப்பியவன் யார்?

ஜுன்.01 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி—இல.32, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.

# நல்ல நல்ல காரணங்கள்

## காதிலை பூ கந்தசாமி

**தனது தோல்விக்கு தேர்தலில் நடைபெற்ற மோசடிதான் காரணம் என்று பேட்டி கொடுத்திருந்தார். அதனைப் பார்த்துவிட்டு ஜெயலலிதா மேலும் சொல்லக் கூடிய காரணங்களை தயாரித்து கொடுத்து உதவுகிறார் காதிலை பூ கந்தசாமி. பொருத்தமான காரணங்களாகப் பட்டால் சொல்லுங்கள் ஜெயலலிதாவுக்கு அனுப்பிவைத்துவிடலாம்.**

### காரணம் ஒன்று

**திருபர்:-** தமிழக தேர்தலில் நீங்கள் படு தோல்வி கண்டுள்ளீர்களே?

**ஜெயா:-** படு தோல்வி, படாத தோல்வி என்றெல்லாம் பத்திரிகைகள்தான் எழுதித்தள்ளுகின்றன.

**திருபர்:-** பத்திரிகைகளுக்கு உங்கள் மீது ஏன் இத்தனை கோபம்?

**ஜெயா:-** நான் ஒரு உண்மையை உங்களிடம் சொல்லப்போகிறேன். நான் நடிகையாக இருந்தபோது அவர்களது சினிமாச் செய்திகளுக்கு என் புகைப்படங்கள் போதிய அழகைத் தந்தன. ஜெயலலிதாவின் அழகான தோற்றம் நடுப்பக்கத்தில் என்று விளம்பரம் செய்தனர். வியாபாரம் பெருகியது. நான் அரசியலுக்கு வந்த பின்னர் அந்த வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போனது. சினிமாப் பக்கத்தையே மக்கள் பார்க்க விரும்பவில்லை. புதிய நடிகைகள் யாருமே அழகாக இல்லையென்பது அதன் காரணமாக இருந்திருக்கலாம். தங்கள் வியாபாரம் பாதிக்கப் பட்டதால் பத்திரிகைகள் என் மீது கோபப்பட்டன. அந்தக் கோபத்தை தேர்தலில் காட்டிவிட்டார்கள்.



### காரணம் இரண்டு

**திருபர்:-** தமிழக மக்களுக்கு உங்கள் மீது ஏன் இத்தனை வெறுப்பு?

**ஜெயா:-** (விழுந்து விழுந்து சிரிக்கிறார்)

**திருபர்:-** ஏன் அம்மா சிரிக்கிறீர்கள்?

**ஜெயா:-** நான் உங்களுக்கு சொல்லப் போகும் இந்த உண்மையை இதுவரை வெளியிடவில்லை. இப்போது வெளியிடுகிறேன். தமிழக மக்கள் என்மீது கொண்ட கரைகாணாத அன்பின் வெளிப்பாடுதான் இந்த செல்லமான தண்டனை.

**திருபர்:-** புரியும்படியாக சொல்லுங்கள் அம்மா.


**ஜெயா:-** தங்கள் அன்புச் சகோதரி கடந்த ஐந்தாண்டுகளாக அயராது உழைத்தாள். கண்ணயராது பாடுபட்டாள். உடல் நலம் கூடப் பாராது ஓய்வின்றி உழைத்தாள் என்பதை தமிழக மக்கள் அறியாதவர்களல்ல. இப்படியே போனால் என் உடல் நலம் கெட்டுவிடுமே என்று கனிவோடு சிந்தித்தார்கள். நேரில் சொன்னால் கேட்கமாட்டேன் என்பதால் தேர்தல் மூலமாக எனக்கு ஓய்வு தந்திருக்கிறார்கள். வெறுப்பு இருந்திருந்தால் என்னை பதவியில் இருக்க வைத்து ஓடாக தேயவைத்திருப்பார்கள் அல்லவா. இப்போது தெரிகிறதா தமிழக மக்கள் என்மீது வைத்துள்ள அன்பு.

**திருபர்:-** புதுமையான தண்டனை.

**ஜெயா:-** உங்கள் குழந்தை தூங்காமல் இருந்து பொம்மையோடு விளையாடிக் கொண்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள். பொம்மையை நைசாக வாங்கிக்கொண்டு குழந்தையை தூங்கவைப்பீர்கள்தானே. அதனால் குழந்தைமீது உங்களுக்கு வெறுப்பு என்றா அர்த்தம்?

**திருபர்:-** முதல்வர் பதவி என்பது நீங்கள் விளையாட தமிழ் மக்கள் தந்த விளையாட்டுப் பொம்மை என்றுதான் நினைத்துக்கொண்டு..

**ஜெயா:-** (இடைமறித்து) சேச்சே ஒரு உதாரணத்துக்காக சொன்னேன். எனக்கென்ன விளையாடும் வயதா?



### காரணம் மூன்று

**திருபர்:-** உங்கள் 'இமேஜ்' இத் தேர்தலில் வீழ்ந்து விட்டதாகச் சொல்லலாமா?

**ஜெயா:-** என் 'இமேஜ்' அப்படியேதான் இருக்கிறது. என் கட்சிக்காரர்கள் காலில் வீழ்ந்து சதி செய்துவிட்டார்கள்.

**திருபர்:-** என்ன? காலில் வீழ்ந்து சதி செய்து விட்டார்களா?

**ஜெயா:-** காலில் விழுங்கள் என்று நானாக யாருக்கும் சொல்லவில்லை. வகை தொகையில்லாமல் மள மளவென்று வீழ்ந்தார்கள்.

**திருபர்:-** நீங்கள் தடுத்திருக்கலாமே?

**ஜெயா:-** வேட்டி தடுக்கி விழுகிறார்களோ என்றுதான் முதலில் நினைத்தேன். பின்னர் தலைமை மீதுள்ள பக்தியால் பட்டு பட்டென்று விழுகிறார்கள் என்று நினைத்தேன். இப்போது தான் தெரிகிறது ஒரு பெரிய உண்மை.

**திருபர்:-** என்ன உண்மை?

**ஜெயா:-** கருணாநிதி கொடுத்த பணத்தை வாங்கி விட்டு வந்துதான் என் காலில் விழுந்திருக்கிறார்கள்.

**திருபர்:-** உங்கள் காலில் விழுவதற்கு அவர் ஏன் பணம் கொடுக்க வேண்டும்?

**ஜெயா:-** அங்கேதான் இருக்கிறது விஷயம். கருணாநிதி மகா மகா புத்திசாலி. என் காலில் விழுந்தவர்கள் எல்லாம் மக்களிடம் போய் என்ன சொன்னார்கள் தெரியுமா?

**திருபர்:-** என்ன சொன்னார்கள்?

**ஜெயா:-** வயதுக்கு மூத்தவங்க காலில் விழுறது தப்பில்லை என்றாங்க. இதே காரணத்தை நம்ம எஸ்.டி.எஸ் போன்றவங்களும் சொன்னா மக்கள் என்ன நினைப்பாங்க?

**திருபர்:-** தாத்தா எஸ்.டி.எஸ். உங்களைவிட வயதில் சிறியவர். அதனாலே உங்களுக்கு வயது ஏகமா ஏறிட்டுது என்று நினைப்பாங்க.

**ஜெயா:-** அதுதான். அதேதான்.

**திருபர்:-** நல்ல வேளை, டில்லிப் பெரியவர் உங்க காலிலே விழவில்லை.

**ஜெயா:-** கேலியா? மக்களிடம் என்னை வயதானவளாகக் காட்டி, என் இமேஜ் கெட்டுப்போக திட்டம் தீட்டியிருக்கிறார் கருணாநிதி. அந்த திட்டத்தை புரியாம மக்கள் ஏமாந்துட்டாங்க.

**திருபர்:-** கலைஞரும் வயதானவர்தானே?

**ஜெயா:-** அதுதாங்க என்னையும் தனக்கு சமமான வயதானவளாக் காட்டி 'சபாஷ் சரியான போட்டி' என்று நினைக்க வைத்திருக்காரு. அதனால இளைய தலைமுறையின் பொன்னானவாக்குகள் அவர்களின் பிரதிநிதியான எனக்கு கிடைக்காமப் போயிருக்கு.

**திருபர்:-** கடைசியாக நீங்க என்ன சொல்ல வார்றீங்க?

**ஜெயா:-** இளம்தலைவியான என்னை கிழம் தலைவியாக மக்களை நினைக்க வைத்தது மாபெரும் மோசடி! இதற்காக தமிழக மக்கள் தி.மு.க.வை மன்னிக்கவே மாட்டார்கள்.

### காரணம் நாலு

**திருபர்:-** காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்தும் இப்படி தோல்வி கண்டு விட்டீர்களே?

**ஜெயா:-** தோல்விக்கு காரணமே அதுதானே.

**திருபர்:-** நரசிம்மராவ்கூட நேரில் வந்து பிரசாரம் செய்தாரே?

**ஜெயா:-** தோல்வியை படு தோல்வியாக்கியவரே. அவர்தான்.

**திருபர்:-** அது எப்படி?

**ஜெயா:-** நரசிம்மராவையும்- என்னையும் ஒரே மேடையில் பார்த்த என் உடன்பிறவா தொண்டர்கள் கொதித்துப்போனார்கள். நான் இருக்க வேண்டிய இடத்தில் அவர் இருக்கிறாரே என்று நினைத்து விட்டார்கள். அடுத்த பிரதமர் ஜெயலலிதா என்று நரசிம்மராவ் அறிவித்திருந்தால் அவர்கள் பூரித்திருப்பார்கள். அவர் அறிவிக்கவேயில்லை. அதனால் இந்தக் கூட்டணிமீது உடன்பிறவா தொண்டர்கள் பற்றுக்கொள்ளவில்லை.

**திருபர்:-** நீங்கள் பிரதமரானால் அவர்...?

**ஜெயா:-** அடுத்துவரும் ஆந்திர சட்டசபைத் தேர்தலில் முதல்வராக போட்டியிட்டிருக்கலாமே.

**திருபர்:-** அவர்மீதுள்ள கோபத்தை மக்கள் ஏன் உங்கள்மீது காட்டினார்கள்?

**ஜெயா:-** நல்ல கேள்வி. இந்தத் தாத்தாவே பிரதமராக இருக்கும்போது, நம் தங்கத் தலைவி. புரட்சித்தலைவி வெறும் முதல்வராக வருவதா? தகுதிக்கு குறைந்த பதவியாச்சே என்று, என்மீது கொண்ட ஆழமான பாசத்தோடு தோற்கடித்திருக்கிறார்கள்.

**திருபர்:-** அப்படிப்பார்த்தால் உங்கள் அறிவுக்கு அகில உலக நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு பொதுச் செயலாளராகத் தான் போகவேண்டும்.

**ஜெயா:-** மெல்லப் பேசுங்கள். நமது உடன்பிறவா தொண்டர்கள் காதில் விழுந்தால், ஐ.நா.செயலாளரை ராஜினாமாச் செய்யுமாறு அறிக்கை கிறிக்கை விட்டுத் தொலைத்துவிடுவார்கள்.

### காரணம் ஐந்து

**திருபர்:-** தங்கள் வளர்ப்பு மகன் திருமணம் தான் தேர்தல் தோல்விக்கு முக்கிய காரணமா?

**ஜெயா:-** இல்லை. இல்லவே இல்லை. உங்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்லப்போகிறேன். வளர்ப்பு மகன் திருமணத்திற்கு சென்னையில் மட்டும் பந்தல் போட்டது பலருக்குப் பிடிக்கவில்லை. தமிழ்நாடு பூராவும் கல்யாண நாடாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒருவார காலத்திற்கு அரசாங்க விடுமுறை அறிவித்து வீதியெங்கும் விழாக் கோலம் காட்டியிருக்க வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன், ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா போன்றவர்களை அழைத்து என் பெருமையை அகிலம் அறியச் செய்திருக்க வேண்டும். இவையெல்லாம் என் உடன்பிறவா தமிழக மக்களின் ஆசைகள். நாட்டு நலன் கருதியும், சிக்கனம் கருதியும் ஆக ஒரு நூறு கோடியில் மட்டும் திருமணம் நடத்தினேன். இத்தனை சிக்கனம் எதற்கு என்று மக்கள் சினந்துவிட்டார்கள். ஆக, தோல்விக்கு காரணம் வளர்ப்பு மகன் திருமணத்தில் நான் காட்டிய சிக்கனம்தான்.

**யாவும் சுத்தமான கற்பனை.**



படிப்பகம்

www.padippakam.com

...Paper at the G.P.O. (QD/24/NEWS/96)


அருள் ஜீவலர்ஸ்

ARUL JEWELLERS

436331

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# ஒலிம்பிக் திருவிழா



ஒலிம்பிக் திருவிழா ஆரம்பமாகப்போகிறது. எதிர்வரும் ஜூலை 19ம்திகதி அமெரிக்க அட்லாண்டா நகரத்தில் திருவிழா ஆரம்பமாகும்.

இப்போதே அட்லாண்டா அமர்க்களப்படத் தொடங்கிவிட்டது. இலட்சக்கணக்கான பார்வையாளர்கள் குவியப்போகிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக இராணுவத்தையும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது அமெரிக்கா.

தங்க, வெள்ளி, வெண்கல அறுவடைக்காக வீரர்களும், வீராங்கனைகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். நம் நாட்டு வீரர்களும் அறுவடையில் வெட்டி வருவார்களா என்று பார்க்கலாம்.

படத்தில் இருப்பவர் ஒலிம்பிக் போட்டியில் சைக்கிள் ஓட்டத்தில் தங்கம் வென்ற கொலின் ஸ்ரேசென். பிரிட்டன் வீரர்.


அம்மன் ஜீவல்

AMMAN JEWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

332033

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# நாளை உனதே

இந்திய கிரிக்கெட் அணியின் அடுத்த கப்டன் டெண்டுல்கர் தான். அசாருதீனுக்கு பின்னர் டெண்டுல்கரைவிட்டால் வேறு கப்டன் இல்லை. அதனால் டெண்டுல்கருக்கு போட்டி கிடையாது.

அசாருதீனின் பதவியைக் கைப்பறறவேண்டும் என்ற ஆசையெல்லாம் டெண்டுல்கருக்குக் கிடையாது. கிடைக்க வேண்டிய நேரத்தில் தலைமைப்பொறுப்பு தன்னை நோக்கிவரும் என்பது டெண்டுல்கரின் அசையாத நம்பிகை.

டெண்டுல்கருக்கு இளம் வயது. அதனால் கப்டன் பொறுப்பைத் தூக்கி அவர் தோளில்வைப்பது சரியல்ல. உதவிக் கப்டன் பொறுப்பை அவர் தற்போது கவனித்துக் கொண்டிருந்தால் போதும் என்பது கிரிக்கெட்டில் அனுபவமுள்ளவர்களது கருத்து.

எப்படியோ டெண்டுல்கர் இல்லாத இந்தியக் கிரிக்கெட் அணியை நினைத்தே பார்க்க முடியாதளவுக்கு சகல நம்பிக்கைகளும் அவரது தோள்களில்தான் இப்போதே சுமத்தப்பட்டுள்ளது. அதனால், வந்தால் போ, போனால் போ பாணியில் அடித்தாட முடியாமல் அவரது கைகள் கட்டப்பட்டுள்ளன. சில சமயம் அதுதான் பலம். சில நேரங்களில் அதுவே பலவீனம்.



# அணியின் தூண்

தென் ஆபிரிக்கா அணியின் தூண்களில் ஒருவர் கேரி கேஸ்டன். வயது. 28. இடதுகை துடுப்பாட்டவீரர். 1996 உலகக் கிண்ணப் போட்டிதான் கேரி கேஸ்டனுக்கு முதலாவது உலகக் கிண்ணப்போட்டி. முதலிரவு மணமகன்போல துடிப்போடு களத்தில் இறங்கி மின்னி எடுத்துவிட்டார். 188 ரன்களை குவித்து உலகக் கிண்ணப் போட்டியில் அதிகபட்ச ரன்களை குவித்த சாதனையாளராகி அசத்தினார். உலகக் கிண்ணப் போட்டியில் முதல் ஆட்டத்திலேயே சதம் போட்ட 8 வீரர்களில் கேரி கேஸ்டனும் ஒருவர்.

தென்னாபிரிக்க அணியில் ஒரு நாள் போட்டிகளில் அதிகபட்ச ரன் குவித்த சூரரும் இவர்தான். தென்னாபிரிக்க வீரர் டெவ் கலகன் 167 ரன்கள் அடித்து அணியில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னர் 35 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2 சதம் போட்டிருந்தார். மொத்தம் 1143 ரன்கள் எடுத்திருந்தார்.

தென்னாபிரிக்க அணி மட்டுமல்ல, கிரிக்கெட் ரசிகர்களும் அவரிடமிருந்து மேலும் எதிர் பார்க்கிறார்கள்.



# கணை விடும் கனை



படத்தில் கணை விடும் வீராங்கனை ஜக்குலின்ஜொய்னர். அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஒலிம்பிக் போட்டிகளில் சாதனை படைத்து தங்கங்களை அறுவடை செய்தவர்.

1988இல் ஒலிம்பிக் போட்டிகள் நடந்தபோது உன்னால் முடியுமா? என்று சிலர் கிண்டலாய் கேட்டனர். அதனையே சவாலாக ஏற்றுக் கொண்டு களத்தில் குதித்து இவர் ஏவிய கணை சென்ற தூரம் 45.66 மீட்டர்.

தன்னம்பிக்கையும், பயிற்சியும், முயற்சியும் இருந்தால் போதும் வெற்றி தேடிவரும் என்பது இவரது தாரக மந்திரம்.

முரசின் பட்டுச் சேலைப் பரிசப் போட்டியில் அதிஷ்டசாலிகளில் ஒருவர். ரி.விமலேஸ்வரி. வட்டக்களி, சிலாபம். பட்டுச்சேலைப் பரிசப் போட்டியில் பங்கு கொண்டு பிரமிக்க வைக்கும் பல்லாயிரம் வாசகிகள் சார்பாக வாழ்த்துக்கள். பரிசு பெறும்போது கிடைக்கும் மகிழ்ச்சியே தனிதானே!

# மனதுக்குள் மத்தாப்பு



# தடம் புரண்ட காதல்



➡ பிரிட்டிஷ் இளவரசி டயானா வெட்கப்பட்டுக் கொண்டிருப்பது ஜேம்ஸ் ஹெவிட்டிடம். ஒரு விளையாட்டுப் போட்டியில் நடந்த சந்திப்பு இது. இதனை வெளியிட்ட பத்திரிகைகள் டயானா ஜொள் விடுவதை வைத்தே இருவருக்கும் இடையே லவ்வுதான் லவ்வு என்றன. முதலில் இருவருமே மறுத்தார்கள். இப்போது இருவருமே காதல் மட்டுமல்ல அதையும் தாண்டியும் போய்வந்தோம் என்று ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

இந்தக் காதலால் லாபம் ஜேம்ஸ் ஹெவிட்டுக்குத்தான். தான் பயிற்றுவிக்கச் சென்றது குதிரையேற்றம், பயிற்றுவித்ததோ வேறு பயிற்சி. அது எப்படி, எங்கே என்றெல்லாம் விளக்கி விபரித்து சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் மனுஷன்.

# கலைத் தோட்டம்

வீட்டுச் சுற்றுப்புறம் இதமாகவும், அழகாகவும் இருந்தால் மனதுக்கும் சுகம்தான்.

வீட்டுச் சூழலில் ஈடுபாடு காட்டுவதானால் புல் வளர்க்கலாம். பூங்கன்றுகள் வளர்க்கலாம். அதனால் உடலுக்கும் பயிற்சி. உள்ளத்துக்கும் மகிழ்ச்சி.

படத்தில் பாருங்கள் பூங்கன்று வளர்த்தாலும் அதனை கலை உணர்வோடு மனித முகம்போன்ற தோற்றத்தோடு அமைத்துள்ளார்கள்.

கல்லிலே மட்டுமல்ல பூங்கன்றிலே கூட கலை வண்ணம் காணலாம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் மட்டுமல்ல, அழகு சாதனமும்தான் என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறதல்லவா.

வீட்டைச் சுற்றி இடவசதி உள்ளவர்கள் இப்படி அழகான முயற்சிகளில் இறங்கலாமே! வசதி எப்படி?





படிப்பகம்